
இலவச இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்!

கல்கி

KALKI 13.9.98 ரூ. 4.50



அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ்

வாழ்வில் முடிவெடுத்த அந்தத்
தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி மற்றும் பிற இடங்களில்
அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS

26, Ranganathan Street, IInd Floor, T. Nagar, Madras - 600 017.
Phone: 4340224/4340210/-4342667. Fax: 044-2344333
E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesdebuilders.com



வை.கோ சிறப்புப் பேட்டி

"நான் கலைஞரைச் சந்திக்கும் வாய்ப்பு இருக்கிறது!"

பேட்டியை முடிக்கும்போது இரவு மணி 12. செப்டெம்பர் 15ம் தேதி பேரணிக்காக இரவும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கிறார் வைகோ. வர இருக்கும் வட இந்தியத் தலைவர்களின் பேச்சுக்களை யார் யார் மொழி பெயர்ப்பது என்பது முதல், கோஷம் போட்டு தொண்டை வறண்டு போகும் தொண்டனுக்குத் தண்ணீர் சப்ளை வரை எல்லா விஷயங்களையும் கவனமாகத் தமது தோழர்களுடன் விவாதிக்கிறார். "இந்தப் பேரணி எங்கள் ஆறேழு மாத உழைப்பின் கனி!" என்கிறார்...

கேள்வி: *தி.மு.க.விலிருந்து நீங்கள் வெளியேற்றப்பட்டு தனி இயக்கம் கண்டபோது 'ஒட்டு அ.தி.மு.க' என்று தி.மு.க.வினர் சொன்னார்கள். இப்போது தி.மு.க.வில் நீங்கள் மீண்டும் இணையப் போகிறீர்கள் என்ற வதந்தி எழுந்துள்ளது. முற்றிலும் எதிர்மறையான இது போன்ற பேச்சுக்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

வைகோ: 'தி.மு.க.வுக்குத் தான் என் வாழ்க்கை அர்ப்பணம்' என்ற உணர்வோடு தான் மாணவப் பருவத்தில் என் அரசியல் துவங்கியது. ஆனால் கனவிலும் காண முடியாத, கற்பனைக் கெட்டாத விதமாக கொடும் பழி சுமத்தப்பட்டு, தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்டேன். எனக்காக நீதி கேட்டு உயிர் துறந்த ஐந்து ஏந்தல்களின் மரணத்தில் உதயமான இயக்கம்தான் ம.தி.மு.க. கடந்த ஐந்து வருட காலமாக, அபாண்டமான பழிகள்; தாங்க முடியாத அவதூறுகள் ஆகியவற்றை எதிர்த்து, கடுமையான போராட்டத்தை நாங்கள் நடத்தி வந்திருக்கிறோம். அ.இ.அ.தி.மு.கவை கடுமையாக எதிர்த்து வந்த போதும்

கல்கி இன்டர்நெட் முகவரி: www.kalkiweekly.com ஈ மெயில்: kalki@md2.vsnl.net.in

356-வது பிரிவைப் பயன்படுத்தி, அதைக் கலைக்கக் கூடாது என்று சொன்னதற்காக, 'பணப் பெட்டிக்கு நாங்கள் விலை போய் விட்டோம்' என்றார் கலைஞர். கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, மத்திய அரசு, தி.மு.க அரசை 356-வது பிரிவைப் பயன்படுத்தி கலைக்கக் கூடாது என்று நான் சொன்னதால் 'மாறனைச் சந்தித்து நான் தி.மு.க.வில் ஐக்கியமாகி விட' இருப்பதாக சில அக்கறையுள்ள சக்திகள் விஷமப் பிரசாரம் செய்தன. அது கடைந்தெடுத்த பொய்ப் பிரசாரம். லட்சக்கணக்கான கழகக் கண்மணிகளின் மாறாத நெஞ்சுரம் காரணமாகவும், மகத்தான தியாக உணர்விலும், நாங்கள் இந்த ஐந்து வருட காலத்தில் ஆழமாகக் காலூன்றி இருக்கிறோம். ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைக்கிறோம்.

கேள்வி: உங்கள் தோளோடு தோள் நின்ற தோழர்களாக இருந்த மதுராந்தகம் ஆறுமுகம், பொன். முத்துராமலிங்கம் ஆகியோர் ம.தி.மு.க.வில் இருந்து விலகியபோது எப்படி உணர்ந்தீர்கள்?

வைகோ: துரோக ஈட்டிகளை என் முதுகில் பாய்ச்சத் தயாராகத் தங்கள் கரங்களில் மறைத்து வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேதான் அவர்கள் வெளியேறிய காலம் வரை வேற்றுமையுணர்வு காட்டாமல் அவர்களிடம் பழகி வந்திருக்கிறேன். தம்மோடு இருந்து அப்பத்தை பகிர்ந்து கொள்ளும் 12 பேரில் ஒருவர் தம்மைக் காட்டிக் கொடுப்பான் என்று யேசு பெருமான் அவர்களிடத்திலேயே சொன்னார். நான் மிகச் சாதாரணமான ஒரு மனிதன். ஆனாலும் யேசுவின் வரலாறு 'உலகம் இப்படிப்பட்டது' என்ற போதனையை எனக்குத் தந்திருக்கிறது. என்னை விட்டு அவர்கள் சென்றாலும் அவர்கள் கழகத்தில் இருந்து ஆற்றிய பணிக்காக நன்றி பாராட்டினேன்.

கேள்வி: அ.தி.மு.க.வையும், ஜெயலலிதாவையும் கடுமையாக எதிர்த்து வந்த நீங்கள், அந்தக் கட்சியுடன் உடன்பாடு கண்டது குறித்து...

வைகோ: தர்மத்தின் வடிவமானவர் என்று மகாபாரத இதிகாசத்தால் வர்ணிக்கப்படும் தர்ம புத்திரரே குருஷேத்திர போர் முனையில், நெறிகளுக்கு மாறாக சமரசம் செய்துள்ளார். அரசியல் என்பது சூழ்ச்சியின் இருக்கை என்று கம்பர் எழுதியுள்ள வாசகங்கள் காலத்துக்கும் பொருந்தும். இதனை ஒதுக்கித் தள்ளி விட்டு யாரும் அரசியல் நடத்த முடியாது. உங்கள் கேள்விக்கு இதுதான் பதில்.

கேள்வி: திராவிட இயக்கக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறான பா.ஜ.க.வுடன் நீங்கள் கூட்டணி வைத்தது முரண்பட்ட ஒன்று இல்லையா?

வைகோ: மிகத் தீவிரமான பரிசீலனைக்குப் பிறகு, ஆழமாக விவாதித்த பின்னர், நிகழ்கால அரசியலை சரியாகக் கணிப்பீடு செய்து நாங்கள் எடுத்த முடிவுதான் பா.ஜ.க.வுடனான தேர்தல் கூட்டணி. தேர்தலுக்கு முன் நெல்லை மாநாட்டில் "மதச் சார்பற்ற கொள்கைக்கு மாறாக பா.ஜ.க செயல்பட்டால் அதை எதிர்க்கும் முதல் கோஷம் என்னுடையதாக இருக்கும்" என்று பேசினேன். அதற்கு பதிலளிக்கும் விதமாகப் பேசிய அத்வானி, பா.ஜ.க. வரலாற்றிலேயே முதன் முதலாக, அரசியல் சட்டத்தின் மதச் சார்பற்ற தன்மையைத் தான் ஏற்பதாகச் சொன்னார். அதன் பிறகு ஆட்சி அமைந்தது. தமிழ் மொழியை ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குவது, இட ஒதுக்கீடு, நதி நீர்ப் பிரச்னை ஆகியவற்றில் ஒரு இணக்கமான தீர்வு காணப்படும் விதமாக அந்த பிரச்னைகள் தேசிய செயல் திட்டத்தில் இடம் பெற்றன. தனது தீவிரமான அடிப்படைக் கொள்கைகளை பா.ஜ.க செயல் திட்டத்தில் சேர்க்கவில்லை! இந்த நிலையில் பா.ஜ.க.வுக்கு எங்கள் ஆதரவு தொடர்கிறது.

கேள்வி: பா.ஜ.க அரசுக்கான ஆதரவை மறுபரிசிலனை செய்வதாக உங்கள் கூட்டணித் தலைவியான ஜெயலலிதா சொல்லியிருக்கிறாரே?

வைகோ: இப்போதும் சொல்கிறேன். அ.இ.அ.தி.மு.க ஆதரவை வாபஸ் வாங்காது. பா.ஜ.க அரசு நீடிக்கும். தம் மீது போபர்ஸ் கறையுள்ள சோனியா காந்தி, அந்தக் கறையைப் போக்கி விட்டு அரசியலில் வலம் வரட்டும். அதன் பின்னர் ஆட்சி அமைக்கலாம். பா.ஜ.க அரசு ஒன்றே இப்போதிருக்கும் சூழலில் நிலைத்து நிற்கும் சாத்தியம் கொண்டது.

கேள்வி: ஜெயலலிதாவின் இப்போதைய அரசியலை பிளாக்மெயில் அரசியல் என்றும்... இல்லை... உண்மையாகவே தமிழகத்தின் நலன்களுக்காகக் குரல் கொடுக்கிறார் என்றும் சொல்கிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

வைகோ: எங்களைப் பொறுத்தவரை தோழமை உணர்வோடு அ.தி.மு.க.வோடு பழகி வந்திருக்கிறோம். தற்போது வேறு எதுவும் சொல்வதற்கில்லை. கூட்டணி உடைவதற்கு நாங்கள் காரணமாக இருக்க மாட்டோம்.

கேள்வி: உங்கள் இயக்கம் வலிமையாக உள்ள தென் மாவட்டத்தில் கலைஞர் அண்ணா பிறந்த நாள் விழா நடத்துவதும், நீங்கள் சென்னையில்- தி.மு.க கோட்டையில் பேரணி நடத்துவது பற்றியும் என்ன சொல்கிறீர்கள்?

வைகோ: மூன்று இடங்களில் அண்ணா

வின் பிறந்த நாள் கொண்டாடப்படுவது மகிழ்ச்சியான விஷயம்தான் என்று எங்கள் செய்தித் தொடர்பாளர் சொல்லியிருக்கிறார். அதுதான் என் கருத்தும். நான் இந்த விஷயத்தைப் பாஸிடிவ்வாகப் பார்க்கிறேன். தமிழக அரசியல் அண்ணாவை மையமாக வைத்துச் செயல்படுவதுதானே! ஆனால் நெல்லையில் கலைஞர் விழா நடத்துவதும், சென்னையில் நாங்கள் நடத்துவதும், திருச்சியில் அ.இ.அ.தி.மு.க நடத்துவதும் காலத்தின் கட்டாயம் என்றும் சொல்லலாம். ஷேக்ஸ்பியர் சொன்ன dramatic irony என்பது இதுதானோ!

கேள்வி: கலைஞரை கடைசியாகச் சந்தித்தது எப்போது?

வைகோ: 1993 செப்டெம்பர் 15ம் தேதி தான் கலைஞரை காங்கேயம் கூட்டத்தில் கடைசியாகச் சந்தித்தேன். ஐந்து வருடத்திற்குப் பிறகு, வரும் பதினைந்தாம் தேதியன்று ஏர்போர்ட்டில் பிரதமரை வரவேற்கும் போது, மீண்டும் பார்க்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைப் பெரியதாக நினைக்கவில்லை. அதற்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது.



கேள்வி: காவிரிப் பிரசனையில், தமது கூட்டணிக் கட்சிகளின் கருத்தையும் கேட்காமல் பிரதமர் ஒரு உடன்படிக்கைக்குக் காரணமாக இருந்து விட்டார் என்று கருதுகிறீர்களா?

வைகோ: இரண்டு மாநில அரசுகள் ஒப்புக் கொண்டு விட்டதால் ஒரு நல்லெண்ண அடிப்படையில் பிரதமர் செயல்பட்டிருக்கிறார். ஏதோ தீர்வு ஏற்பட்டு விட்டதாக நம்மவர்கள் வரவேற்கிறார்கள். இது உண்மை அல்ல. கலைஞர் தமிழகத்தின் நலன்களை விட்டுக் கொடுத்து விட்டார். இந்த உண்மை விரைவில் மக்களுக்குப் புரியும். இந்த விஷயத்தில் என் கருத்துக்களை பிரதமரிடம் நேருக்கு நேர் எடுத்துச் சொல்லும் வாய்ப்பு இதுவரை வரவில்லை.

கேள்வி: புலிகளுக்கு ஆதரவு கொடுப்பதாக வாஜ்பாய் உறுதியளித்திருப்பதாகவும், அதன் காரணமாகவே நீங்கள் பா.ஜ.க ஆதரவில் உறுதியாக இருப்பதாகவும் சுவாமி சொல்கிறாரே!

வைகோ: கடைந்தெடுத்த பொய்களுக்குப் பதில் சொல்ல முடியாது. அவரை பொதுமக்கள் ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை. ஆல கால விஷத்தை அல்லவா வார்த்தைகளாக்குகிறார்.

கேள்வி: உங்கள் தொண்டர்கள், மத்திய அரசில் ம.தி.மு.க இடம் பெற வேண்டும்; அப்போதுதான் இயக்கப் பணிகளை இன்னமும் செம்மையாகச் செய்ய முடியும் என்கிறார்கள். நீங்கள் அமைச்சரவையில் சேர்வதில் என்ன பிரச்னை?

வைகோ: ஜனநாயகத்தில் கருத்துச் சுதந்தரத்திற்குக் கட்டாயம் இடம் உண்டு. மிகத் தீவிரமாக விவாதித்த பின்னர் தான் அமைச்சரவையில் சேர்வதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது. அதை மறு பரிசீலினை செய்யும் நிலை இதுவரை ஏற்படவில்லை. அப்படி ஏற்பட்டால் எங்கள் கழகத்திலுள்ள ஐவர் குழு கூடி மீண்டும் விவாதிக்கும். ஆனால் அமைச்சரவையில் இடம் பெறுகிறோமோ இல்லையோ... பா.ஜ.க அரசுக்கு எங்கள் நிபந்தனையற்ற ஆதரவு தொடரும். என்னைப் பொறுத்த வரை மத்தியில் அமைச்சராக ஒரு போதும் விரும்ப மாட்டேன். எனது இந்த நிலைப் பாட்டை பிறர் புரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்.

பேட்டி: **ப்ரியன்**

வாழ்க்கைச் சிறுகதை!

குஜராத் வருமான வரி இலாகாவில் பியூனாக இருந்த ஸ்வரூப் ஷர்மா அதிகாரிகளுடன் ரெய்டுக்குப் போகும் இடங்களின் செல்வச் செழிப்புகளைப் பார்த்து தானும் எப்படியாவது வாழ்க்கையில் முன்னேறத் துடித்தான். தன் பெயரின் பின்னால் பல டாக்டர் பட்டங்களைச் சேர்த்துக் கொண்டு பிரபல 'செக்ஸ் டாக்டர்' ஆனான். எப்படியோ பிரபலமாகி பணக்காரர்களிடமிருந்து ஆளுக்குப் பத்தாயிரம் ரூபாய் வரை வசூலித்தான். புதிய வீடுகள், படகுக் கார்கள், பல ஆடம்பர வசதிகளை அனுபவித்தவன் ஒரே ஒரு தவறு செய்தான். தன் புதிய அந்தஸ்துக்குப் பழைய மனைவி லாயக்கில்லை என்று தீர்மானித்து, அவளை விலக்கிவைத்து ஒரு நாகரிக நாரீமணியைத் திருமணம் செய்து கொண்டான். அதனால் வெகுண்ட அவனுடைய மகள் தன் தகப்பனார் 10வது வரை மட்டுமே படித்த போலி டாக்டர் என்று புகார் செய்ய, பிரபல டாக்டர் இப்பொழுது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.

நன்றி: ''தி வீக்''

தகவல்: அ. ஷண்முகசுந்தரம்

அமரர் கல்கி நூற்றாண்டு சிறப்புப் போட்டிகள்!

ரூ.60,000

பரிசுத் திருவிழா!

நாவல் போட்டி : பரிசு : ரூ. 25,000

● கல்கியில் 26 வாரங்கள் தொடராக வெளியிடக்கூடிய அளவிலான நாவலாக இருக்க வேண்டும்.

● சரித்திர நாவல், சமூக நாவல், மர்ம நாவல், விஞ்ஞானப் புதினம் (Science Fiction) என எதுவானாலும் அனுப்பி வைக்கலாம்.

● தரம் மட்டுமே கருத்தில் கொண்டு பரிசு முடிவு செய்யப்படும்.

கடைசி தேதி : மார்ச் 15, 1999.

மினி தொடர் கதைப் போட்டி: பரிசு ரூ. 10,000

● கல்கியில் நான்கு வாரங்கள் வெளியிடக்கூடிய மினி தொடர்கதைகள் வரவேற்கப்படுகின்றன!

● மின்னல் வேகத்தில் முன்னேறும் கதையாக இருக்க வேண்டும்.

● ஒவ்வொரு வாரத்துப் பகுதியும் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.

● தலையைப் பிய்த்துக் கொள்ளும் அளவுக்கு சஸ்பென்ஸ் இருக்க வேண்டும்!

● மர்மக் கதையாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை!

கடைசி தேதி : டிசம்பர் 15, 1998.

இசைப் பாடல் போட்டி: பரிசு ரூ. 10,000

● உள்ளத்தை உருக்கி வார்த்தைகளில் வடிக்கும் இசைப் பாடல்கள் பரிசீலனைக்கு வரவேற்கப்படுகின்றன.

● பக்திப் பாடலாகவோ, தேச பக்திப் பாடலாகவோ, சமுதாய விழிப்புணர்வு தேமாகவோ இருக்கலாம். இவ்விதழில் கல்கி கலெக்ஷன் பகுதியில் பிரசுரமாகியுள்ள அமரர் கல்கியின் 'தெய்வத் தமிழ் நாட்டினிலே',

இசைப் பாடலுக்குச் சிறந்த உதாரணம்.

● கீர்த்தனை வடிவில் பாடல் அமைய வேண்டிய கட்டாயமில்லை.

● எழுத்து வடிவில் பாடலை அனுப்பினால் போதுமானது. இசையமைத்து அனுப்ப வேண்டாம்.

கடைசி தேதி : ஜனவரி 15, 1999.

நகைச்சுவைப் பயணக் கட்டுரைப் போட்டி : பரிசு ரூ. 10,000



● உள்நாட்டு, வெளிநாட்டு, ஏன் பக்கத்து ஊர்ப் பயணம் குறித்தும் எழுதலாம்.

● இடைவிடாது சிரிக்கும்படி கட்டுரை அமைய வேண்டும்.

● பயணக் கட்டுரைக்கான இதர இலக்கணங்கள் – வரலாறு, பூகோளக் குறிப்புகள், வர்ணனைகள், மக்கள், இயற்கை, பழக்க வழக்கங்கள் யாவும் அமையப் பெற வேண்டும். நகைச்சுவையுடன் தகவல்களைப் பின்னித் தர வேண்டும்.

● இக் கட்டுரை கல்கியில் 5 முதல் ஆறு பக்கங்களுக்குள் (படங்கள் உள்பட) அடங்கும்படி அமைய வேண்டும்.

கடைசி தேதி : ஜூன் 10, 1999.

வாசகர்களுக்கான போட்டி: பரிசு ரூ. 5,000

இந்த வாரம் தொடங்கி கல்கி கலெக்ஷன் பகுதியை உன்னிப்பாகக் படித்து வாருங்கள்.

பொன்னியின் செல்வன் நீங்கலான பகுதியில் இடம்பெறும் கட்டுரை/கவிதைகளுள் உங்களை அதிகம் கவர்ந்தது எது? ஏன்...? என்பதை ஒரு பக்க விமர்சனமாக எழுதி அனுப்புங்கள்.

● மே, 1999 இறுதி வரையிலான கல்கி கலெக்ஷன் பகுதியைத் தொடர்ந்து படித்து, பிறகு சிறந்த ஒன்றைத் தேர்வு செய்து விமர்சனம் எழுதுங்கள்.

● விமர்சிக்கப்படும் கட்டுரை இடம்பெற்றுள்ள இதழ் தேதியைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

● விமர்சனம் கல்கியில் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படி அமைய வேண்டும்.

கடைசி தேதி : ஜூன் 20, 1999.

அனுப்பப்படும் அனைத்துப் படைப்புகளும் 'சொந்த கற்பனையே' என்ற உறுதிமொழியுடன் அனுப்பப்பட வேண்டும்.

ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு பரிசு மட்டுமே வழங்கப்படும்!

அனைத்துப் போட்டிகளிலும் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு செப்டெம்பர் 9, 1999 – அமரர் கல்கி நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும்.



• சச்சின் : அதிருப்தி!



• சிம்சன் : அற்புதமான பயிற்சி



• உமா பாரதி: "அன்பான எச்சரிக்கை"

கிரிக்கெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்படுவது!

பதினைந்து நாட்கள் சென்னையில் நடந்த கிரிக்கெட் பயிற்சி முகாமுக்காக அகில இந்திய நட்சத்திரங்கள் யாவரும் இங்கே ஆஜர். பயிற்சி முகாம் பற்றிய மேலோட்டமான விவரங்களை, நாள் வார இதழ்கள் சிலவற்றில் பார்த்திருப்பீர்கள். மலேஷியா (காமன்வெல்த் போட்டி) செல்ல ஒரு அணியும் கனடா (சகாரா கோப்பை) செல்ல ஒரு அணியும் தேர்வாகிக் கிளம்புவதற்குள் தான் எத்தனை பாலிடிக்ஸ்! சில exclusive தகவல்கள் இங்கே!

● கேம்ப் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கும் கிரிக்கெட் போர்டுக்கும் சரியான தகராறு. மலேஷிய காமன்வெல்த் போட்டிக்கு இந்தியா தனது 'ஏ' அணியைத் தான் (இரண்டாம் நிலை வீரர்கள்) அனுப்புவதாக இருந்தது. வழக்கமான இந்திய அணியை கனடா அனுப்புவதாக உத்தேசம். ஆனால், காமன்வெல்த் போட்டி சோடை போய் விடக் கூடாது என்பதற்கு அரசியல் ரீதியிலான காரணங்கள் சொல்லப்பட்டு, வலிமையான அணியையே மலேஷியா அனுப்ப வேண்டும் என்று பிற நாடுகள் பல, இந்திய அரசுக்குப் பிரஷர் கொடுத்தனவாம். அதனால்தான் ஜடேஜா தலைமையில் டெண்டுல்கர் உட்பட பல ஸ்டார்கள் கொண்ட அணி மலேஷியா போகிறது.

● "மலேஷியா செல்லும் அணியில் டெண்டுல்கர் கண்டிப்பாக இருந்தேயாக வேண்டும்" என்று கிட்டத்தட்ட மிரட்டல் பாணியிலான ஓர் உத்தரவு, விளையாட்டுத் துறை அமைச்சர் உமா பாரதியிடமிருந்து போர்டுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. தமது பேச்சைக் கேட்காவிட்டால் கனடா செல்லும் அணிக்கு விசா கிடைக்காமல் போகலாம் என்கிற 'அன்பு எச்சரிக்கை' வேறு!

● கனடா செல்ல இயலாமல், அரசியல் நிர்ப்பந்தங்களால் மலேஷியா செல்ல வேண்டியிருப்பது பற்றி மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார் டெண்டுல்கர். காரணம், கணிசமான 'லகரங்கள்' இழப்பு என்பது தான்! இதனால், அணித் தேர்வு முடிந்ததும் மூட் அவுட் ஆகி, தமது அறையில் யாருடனும் பேசாமல் 'உம்'மென்று அமர்ந்து விட்டார் சச்சின்.

● இந்த ஏற்பாட்டால் சச்சினை விட அதிக இழப்பு, இந்திய கிரிக்கெட் போர்டுக்குத்தான். இந்திய முதல் தர அணியுடன் பாகிஸ்தான் மோதும் சகாரா போட்டிகளை மூன்று வருடங்களுக்கு, கணிசமான தொகைக்கு ஒப்பந்தம் செய்திருந்தது, 'World Tel' என்கிற ஒளிபரப்பு நிறுவனம். இப்போது அனைத்து முதல் தர வீரர்களும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரு இடங்களுக்கும் அனுப்பப் படுவதால் 'World Tel' நிறுவனத்துக்கு என்ன பதில் சொல்வது என்று சிண்டைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது போர்டு. நஷ்டம், மிக அதிகமாயிருக்கும் என்று சொல்லப்படுகிறது.

● தேர்வாளர்களின் வழக்கமான குளறுபடி உற்சவத்துக்கும் குறைவில்லை. சகாரா கோப்பைப் போட்டிக்கு ஜே.பி.யாதவ் என்கிற உ.பி. வீரரைத் தேர்வு செய்கிற உத்தேசத்தில்தான் அனைத்துத் தேர்வாளர்

களும் இருந்தனர். ஆனால் அறிவிப்பு செய்யும்போது, ஏனோ ஜோதியாதவ் (இவர் ம.பி. வீரர்) என்கிற பெயரை அறிவித்து, மிகவும் எதிர்பார்த்திருந்த ஜே.பி. யாதவின் கனவைக் கலைத்து விட்டார்கள்!

"ஜோதி யாதவோ, ஜே.பி. யாதவோ - இருவரும் கிரிக்கெட் தெரிந்தவர்கள் என்கிற அடிப்படைத் தகுதியாவது உள்ளவர்கள். நல்லவேளை, லாலு யாதவையோ, முலாயம் சிங் யாதவையோ தேர்ந்தெடுக்காதவரை சந்தோஷம்" என்று கமெண்ட் அடித்தார் ஒரு பிரபல முன்னாள் கிரிக்கெட்டர்.

● இப்போதுள்ள தேர்வுக் குழு, வீரர்களைத் தேர்ந்தெடுப்பது இதுவே கடைசி முறை. இம்மாத இறுதியில் வேறு தேர்வுக்குழு அமைக்கப்பட்டு விடும். ஆகவே, தே.குழு உறுப்பினர் ஒவ்வொருவரும் தம் மாநில வீரர்களை இயன்றவரை அணியில் நுழைத்து விடப் பெரு முயற்சி செய்து, ஓரளவு வெற்றியும் பெற்று விட்டார்கள்.

● வழக்கம்போல் இம்முறையும் தமிழகம் புறக்கணிக்கப் பட்டது. நடந்த ஒன்பது பயிற்சி ஆட்டங்களில் ஏழில் சதமடித்த (வேறு யாரும் செய்யாத சாதனை) சரத், காரணமே இன்றி நிராகரிக்கப்பட்டிருக்கிறார். தமிழர்கள் டீ.வி.யில் கிரிக்கெட் மாட்ச் பார்த்தால் மட்டும் போதும் என்கிற நல்ல எண்ணம், தேர்வாளர்களுக்கு.

இந்தக் கேம்பில் பாராட்டும்படியான ஒரே விஷயம், 62 வயதான பாபிசிம்சனின் அசுரப் பயிற்சி! வீரர்களைப் பிரமாதமாக ட்ரில் வாங்கிய சிம்சன். ஒவ்வொரு வீரரையும் (30 பேர்) தனித்தனியே கவனித்து, மாற்றங்கள் சொல்ல, Single run எடுப்பதிலுள்ள டெக்னிகல் சாமர்த்தியங்களை விளக்கி மிக அற்புதமாகச் சொல்லிக் கொடுத்தார். "20 பேர்களுக்கு மேல் அனுப்பாதீர்கள். என்னால் பயிற்சி தர முடியாது" என்று அவர் மறுத்தும் போர்டு 30 வீரர்களைப் பயிற்சிக்கு அனுப்பியது. ஆனால் சிம்சன் ஒரு சிறு முகச்சுளிப்புக் காட்ட வேண்டுமே! ம்ஹூம்!

— நந்தினி

படங்கள்: உமாமணி

காதில் விழுந்தவை

● வளர்ப்பு மகன் சுதாகரன் நற்பணி மன்றம் நடத்தும் பத்திரிகையில் ஜெ.வை தாக்கும் தொனியில் செய்திகள் வெளியாகின்றன. சமீபத்தில் நாம் சந்தித்த சினிமா உலகத் தோழர் ஒருவர் முற்றிலும் வேறுவிதமான தகவலைச் சொன்னார். "கருத்து வேறுபாடு, தொடர்பு கிடையாது என்பதெல்லாம் காதுல பூ சமாச்சாரம். வழக்குகளில் மாட்டிக் கொண்டுள்ளபடியால், புலனாய்வு ஏஜென்சிகளின் கவனத்தை திசைதிருப்புவதற்காகத்தான் இந்த 'கசப்பு' நாடகமாம். சமீபத்தில் பிறந்த நாள் விழாவின் போது 'சின்ன எம்.ஜி.ஆர்.' என்று தம்மைப் பிரமாதமாக விளம்பரப்படுத்திக் கொண்டதைப் பற்றி ஜெ.விடம் மூத்த தலைவர் ஒருவர் அதிருப்தியை நயமாகத் தெரிவித்த போது, அவர் வளர்ப்பு மகனைக் கண்டிக்கும்விதமாக எதுவும் சொல்லவில்லையாம்.

என்ன செய்யப் போகிறார் ஆர்க்காட்டார்?



● பிரபல இந்தி நடிகை மீனாகுமாரிக்கு ஒரு வளர்ப்பு மகள் உண்டு. அவள் 'இண்டஸ் டெலிவிஷன்' என்ற தொலைக்காட்சி சேனலைத் துவக்க இருக்கிறார். சென்னையைச் சேர்ந்த என்.ஆர்.ஐ. ஒருவர் 300 கோடி ரூபாய் புரட்டிக் கொடுத்திருக்கிறார். இந்தச் செய்தியில் என்ன விசேஷம் என்கிறீர்களா? "இந்தியில் மட்டுமல்லாமல் தமிழிலும் துவங்குங்கள். நான் கைகொடுக்கிறேன்!" என்று பேச்சு வார்த்தையைத் துவக்கியுள்ளார், ஷாக்கடிக்க வைத்த முன்னாள் அமைச்சர் ஒருவர்.

● கலைஞர் சிக்கலில் உள்ளார். விளம்பர போர்டுகள் விவகாரத்தில் உயர்நீதி மன்றக் கட்டளைப்படி ஏற்கெனவே ஆர்க்காடு வீராசாமி மீது குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை செய்து வருகிறார்கள். இப்போது மேலும் புதிதாக, மருத்துவக் கல்லூரி சேர்க்கை சம்பந்தமாகவும் திருவனந்தபுரம் நபர் ஒருவர் ஏமாற்றப்பட்ட விவகாரம் தொடர்பாகவும் ஆர்க்காடு வீராசாமி உட்பட ஐந்து பேர் மீது குற்றப்பிரிவு போலீஸால் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. "நீங்கள் ராஜினாமா செய்வது நல்லது" என்று ஆர்க்காட்டுக்கு பக்குவமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் சமீபத்தில் யாரையும் சந்திக்காமல் இரண்டு நாள் மன உளைச்சலில் இருந்தாராம் ஆர்க்காடு. "கட்சியிலும் மனிதர் பொருளாளராக இருப்பதால் அவசரப்பட்டு அவரைச் சங்கடப்படுத்துவது சரியாக வராது!" என்று கட்சியின் மூத்த தலைவர்கள் ஆலோசனை சொல்கிறார்களாம்.

– தில்லப்பா

கரும்பு ஆராய்ச்சியில் விருது பெற்ற முதல் பெண் விஞ்ஞானி உஷா மேத்தா...





"காலமெல்லாம் கரும்பு ஆராய்ச்சியே போதும்!"

தமிழகத்தின் முதல் பெண் விஞ்ஞானி என்று போற்றும் வகையில் ICAR-ன் (Indian Council of Agricultural Research) சிறந்த விவசாய பெண் விஞ்ஞானிக்கான விருதினைப் பெற்றுள்ளார், உஷா மேத்தா.

பிறந்தது குஜராத் மாநிலம் என்றாலும் கூட படித்தது, வளர்ந்தது, வாழ்வது எல்லாமே தமிழகத்தில். பணிபுரிவதுகூட கோவை 'சுகர்கேன் இன்ஸ்டிடியூட்'டில், கரும்பு அபிவிருத்தித் தலைவராக.

முள்ளை முள்ளால் எடுப்பது போல் கரும்பைத் தாக்கும் கெட்ட நூற்புழுவை அழிக்க நல்ல நூற்புழுவைக் கண்டு பிடித்து, அதைப் பயிருக்குள் செலுத்தி (நிலத்தில் - கரும்பு வேர்ப் பகுதியில் ஸ்பிரே செய்து) வெற்றியும் பெற்றுள்ளார். அது மட்டுமல்ல; இரசாயன மருந்துகள் நிலத்தைப் பாழ்படுத்தி விட்டன என்பதை உணர்ந்து, இயற்கை உரங்களையே இட்டு, இயற்கை வைத்திய உத்திகளையே கரும்பு வளர்ப்புக்கு வகுத்துக் கொடுத்துள்ளதாகவும் கூறுகிறார்.

இவருக்கு இப்போது விருது கொடுத்துள்ள ICAR, கோல்டு மெடலுடன் கூடிய ஜவாஹர்லால் நேரு விருதை இவரது ஆராய்ச்சி மாணவரான பி. சுந்தர்ராஜனுக்குக் கொடுத்துள்ளது. பல வருடங்களுக்கு முன் வழங்கப்பட்ட இந்த விருதினைத் தமக்குக் கிடைத்த விருதாகவே எண்ணி அகமகிழ்ந்து போகிறார், இவர்.

"இப்போது கிடைத்திருக்கும் விருது கூட பெண்களுக்காக ஒதுக்கப்பட்டதால்தான்! கடந்த மூன்றாண்டுகளாக நடைமுறையில் இருக்கும் இவ் விருது மூன்றாவதாக எனக்குக் கிடைத்திருக்கிறது. இல்லையென்றால் இன்னும்கூட பெண்கள் இவ் விஷயத்திலும் ஒதுக்கப்பட்டே இருப்பார்கள்!" என்கிறார் ஆதங்கத்தோடு.

"உங்களுக்கு கரும்பு ஆராய்ச்சியில் ஆர்வம் வந்தது எப்படி?

"நான் படித்ததென்னவோ விலங்கியல் தான். அஞ்சு வருஷம் சென்னை விவசாயப் பல்கலைக் கழகத்தில் நூற்புழு துறை எ.ஆர். சேஷாத்திரியிடம் அஸிஸ்டெண்டா வேலை பார்த்தேன். அப்புறம் மேற்கொண்டு விலங்கியல் படிக்கவே கலிஃபோர்னியா கிளம்பினேன். எனக்கு இந்த நூற்புழுவில் கிடைத்த அனுபவத்தைக் கண்டு கொண்ட கலிஃபோர்னியா பல்கலைக்கழக பேராசிரியர், டாக்டர் ஜி. ராஷ்கி 'நூற்புழு'விலேயே பாடத்தைத் தொடரச் சொன்னார். அவரின் கீழ்



• ஆய்வுக்கூடத்தில்...

பிஎச்.டி பண்ணினேன். அதன் பின்னால்தான் இங்கே வேலை கிடைத்தது...!''

''கலிஃபோர்னியாவிலேயே பணியாற்றியிருக்கலாமே...''

"இல்லைங்க. நான் பிஎச்.டி பண்ணின ராஷ்கிகிட்டே ஒரு கண்டிஷன் உண்டு. தம்மிடம் படிக்கும் மாணவர்கள் படிப்பு முடிந்த பின்பு அவரவர் தாய்நாட்டில்தான் பணியாற்ற வேண்டுமென்று. அதன்படி செய்யாவிட்டால் அது குருவுக்குச் செய்யும் துரோகமல்லவா...!"

கரும்புகளில் காணப்படும் நூற்புழுவை சுமார் 32 வகைகளாகப் பிரித்து, அதில் முக்கியமாக ஐந்து புழுக்கள் மட்டுமே நம் நாட்டுக் கரும்புகளைத் தாக்குவதாகக் கூறுகிறார். இதனால் மட்டும் 16.5% கரும்பு உற்பத்தி பாதிப்புக்கு உள்ளாகிறதாம். கரும்பை நூற்புழு தாக்கியுள்ளதென்பதை வெறும் கண்ணால் பார்த்தே தெரிந்து கொள்கிறாராம்.

''இந்த ஆராய்ச்சிக்கெல்லாம் செலவு எப்படி?''

''அயர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளுடன் சேர்ந்தே இந்த ஆய்வுப் பணியை மேற்கொண்டிருக்கிறோம். மூன்று ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது. இதில் நமக்குப் பயனுள்ள நூற்புழுவினை எப்படி வளர்ப்பது? எப்படிச் சாகாமல் பாதுகாப்பது? விவசாயிகள் எப்படிக் கையாள வேண்டும்? என்பது பற்றியெல்லாம் விரிவான செயல்முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் முக்கியமாகக் கரும்பில் உள்ள நுண் துவாரங்களில் நூற்புழு செல்ல... அதில் சில பூஞ்சாணமும் நுழைந்து நோய் விழக் காரணமாகிறது என்பதையும் தற்போது கண்டுபிடித்துள்ளோம்!''

''நம் கிராமத்து விவசாயிகளுக்கு இது சம்பந்தமான விளக்கங்கள் இலவசமா...?''

''இதுவரைக்கும் எங்கள் ICAR-ல் இலவசமாகவே இருந்தது. ஆனால் தற்போது இல்லை. கரும்பாலைகளிடம் கன்ஸல்டேஷன் பீஸ் வாங்கச் சொல்லியே ஆர்டர். விவசாயிகளைப் பொறுத்தவரை, மண்ணுடன் கரும்பின் ஒரு தோகையைக் கொண்டு வரச் சொல்லி சோதனை செய்து அதற்குப் பரிகாரமும் கூறுகிறோம்!'' என்று கூறும் உஷா மேத்தா திருமணம் செய்து கொள்ளாதவர்.

காரணம் என்ன?

''எந்த ஆணுடனும் எந்தவோர் உடன்படிக்கைக்கும் நான் தயாராயில்லை. ஆண்கள், பெண்களுக்கு இட ஒதுக்கீடு அறிவித்துக் கீழ் நிலைக்குத் தள்ளப் பார்ப்பது அசிங்கம். அப்படித்தான் குடும்பத்திலும்... காலமெல்லாம் கரும்பு ஆராய்ச்சியே போதும். இதுவும் இனிப்பாகத்தானே இருக்கிறது!''

சந்திப்பு: **கா.சு. வேலாயுதன்**



வசுமதி ராமசுவாமி கூறுகிறார்...

பிள்ளையார் சுழியும் பிற கதைகளும்!

எங்கள் குடும்பத்துக்கும் கல்கி குடும்பத்துக்கும் நிறைய தொடர்பு உண்டு. நாங்கள் மாயவரத்தில் இருந்தோம். அவர்கள் நாலைந்து மைல் தள்ளி மணல்மேடு கிராமத்தில் இருந்தார்கள். நாங்கள் காங்கிரஸ் குடும்பம். கல்கியும் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

1928-29களில் கல்கி 'ஆனந்தவிகடனி'ல்தான் இருந்தார். அப்போதே அவரை எனக்குத் தெரியும்.

முதல் முதலாக என் சிறுகதை புதுக்கோட்டையிலிருந்து வரும் 'திருமகள்' பத்திரிகையில் வந்தது. கதைக்குத் தலைப்பு, 'பிள்ளையார் சுழி' என்று வைத்திருந்தேன். ஆனால் கதையின் தலைப்பை மாற்றி விட்டு, என் பெயரையும் போடாமல் கதையை வெளியிட்டிருந்தார்கள். எனக்கோ அசாத்திய கோபம். கல்கி அப்போது அவரது வீட்டில் இருந்தார். நேரே போய், ''பாருங்கள், இப்படிச் செய்து விட்டார்கள் 'திருமகள்' பத்திரிகையில்!'' என்று அவரிடம் புகார் செய்தேன்.

பகபகவென்று சிரித்தார் கல்கி. ''இதற்குப் போய் ஏன் கோபப்படுகிறாய்? உன் கதை நன்றாக இருந்ததால் தானே, கதையை எடுத்துக் கொண்டு பிரசுரித்திருக்கிறார்கள்? உன் பெயர் போடாவிட்டால் என்ன? இன்னும் நிறைய எழுது'' என்றார் கல்கி, சர்வசாதாரணமாக.

கல்கியின் எழுத்துக்கு ஒரு வசீகரம் இருந்தது. வசியம் இருந்தது. அவரது நடையில் குழப்பம் இல்லாமல் தெளிவாகவும், எளிமையாகவும் எழுதுவார்.

'முன்பு ஒருதடவை கிராமத்துக்குப் போன போது இருட்டில் பல தடவை இடித்துக் கொண்டேன். இப்போது, என்னடா என்றால் ரோடு பூரா ஒரே வெளிச்சம்' என்று நாகப்பட்டினம் ஸ்கூல் கம்பெனி, சாலை விளக்குகள் போட்டதை வைத்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

ஒரு நல்ல மனிதரைப் பற்றி எழுதுவதாய் இருந்தால், அவருடைய நல்ல குணங்களை ஓகோ என்று புகழ்ந்து எழுதுவார். அதேபோல, வம்பு வந்தாலும் விட மாட்டார். ஒரு வசவு இல்லாமல், நகைச்சுவையாலேயே எதிராளியை மடக்கி விடுவதில் மன்னர்! இந்தப் பாணி எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

'வெறும் நாற்காலிகளுக்கு வித்வான்கள் பாட வேண்டியிருக்கிறது' என்று நான் சொன்னதைக் கேட்டு, அகடமியில் மூன்று மணிக் கச்சேரியை எடுத்து விடணும் என்று என்னையே எழுதச் சொன்னார். அவரைப் பின்பற்றி, அவர் பாணியிலேயே எழுதினேன்.

டி.கே.எஸ். சகோதரர்கள் தங்கள் நாடக கம்பெனியைக் கலைத்து விடப் போவதாக முடிவு எடுத்திருந்தார்கள். கலைக்கக் கூடாது என்று கல்கி விரும்பினார். அப்படியே எழுதச் சொன்னார். நானும் எழுதினேன். சண்முகம் அவர்களுக்கும் நான் எழுதினேன். சண்முகம் அவர்களுக்கும் மிக்க சந்தோஷம். கம்பெனியைக் கலைக்கவில்லை!

இந்தக் கட்டுரைகளுக்கு எல்லாம் நான் கல்கியின் உத்தியைத்தான் கையாண்டேன்.

சுதந்தரப் போராட்டத்தின்போது, எங்களுக்குச் சொந்தமான ராஜான் தோட்டத்தில்தான் கல்கியைக் கைது செய்து கொண்டு போனார்கள். நாங்கள் எல்லோரும் அப்போது கும்பலாகப் போயிருந்தோம். 'நான் விடுதலை ஆகி வர போதும் இப்படி எல்லாரும் வரணும். வந்தே மாதரம் சொல்லணும்!' என்றார் சர்வ சாதாரணமாக.

சந்திப்பு: **சித்தார்த்**



1

“சரி, வெட்டு!” என்றான் பெர்முடா அணிந்த வெள்ளைக்காரன். முன்னொரு காலத்தில் ஆண்டவன். ஆகவே அவன் சிம்மாசனத்தில் திமிராகச் சாய்ந்து அமர்ந்து, கால்மேல் கால் போட்டுக் கொண்டு கண்ணை மூடி இசை கேட்கத் தொடங்கியதும் மொட்டை அடித்து விடலாமா என்று யோசித்தான் கருப்பண்ணசாமி. சினிமாக்களில் தேசபக்தி பீறிடுகிறபோதெல்லாம் மதிப்புக்குரிய ஹீரோக்கள் இப்படியான வழிகளில் தான் வெள்ளையரைப் பழிதீர்க்கிறார்கள். ஆனால் உணர்ச்சிவசப்படுவது வாழ்க்கைக்கு நல்லதல்ல. முன்வினைப் பயனால்தான் முடிதிருத்தும் உத்யோகமாவது கிடைத்திருக்கிறது. தவறிப்போய் படித்துவிட்ட ஆங்கில இலக்கியம், மதிப்பான நட்சத்திர ஓட்டலில் ஒரு சிறிய சமஸ்தானத்தில் அவனைக் குடிவைத்திருக்கிறது.



இறைவனுக்கு வணக்கம். கோணலில்லாத புத்தியினை அருள்வானாக.

கர்மயோகி கருப்பண்ணசாமி, ஆயுதங்களுடன் அவனை நெருங்கி, தலையில் புனித நீர் தெளித்து, கத்திரிக்கோலால் கபடி விளையாட ஆரம்பித்த போது, கண்ணாடிச் சுவருக்கு வெளியே நூறடி தூரத்தில் நின்று, நண்பன் தட்சிணாமூர்த்தி, கையையும் காலையும் ஆட்டி, வெட்டவெளியில் மோனோ ஆக்ட் பண்ணிக் கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கண்டான். படிக்கட்டில் கால் வைத்தாலே பணம் கேட்டு விடுவார்கள் என்று நினைத்தானோ என்னவோ. உன்னதமான கலைஞர்களைத்தான் இந்த பாரத வர்ஷம் என்னமாய் அலைக்கழிக்கிறது? ஒருவனை நட்சத்திர ஓட்டலில் முடிதிருத்துபவனாகவும், இன்னொருவனை, பல்லாவரம் தாண்டி தோல் கழிவு ஆறுகளின் நடுவே இயங்கி வந்த ஆணுறை தயாரிப்பு நிறுவனத்தின் வாயில்காப்போனாகவும், மேலும் பலரை...

''வாடா வெளியே'' என்று சைகையில் விரைவு காட்டித் துள்ளிக் குதித்தான் மூர்த்தி. இனியும் பொறுக்கமாட்டாமல் தன் சிஷ்யர்களுள் ஒருவனை விளித்து, வெள்ளைக்காரன் தலைக்குச் செய்ய வேண்டிய சடங்குகளை விளக்கிவிட்டு அவசரமாக வெளியே வந்து, “என்னடா? சௌக்கியமா?”

பதிலேதும் கூறாமல், மோகனப் புன்னகையுடன் கடிதம் ஒன்றை எடுத்து நீட்டினான் மூர்த்தி.

அன்புடையீர், வணக்கம். மூன்று வருடங்கள் முன்பு தேசிய நாடக அகடமி நடத்திய கோடை நாடக விழாவில் உங்கள் புரட்சி நாடகத்தை ஜூரிகளுள் ஒருவனாக இருந்து ரசித்தவன் எழுதுகிறேன். உங்கள் அளப்பரிய திறமையை உலகம்



உணர்ந்து கொள்ளப் பிறிதொரு சந்தர்ப்பம் இதோ. இங்கே குவாஹாத்தியில் நாடக ஜுரம் உச்சிக்கு ஏறியிருக்கிறது இப்போது. கலா போஷகரான ஒரு தேயிலைத்தோட்ட முதலாளி, உலக நாடகர்களை ஒன்றுதிரட்டி, வரும் அக்டோபரில் இங்கு ஒரு நாடகவிழா நடத்துகிறார். மதிப்பான இவ்விழா மேடையில் உங்களுக்கு ஒரு நாள் ஒதுக்குகிறோம். உங்களுடையது வீதி நாடகமெனினும் இங்கே கதவு பூட்டிய ஆடிடோரிய உள்ளரங்கு மேடையில்தான் நடத்த வேண்டும். டமாலென்று அதிரடிக் குரலில் ஒரு வசனம் பேசினாலோ, ஏதாவது சாமானை வீராவேசமாகத் தூக்கி எறிந்து சப்தம் எழுந்தாலோ, குண்டு வெடிப்பாகக் கருதி ராணுவ வீரர்கள் பரேடு நடத்தி விடுவார்கள் என்பதுதான் காரணம். சம்மதத்தை உடனே தெரிவித்தால் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்ய சௌகரியம்...

தோழமையான வாழ்த்துகளைச் சுமந்து வந்த அஸ்ஸாமியன் பருவாவின் கடிதத்தைக் கருப்பண்ணசாமியால் நம்ப முடியவில்லை. தாங்க முடியாத உற்சாகத்துடன் தட்சிணா மூர்த்தியை ஏறிட்டான். நீண்ட நாட்களுக்குப்பின் மீண்டும் அவன் முகத்தில் ஒருவித அறிவு ஜீவிக்களை வந்திருப்பதைக் கண்டான். உற்றுக் கவனித்தபோது, அது இரண்டு நாட்களாக ஷேவ் பண்ணாததுதான் என்பது புரிந்தது. கடிதம், இரண்டு நாட்கள் முன்னதாகக் கிடைத்திருக்க வேண்டும்.

''ஆக, நம் கலைக்கு இன்னும் உயிர் இருக்கிறது...''

பா. ராகவன்

''உனக்கு லீவ் கிடைக்குமா?'' என்று மூர்த்தி கேட்டான்.

"நாம் நாடகம் போட்ட நாளில் இரண்டு பாட்டிகள் மூன்று தரம் இறந்து போனார்கள். தாத்தாக்களும் ஒரு பெரியம்மாவும் மூன்று மாமன்களும் இன்னும் சாகலை. பார்க்கறேன்'' என்றான் கருப்பண்ணசாமி.

மூர்த்தி ஒரு பெருமூச்சு விட்டான். அநேகமாக அது, கருப்பண்ணசாமிக்கு வாழ்க்கை அளித்திருந்த நட்சத்திர ஓட்டல் முகவரி பற்றிய ஏக்கமாயிருக்கலாம். விவரம் தெரிந்தவர்கள் யாரும் வெறும் நாடகத்தை மட்டும் எண்ணிக் கொண்டிருப்பதில்லை. கூடுதலாக ஒரு தொழில் தெரிந்து வைத்திருக்கிறார்கள். முடிவெட்டுவது, முளைக்கீரை லேகியம் தயாரிப்பது, டீ.வி. நிலையத் தயாரிப்பாளர்களுக்கு அணுக்கமாயிருந்து ஐந்நூறு வார ஸ்லாட் வாங்குவது.

"நீயும் கலையை மட்டும் நம்பாமல் ஏதாவது தொழில் பழகி இருக்கலாம்" என்று அனுதாபமாகச் சொன்னான் கருப்பண்ணசாமி.



"நான் என்ன செய்ய? என் குலத் தொழில் சாராயம் காய்ச்சறதுதான்" என்றான் மூர்த்தி.

கருப்பண்ணசாமியின் புரட்சி நாடகத்தில் மொத்தம் எட்டு நடிகர்கள். அவனும் மூர்த்தியும் நாடகத் தீவிரர்களாக இருந்த காலத்தில், எங்கு போனாலும் எக்ஸ்கர்ஷன் மாதிரி, பின்னால் சான்ஸ் கேட்டுப் பல பையன்கள் தாடியுடன் வருவார்கள். தலைவிரிகோலமாக, சார்மினார் புகைக்கும் சில பெண்களும். எல்லாரும் எக்ஸிஸ்டென்ஷியலிஸவாதிகளாக இருந்தார்கள். ஒரு டீக்கடையில் கூடினால் கூட, "எக்ஸிஸ்டென்ஷியல் சாய்ஸ். டீயா? காப்பியா?" என்பார்கள்.

வெறுத்துப்போன கருப்பண்ணசாமி, "There is an another choice. A cup of hot water" என்பான்.

"பழைய ஸ்கிரிப்ட் உன்னிடம் இருக்கிறதல்லவா?" என்று போகிறபோக்கில் கேட்டிருந்தான் மூர்த்தி.

இருக்கலாம். ஒருவேளை ஷேவிங் க்ரீம் துடைக்கவும் பயன்பட்டிருக்கலாம். அதனாலென்ன? கருப்பண்ணசாமி எழுதிய நாடகம் அது. ஒவ்வொரு சொல்லும் அவனுக்கு மனப்பாடம்.

நாடகம் ஏழு முறை முன்னதாக அரங்கேறியிருக்கிறது. ஒவ்வொரு முறையும் யாராவது ஒரு நடிகனுக்கு அஜீரணக் கோளாறு வரும். அல்லது பெண்டாட்டிக்குப் பிரசவ வலி. மாமனார் ஆவியைக் கடைத்தேற்றி அனுப்ப வேண்டிய கட்டாயம்.

சளைக்காமல் இரட்டை வேஷம், மூன்று வேஷம் போட்டு அசத்துவான் கருப்பண்ணசாமி.

இப்போதும் அசத்த முடியும்தான். ஆனால் எட்டு வேஷமும் போட்டால் சநாதன நாடக தர்மம் கெட்டுவிடும்.

அவசியமில்லை. உடன் நடித்த நவீன நாடகப் பிரியர்களெல்லாரும் ஆளுக்கொரு அரசாங்க ஜோலி தேடிக் கொண்டு போய்விட்டாலும், பழைய வண்ணாரப் பேட்டையில் சவுண்ட் சர்வீஸ் வைத்திருக்கும் அடைக்கலராஜ் மட்டும் பழசை மறக்காமலிருக்கிறான். கட்சி நாடகங்களுக்கு மைக் சப்ளை செய்த அனுபவத்தில், காசு வராவிட்டாலும் சில நடிகர்களின் பரிச்சயம் அவனுக்குக் கிடைத்திருக்கிறது. உரிய நடிகர்களை அவன் கொண்டு வந்து விடுவான் என்று மூர்த்தி சொன்னான்.

"ஒரே பிரச்னை, ஹீரோயின்தான். உன்னால் ஒரு ஹீரோயின் பிடிக்க முடியுமா?"

கருப்பண்ணசாமியின் நாடகத்தில் முன்பு ஹீரோயினாக நடித்தவள் ஒரு டப்பிங் ஆர்டிஸ்ட். தமிழ் சினிமா கதாநாயகிகளுக்கும் அழுது புலம்பும் அவர்தம் அம்மா வேட நடிகையருக்கும் குரல் கொடுத்து அலுத்துப் போய் ஒரு மீரான் சாகிபுத் தெரு வினியோகஸ்தரை மணந்து கொண்டு, இப்போது துறையைவிட்டு விலகி இருப்பதாகக் கேள்வி. இரக்கப்பட்டு, கருப்பண்ணசாமியின் நாடகத்தில் நடித்துக் கொடுத்தவளுக்குப் போய்வர ஆட்டோ சார்ஜ் கூடத் தராத கோபம் இன்னமும் மிச்சமிருக்கலாம். எதற்கு வம்பு?

இது புது முகங்களின் காலம். குவாஹாத்திக்கு அழைத்துப் போவதாகச் செய்தி பரப்பினால் க்யூவில் வந்து குவிய மாட்டார்களோ?

மூர்த்தி கிளம்பிப் போனதும் இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்தவன் தடதடவென்று எழுந்த பூகம்பத்தால் நிலை குலைந்து திரும்பிப் பார்த்தான்.

முரட்டு முகமும் உருட்டு விழிகளும். கனத்த காலணிகளின் அதிரும் சப்தம். தோளில் நிமிர்த்தி வைக்கப்பட்டு, எந் நேரமும் வெடிக்கத் தயார் நிலையில் துப்பாக்கிச் சனியன்கள். சரியான காவல் கிங்கரர்கள் நால்வர். நடுவே உருகி வழியும் கோன் ஐஸ் போல அவள் மிதந்து போனாள்.

யாரிவள்?

கடந்த சில மாதங்களில் இரண்டு, மூன்று முறை அவளைப் பார்த்துவிட்டான். அவன் பணியாற்றும் நட்சத்திர ஓட்டல், அவள் வரும்போதெல்லாம் இலவசமாக ஆயிரம் வாட் ஒளிபெற்று விடுகிறது.

"ரொம்ப பெரிய இடம் குரு. ஆனால் எந்த இடம்னு தெரியலை" என்று போகிற போக்கில் சொல்லிப் போனான், பார் அட்டெண்டர் ஸ்காட்.

விருந்தாளியாக வந்து போகும் யாரோ பெரிய அரசியல் வி.ஐ.பியின் செல்ல மகளாக இருக்கலாம் என்று அவன் நினைத்தான்.

தலைநகரிலிருந்து இப்போதெல்லாம் அடிக்கடி நல்லெண்ணத் தூதுவர்கள் வருகிறார்கள். பெரிய திட்டங்களுடன்; நீண்ட நேரப் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமுடன். காலை சிற்றுண்டியில் வந்திறங்கிவிட்டு, பெரும் பாலும் புறமுதுகிட்டு, பிற்பகல் விமானத்தில் ஊரைப் பார்க்கப் போய்ச் சேருகிறார்கள்.

இல்லை. இவள் தலைநகர் வாசி இல்லை. மண்ணின் மகள்தான். ப்யூட்டி

பார்லர் மீனலோசனி இவன் தலை முடியை சர்வநாசம் பண்ணி விட்டதாகச் செந்தமிழில் ரகளை பண்ணிக் கொண்டிருக்கிறாள். "வந்துபார்" என்று சொன்னான் எலக்ட்ரீஷியன் செல்லதுரை.

அவசரமாக ப்யூட்டி பார்லர் பக்கம் ஓடினான் கருப்பண்ணசாமி.

உடன் வந்த செக்யூரிடிகள் தீவிழி விழித்தபடி எந்நேரமும் சுட்டுவிடத் தயாராக நிற்க, அவள் இரு கரங்களையும் ஆட்டிக் கத்தியபடியே கதகளி ஆடிக் கொண்டு கண்ணாடிக் கதவை உதைத்துத் திறந்து வெளியே வந்து கொண்டிருந்தாள். பின்னாலேயே பரிதவித்து ஓடி வந்த பார்லர் மானேஜர் மீனலோசனி அம்மாள், கையறு நிலைக் கதாநாயகிபோலக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன ஆச்சு?'' என்று பொத்தாம் பொதுவாகக் காற்றைப் பார்த்துக் கேட்டுக் கொண்டு இன்னொரு புறமிருந்து ஓடி வந்தார் ஜி.எம்.

"இன்னும் என்ன ஆகவேண்டும்? பெரிய ஸ்டார் ஓட்டல். பெரிய ப்யூட்டி பார்லர். இந்தப் பெண்ணரசி என் கூந்தலை எப்படிக் கருகப் பண்ணிவிட்டாள் பார்!"

அவள் காட்டிய கூந்தலின் ஒரு பகுதி, நறுக்கப்பட்ட நாய்வால்போல் சுருண்டிருந்தது.

"கேஸ் போட்டு நாறடிக்காவிட்டால் என் பெயர் ஊர்மிளா இல்லை!"

ஊர்மிளா! கருப்பண்ணசாமியின் செவியில் தன்ஹா தன்ஹா என்று சப்தம் கேட்டது.

அவனது புரட்சி நாடகத்தில் வரும் கதாநாயகிக்கு இப்படித்தான் ரௌத்திரம் உச்சிக்கு ஏறினால் மூக்கு சிவந்து, பொறிகலங்கிக் கண் சிவக்க வேண்டும். உதடு துடித்து, அநாயாசமாக ஆங்கில வசவுகள் வந்து விழ வேண்டும். கொஞ்சம் தமாஷும் சீரியஸ்னஸும் கலந்து தூள் பறக்க வேண்டும். எகிறி எகிறிப் பேசும் போது இப்படியேதான் காது வளையங்கள் ஃபாஸ்ட் ஃபார்வர்டில் மார்ச் பாஸ்ட் பண்ண வேண்டும்.

அதிகப்பிரசங்கித்தனம்தான். ஆனாலும் அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

"மேடம், இஃப் யூ டோன்ட் மைண்ட், என் சமஸ்தானத்துக்குச் சில விநாடிகள் வர முடியுமா? உங்கள் கூந்தலின் பழைய எழிலுக்கு நான் உத்தரவாதம்."

"நீங்கள்?"

சொன்னான். அவள் ஒரு கணம் திரும்பி



''தலைவர் நேற்று மானத்தை வாங்கிட்டாரா, எப்படி?''

''நேஷனல் டைரி டெவலப்மண்ட் போர்டு' விழாவுக்குத் தலைமை தாங்கி பேசச் சொன்னா, எல்லாரும் தினமும் டைரி எழுதணும்னு பேசிட்டார்!''

— வெ. ராஜாராமன்

மீனலோசனியை மறுபடி முறைத்தாள். 'இரு, வெச்சுக்கறேன்' என்று வீரசபதம் செய்து விட்டு, 'வா' என்று சட்டென்று கிளம்பி, முன்னால் போனாள்.

தன் பார்லருக்குள் நுழைந்ததும் கதவை இழுத்துச் சாத்தினான் கருப்பண்ணசாமி. பிள்ளையார், முருகன், முண்டகண்ணி அம்மன், முப்பாத்தம்மன் உள்ளிட்ட சமஸ்த தேவர் குழாத்தையும் மானசிகமாக வேண்டிக் கொண்டு, ஆசீர்வதிக்கும் ரெவரண்ட் ஃபாதர் போல அவள் தலையில் கைவைத்தான். சூ, மந்திரக்காளி!

''க்ரேட்!'' என்றாள், பெயரென்ன- ஊர்மிளா.

"உனக்கு என்ன வேணும் கேள். நான் ஏதாவது செய்தாக வேண்டும்."

"கேட்டால் கிடைச்சுடுமா?" என்றான் ஆர்வம் தாங்க மாட்டாமல்.

"கட்டை விரலையா கேட்கப் போகிறாய்? கேள்!"

"நீங்கள் என் ஹீரோயின் ஆகிறீர்களா? ஆக விருப்பமா?" என்றான் பனிச்சென்று.


"என்னது?"


"ஐ மீன்..."

"கருப்பண்ணசாமி, உன்னை ஜி.எம். கூப்பிடறார். அநேகமா செட்டில்மென்டுக்கா இருக்கும். ஓடு."

கதவு திறந்து, வந்த குரல் கேட்டுக் கலவரமானான்.

(தொடரும்)





1998 செப்டெம்பர் 13
வெகுதான்ய ஆவணி 28
மலர் : 57
இதழ் : 7

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தமிழர் திருவிழா!

இந்தப் பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் உண்டு:

முதல் நோக்கம் - தேச நலன்

இரண்டாவது நோக்கம் - தேச நலன்

மூன்றாவது நோக்கம் - தேச நலன்


- முதல் கல்கி இதழில், காவல் தெய்வமான விநாயகரை சாட்சியாக்கி அமரர் கல்கி அளித்த வாக்கு இது!

அவரது நூற்றாண்டு துவங்குகிற இந்த நேரத்தில், அந்த நோக்கங்களை மீண்டும் நினைவு படுத்திக் கொண்டு, தேச நலனுக்காகக் கல்கி இதழை மறு அர்ப்பணம் செய்கிறோம்.

தமிழ்ப் பத்திரிகை உலகம் இன்று அடைந்திருக்கிற உயர்வுகளுக்கு வித்திட்டவர் அமரர் கல்கி என்பதைப் பத்திரிகைத் துறையினரும் வாசகர்களும் ஒருங்கே எண்ணிப் பார்த்து மகிழ்கின்றனர்.

விடுதலை இயக்கத்தில் பங்கேற்று மும்முறை சிறை சென்ற கல்கி கிருஷ்ணமூர்த்தி, ஒரு பத்திரிகையாளராகத் தமது பணியைத் தொடங்கியது 1923-ம் ஆண்டில். 1954 இல் அவர் மறைவதற்குள் எழுதிய படைப்புகள் கணக்கிட முடியாதவை! ஆற்றிய நற்பணிகள் இரண்டு ஆயுட் காலங்களுக்கானவை!

ஒரு வாரப் பத்திரிகையின் முழுப் பொறுப்பாசிரியராகவும் இருந்து கொண்டு, பாரம்பரியக் கலைகளின் புனருத்தாரணம், தமிழிசை, திரைப்படத் துறை, தேசியம், இலக்கிய கர்த்தர்களின்



நினைவைப் பேணுவது என பல்வேறு விதமான பணிகளிலும் ஈடுபட்டு, அத்தனை துறைகளிலும் குறிப்பிடும்படியாகத் தடம் பதித்திருக்கிறார்.

'அச்சுத் தொழில் நுட்பம் அதிகம் முன்னேறாத காலத்தில், இத்தனை சாதனைகளுக்கான நேரம் அவருக்கு எப்படி வாய்த்தது? சரீர சக்தி எப்படி ஒத்துழைத்தது?' என்று வியக்கிறோம்.


'தேச நலன்' என்கிற உன்னதமான இலக்குதான் அவருக்கு அந்த அபரிமிதமான சக்தியை வழங்கியது ; காலத்தை அவரது கரங்களில் தவழ வைத்தது!

அந்த உயர் இலக்கை எட்டாக் கனியாக, ஒரு சிலருக்கே உரிய பொறுப்பாகக் கருதாமல் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் விதைத்தார் பேராசிரியர் கல்கி. அதற்குப் பெரிதும் உதவியது -

- இயல்பிலேயே அமைந்து, டி.கே.சி, ராஜாஜி போன்றோரால் தூண்டி விடப்பட்ட அவரது கவிதை உள்ளம்;
- வாழ்வில் கலந்து, பேனாவில் வெளிப்பட்ட அவரது ஈடு இணையற்ற நகைச்சுவை உணர்வு;
- ஒரு சமுதாயத்தின் உயர்வுக்கு அடிப்படைத் தேவையாக அவர் கருதிக் கடைப்பிடித்த உயர் ரசனை என்னும் முதல் விதி.
- 'தேச நலனுக்காகவே இந்தப் பத்திரிகை' என்று ஒரு வரியில் பிரகடனப்படுத்திப் போகாமல், விநாயகரை வம்புக்கிழுத்து உரையாடி, அவரிடமே அந்த வாக்குறுதியை அளித்ததில் அந்தக் கவிதை உள்ளம் வெளிப்படுகிறது; நகைச்சுவை உணர்வும் விகசித்திருக்கிறது; வரம்பு மீறாத உயர் ரசனையும் மிளிர்கிறது.

இன்று தமிழ்ப் பத்திரிகைகளில் 'புரட்சிகரமான', 'புத்தம்புது', 'வரலாறு காணாத' போன்ற அடை மொழிகளுடன் வெளி வரும் யுக்திகள், அனேகமாக அனைத்துமே அமரர் கல்கி ஏற்கெனவே கையாண்டவைதான்.

அரசியல் போக்கை நிர்ணயிக்கிற ஆற்றலும் பாதிக்கிற சக்தியும் தமிழ் இதழ்களுக்குக் கணிசமாக இன்று இருப்பதைப் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ளலாம். இந்த ஆற்றலுக்கு



அஸ்திவாரம் அமைக்க மிகப் பெரிய அளவில் உதவியர் கல்கி என்பது வரலாற்று உண்மை.

மென்மையான உணர்வுகளையும் ரஞ்சகமான நகைச்சுவையையும் வடித்த அவர் பேனாதான் அனல் தெறிக்கும் அரசியல் விமர்சனங்களையும் கனல் பறக்கும் தலையங்கங்களையும் எழுதியது.

அச்சமின்றி எழுத அவருக்குத் துணை நின்றது தேச நலன் என்னும் இலக்கு மட்டுமல்ல... சொந்த வாழ்க்கையிலும் பத்திரிகையிலும் அவர் கடைப்பிடித்த நேர்மையும் தூய்மையும்கூட. அப்பழுக்கற்ற வாழ்க்கையும் தொழில் தர்மமும் அளித்த தார்மீக பலத்தில் அவர் எழுத்துக்கள் ஜொலித்தன.

எத்தனை வேகமாகவும் கோபமாகவும் அவர் எழுதினாலும், தனி நபர் பேரில் வெறுப்போ விரோதமோ இம்மியும் கொள்ளாமல், செயல்களையும் கொள்கைகளையும் மட்டுமே விமர்சித்தார். அதனாலேயே தவறு செய்பவர்களுக்கும் தடம் மாறுவோருக்கும் அவர் எழுத்துக்கள் சிம்ம சொப்பனமாக விளங்கின.

அவர் அளித்த உந்து சக்தியில் இயங்கி வரும் இன்றைய தமிழ்ப் பத்திரிகை உலகம், அவருடைய நூற்றாண்டைக் கொண்டாடுவதில் பெருமிதம் கொள்கிறது.

பத்திரிகை உலகம் என்பது வாசகர் உலகத்தை உள்ளடக்கியது...

வாசகர் உலகம் என்பது தமிழ் உலகத்தையே உள்ளடக்கியது...

எனவே, அமரர் கல்கி நூற்றாண்டு விழா என்பது தமிழர் இல்லத் திருவிழா. அதனை அவரவரும் விரும்பும் வகையில் கொண்டாடி மகிழ அழைப்பு விடுக்கிறோம்.

நூற்றாண்டு விழா குழு அமைக்கப்பட்டு, அமரர் கல்கி நினைவைப் போற்ற சில முக்கிய பணிகளை மேற் கொண்டிருக்கிறது. இந்தப் பணிகள் குறியீடானவைதான்.

உயர் ரசனை காக்கவும் பொது வாழ்விலும் தனி வாழ்விலும் தூய்மை பேணவும், எதைச் செய்தாலும் தேச நலன் கருதிச் செய்யவும் ஒவ்வொரு தமிழனும் தீர்மானித்துச் செயல்பட வேண்டும். அமரர் கல்கி நூற்றாண்டைக் கொண்டாட அதனினும் சிறந்த மார்க்கம் என்ன இருக்க முடியும்!



“எங்க குடும்பம் ரொம்பப் பெரிசு. நாங்க கூடப் பிறந்தவங்க ஏழும் (சகோதரர்கள்) நாலுமாக (சகோதரிகள்) பதிமூணு பேர். நான்தான் கடைக் குட்டி” என்கிறார் திருமதி சிதா ஸ்ரீராம். டைரக்டர், ஒளிப் பதிவாளரான பி.சி. ஸ்ரீராமின் மறுபாதி.

“என்னுடைய பத்தாவது வயசு வரை எங்கள் குடும்பம் திருச்சூரில் இருந்தது. சொந்த நிலத்தில் விவசாயம் பார்த்துக் கொண்டிருந்தார் அப்பா. நிலச் சீர்திருத்தமெல்லாம் வந்தபோது, நிலமெல்லாம் போய்விட, எங்கள் குடும்பம் சென்னைக்குக் குடிபெயர்ந்தது.

“எழும்பூரில் பிரசிடென்ஸி ஸ்கூலில், இங்கிலீஷ் மீடியத்தில் சேர்த்தார்கள். இரண்டாம், மூன்றாம் பாடமாக, மலையாளமும், இந்தியும் படித்தேன். தமிழ்நாட்டுக்குக் குடி பெயர்ந்த பின், தமிழ் தெரியாவிட்டால் எப்படி என்று நானாக அம்மா உதவியுடன் தமிழ் கற்றுக் கொண்டேன்.

“பெரிய குடும்பம் என்பதால், எல்லாரையும் ரொம்ப படிக்க வைக்க முடியாத குடும்பச் சூழ்நிலை. அண்ணாக்கள் தலையெடுத்து, குடும்பச் சுமையை ஏற்றுக் கொள்ளும் வரை பெரியப்பா ரொம்ப உதவி செய்தார். இங்கிலீஷ் மீடியத்தில் படிப்பது ரொம்ப கஷ்டமாக இருந்தது. எப்படியோ படித்துப் பாஸ் பண்ணினதும், மீனாட்சி கல்லூரியில் பி.ஏ சேர்த்தார் அப்பா.

“காலேஜ் நாட்களில்கூட நான் எத்தனை அப்பாவியாக இருந்திருக்கிறேன் என்று இப்போது நினைத்துப் பார்த்தாலும் ஆச்சரியமாக இருக்கிறது. ஒருநாள் என் வகுப்புத் தோழியொருத்தி, 'நான் ஒரு கார்ட்டூன் படம் பார்த்தேன்' என்று சொன்னபோது, கார்ட்டூன் படம் என்றால் என்ன என்று அவளைக் கேட்டுத்தான் தெரிந்துக் கொண்டேன். இன்று டீ.வி.யில் இருபத்தி நாலு மணி நேரமும் கார்ட்டூன் பார்க்க, என் பெண்ணும், பையனும் சளைப்பதில்லை! காலம் எவ்வளவு மாறிப் போய் விட்டது!

“எனக்கு, அப்போது நிறைய கனவுகள் உண்டு. பாட்டு கற்றுக் கொள்ள ஆசை! ஆனால் வீட்டில் பாட்டு கற்றுக் கொடுக்கச் சொல்லிக் கேட்க மாட்டேன். காரணம், குடும்பச் சூழ்நிலை அதற்கு இடம் தராது என்று எனக்குத் தெரியும். எப்போது பார்த்தாலும் ரேடியோ கேட்டுக் கொண்டிருப்பேன். அதுதான் என் ஒரே பொழுதுபோக்கு. ஜேசுதாசின் குரலுக்கு நான் அடிமை. இன்று ஜேசுதாஸ் + உன்னி கிருஷ்ணன் விசிறி நான்!

“பி.ஏ. முடித்து விட்டு, அதே காலேஜில் எம்.ஏ. சேர்ந்தேன். சில மாதங்களிலேயே என் அண்ணாக்களில் ஒருவர் வேலூரில், மொபெட்டில் போய்க் கொண்டிருந்தபோது, பஸ் மோதி மரணமடைந்தார். அது என்னை வெகுவாக பாதித்தது. காலேஜில் வகுப்பறையில் உட்கார்ந்திருக்கிறபோது, மண்டைக்குள் பஸ் ஓடும் சப்தம் கேட்கும். அதன் காரணமாக காலேஜுக்கு ரெண்டு மாசம் லீவு போட்டேன். அதன் பிறகு, மறுபடி காலேஜுக்குப் போகவேயில்லை.

“படிப்புக்கு குட் பை சொன்ன பிறகு, எனக்கு வேலைக்குப் போக வேண்டும் என்று ஆசை. ஆனால் அதற்கு என் பெற்றோர் சம்மதிக்கவில்லை. என் கல்லூரித் தோழி, உமா வேலை பார்த்த கம்பெனிக்கு அடிக்கடி போவேன். அவள், கம்ப்யூட்டரில் வேலை பார்ப்பதை, ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டிருப்பேன். சில சமயம், கம்ப்யூட்டர் கீ போர்டு முன்

அமர்ந்து தட்டிப் பார்த்து சந்தோஷப் படுவேன். சில வருடங்களுக்கு முன் எங்கள் வீட்டுக்குக் கம்ப்யூட்டர் வந்தபோது, பழைய நினைவுகள் என் மனத்திரையில் ஓடின!'' என்று பகட்டுப் பூச்சுப் பூசாமல் இயல்பாகப் பேசுகிறார் சீதா.



சீதா, ஸ்ரீராம் திருமணம் நடந்ததுகூட ஒரு சுவையான கதைதான்! முதலில் ஸ்ரீராமின் ஜாதகம் வந்தபோது, பொருந்தவில்லை என்று நிராகரித்து விட்டார் சீதாவின் அப்பா. அதன் பின் சீதாவின் சகோதரி மகள், ஸ்ரீராமின் சித்தப்பா வீட்டு மருமகள் ஆனார். அந்தத் திருமணத்தின்போது, சீதா, ஸ்ரீராமைப் பார்க்க, அவரை சீதாவுக்குப் பிடித்து விட்டது. மறுபடி திருமண பேச்சு ஆரம்பித்தது. ஸ்ரீராமின் அம்மா, ஒரு திருமண போட்டோவில், இருந்த சீதாவின் படத்தைக் காட்டி 'இந்தப் பெண்ணைப் பார்க்கலாம் என்றிருப்பதாக ஸ்ரீராமிடம் தெரிவித்ததும், 'கல்யாணமெல்லாம் இப்போ வேணாம்' என்று

பெயரைக் கேட்டார்! பெண் பார்க்க வந்தார்!

முதலில் சொன்னாலும், அடுத்து பெண் பேரென்ன?' என்று கேட்டார் ஸ்ரீராம். 'சீதா' என்று சொன்னவுடன், மறுக்கத் தோன்றாமல் பெண் பார்க்க வருவதாய்ச் சம்மதம் தெரிவித்தார்.

''திருமணம் முடிந்த பின், என் வாழ்க்கை முற்றிலுமாய் மாறி விட்டது! அதிகம் சினிமா பார்த்திராத எனக்கு, திருமணமான சில நாட்களிலேயே ஒரு ஷூட்டிங்கை அருகே இருந்து பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. படம் மௌன ராகம். காரணம் எங்கள் வீட்டில்தான் ஷூட்டிங். அந்த ஒரு வாரமும் இரவு, பகல் என்று ஷூட்டிங் நடந்தது. மற்றவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டு, ஷூட்டிங்கை வேடிக்கை பார்த்துக் கொண்டு, அந்த நாட்களில் எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம், சந்தோஷம், இவற்றை வார்த்தைகளால் இப்போது எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

''பொதுவாக நான் ஷூட்டிங்கிற்குப் போவது கிடையாது. ஒருநாள் திடீரென்று 'நம்ம ஊர் மியூஸியம் பார்த்திருக்கிறாயா?'' என்று கேட்டார். நானும், குழந்தைகளும் 'இல்லை' என்றதும், எங்களை மியூஸியம் அழைத்துச் சென்றார். அங்கே திருடா திருடா படத்துக்கு 'சந்திரலேகா' பாடல் காட்சிக்குரிய செட் உருவாகிக் கொண்டிருந்தது. அப்போது, அவர் எடுத்த ஏராளமான போட்டோக்களை, மறுநாள் எங்கள் வீட்டு ஹாலில் பரப்பி வைத்துக் காட்டியபோது ஆச்சரியப் பட்டுப் போனேன்.

''உண்மையில், காதலர் தினம் ஷூட்டிங் நடந்தபோது, ஆக்ராவுக்குப் போய் வந்தோம். அதுவரை சினிமாவிலும், போட்டோவிலுமே பார்த்திருந்த தாஜ்மகாலை நேரில் பார்த்தபோது, எனக்கேற்பட்ட உணர்வுகள் நெகிழ்ச்சியூட்டுபவை!'' என்கிறார்.

ஸ்ரீராம் - சீதாவுக்கு இரண்டு குழந்தைகள். பெண்: ஸ்வேதா, பையன்: ஸ்கந்தா. செமத்தியான 'எஸ்' சென்டிமென்ட்!

சந்திப்பு:
பாரதிமௌலி



பேரம் பேசி ஒரு பொருளை வாங்குவது மட்டுமே சாமர்த்தியமல்ல. அது சரியான எடை கொண்டதாக இருக்கிறதா தரமானதாக இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்வதும் முக்கியம். பாக்கெட்டுகளாக விற்கும் பொருள்களிலும் கொஞ்சம் கவனம் தேவை. இதோ சில யோசனைகள்.

எடை விஷயத்தில் உஷாராயிருங்கள்!

பத்துக் கட்டளைகள்

● கடையில் உள்ள தராசு ஐ.எஸ்.ஐ முத்திரை கொண்டதாக இருக்க வேண்டியது சட்டக் கட்டாயம். தராசின் முள்ளுக்குக் கீழே யுள்ள பகுதி தயாரிப்பாளரால் சீல் செய்யப் பட்டிருக்க வேண்டும். எடைக் கற்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை சரி பார்க்கும் அரசு அதிகாரிகள் சீல் வைப்பார்கள். (கற்களின் கீழ்ப் பகுதிகளில் இந்த வருஷம் அல்லது முன் வருடம் பொறிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்கலாம்)

● பொருளை எடை போடும்போது தராசு முள் நிற்கும்வரை பொறுத்திருக்கச் சொல்லுங்கள். அதேசமயம் தராசு முள்ளை மட்டுமல்ல, தட்டுகளையும் நோட்ட மிட்டால், எதாவது விசை கொடுக்கப் படுகிறதா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

● கையிலே தராசை வைத்துக் கொண்டு எடை போடும்போது சில வகைத் தில்லுமுல்லுகளை செய்ய முடியும். எனவே மாட்டப் பட்டிருக்கும் தராசுதான் நல்லது.

● சில கடைகளில் வாடிக்கையாளரின் கண்களில் தராசு முள் சரியாகப் படாத வகையில், அதற்கு முன்னே உள்ள இடத்தில் கயிறு கட்டி பல்வேறு சாஷேக்களைத் தொங்க விட்டிருப்பார்கள், உஷார்.

● நம்பகமான, ஏற்கெனவே நல்ல பேர் வாங்கிய கடையில் பொருள்களை வாங்குவது நல்லது. தங்கள் பெயரை இழந்து விடக் கூடாது என்ற உணர்வு அவர்களிடம் மேலோங்கி இருக்க வாய்ப்புண்டு.

● பாக் செய்யப்பட்ட பொருள்களை வாங்கும்போது, தயாரிப்பாளர் அதன் எடை, விலை, பாக் செய்யப்பட்ட தேதி போன்ற விவரங்கள் அச்சிடப்பட்டிருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

● "கம்பெனியில் இப்படி பாக் செய்து விக்கறாங்க, நாங்க என்ன செய்ய முடியும்!" என்று மேலே குறிப்பிட்ட எந்த ஒரு விஷயத்தில் பழுதிருந்தாலும், வியாபாரி நழுவ முடியாது. சட்டத்தின் பார்வையில் தயாரிப்பாளர் மட்டுமல்ல; வியாபாரியும் குற்றவாளிதான்.

● சூப் பவுடர், இட்லி மிக்ஸ் போன்ற உணவு வகைகளை வாங்கும்போது பாக்கின் மீதுள்ள காலாவதி தேதியை கவனிக்க மறக்க வேண்டாம். சொல்லப் போனால் இந்தத் தேதி இன்னும் சில நாட்களில் வந்து விடப் போகிறதென்றால் அவற்றை வாங்குவதைத் தவிர்ப்பதே நல்லது.

● லூஸாக வாங்கினாலும் சரி, பாக் செய்யப்பட்ட பொருளுக்கும் சரி விற்பனை வரி ஒன்றேதான்.

● ஒரு தராசை வாங்கி வீட்டில் வைத்துக் கொள்ளலாம். (விலை சுமார் நூறு ரூபாய். தவிர எடைக்கற்களின் விலையும் கிட்டத் தட்ட அதே அளவு). இதன் மூலம் வெவ்வேறு கடைகளில் வாங்கி வரும் பொருள்களை வீட்டில் எடை போட்டுப் பார்த்து எந்தக் கடையில் நியாயமான எடை போடப் பட்டிருக்கிறதோ அங்கு தொடர்ந்து வாங்கலாம். ○

— ஜி.எஸ்.எஸ்

இவர் வாங்கல்–விற்கல் கோடீஸ்வரர்.
வாங்கி மாற்றுவது அரசுகளை.



இது, நாம் படைத்த அரசு என்று நாம நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் இதை உருவாக்கி, ஆட்டிப் படைப்பது இந்த தொழிலதிபரும் இவர் கூட்டாளிகளும். இப்போது நாம் செய்யக் கூடியதெல்லாம், பார்த்துக்கொண்டிருப்பதுதான்.

அக்னி

260 எபிஸோடுகளை
கொண்ட பிரம்மாண்டமான புதிய தொடர்.

VIJAY TV

வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரை.

இரவு 7.00 மணி முதல் 7.30 வரை.

கண்காட்சியானதோ கணபதி விழா!

கணபதியுடன் தொடர்பு

1893ல் மூன்றே மூன்று 'பொது' பிள்ளையார்களுடன், ஆடம்பரமின்றி மும்பையில் ஆரம்பித்த கணபதி விழாவில் இன்று 10,000க்கு மேற்பட்ட கணபதிகள் காட்சி தருகின்றனர். 200 கோடிகளை விழா விழுங்குகிறது. ஒரு சில "மண்டல்"கள் இரத்த தானம், ஏழைக் குழந்தைகளுக்குச் சீருடை விநியோகம், அருகிலுள்ள பள்ளிக்கு ஒரு கம்ப்யூட்டர் தானம் போன்ற சமூகப் பணிகளில் ஈடுபட்டாலும், பெரும்பாலும் தெய்வீகம் குறைந்து, கிட்டத்தட்ட விழாவே பத்து நாள் கண்காட்சி மாதிரி ஆகி விட்டது உண்மை! இதில், கணபதி தரிசனத்துக்காக (முக்கியமாக, சுற்றியுள்ள சினிமாத்தனமான செட்டப்புகளுக்காக) வருபவர்கள், நீண்ட க்யூவில் நிற்கும்போது, பக்திப் பரவசத்துடன் ஸ்தோத்திரங்களை முணுமுணுப்பர் என எதிர்பார்க்க முடியாதுதான்; கையில் செல்ஃபோனுடன் பிஸினஸாவது பேசாமல் இருக்கலாமல்லவா? 'கணேஷ் கல்லி' க்யூவில் நின்ற ஒருவரிடமிருந்து அடிக்கடி கி...கி...கி சத்தம் எழவே, பின்னாலிருந்த ஒருவர் "பிள்ளையாரின் வாகனத்தை நெஞ்சோடு சுமக்கிறார் பார்; என்னே பக்தி!" என்று கிண்டலடித்தார்; செல்ஃபோனை எடுத்து "ஹலோ... ஹாய் கணேஷ்" என அவர் ஆரம்பித்தார். "அடடா, கணபதியுடன் நேரடித் தொடர்பு கொள்ள இப்படி ஒரு வழி இருக்கிறதே!" என இவர் அதிசயிக்க, க்யூவே கலகலத்தது!

குண்டுப் பிள்ளையார்


முக்கியமான நாட்டு நடப்புகளின் பிரதிபலிப்பு, நிச்சயம் கணபதி விழாவில் தெரியும்; இம்முறை வேறென்ன?... போக்ரன்தான்! என்.எம். ஜோஷி மார்க்கில் பிரதானமாகவும், வேறு பல இடங்களிலும், இந்தப் பிள்ளையார் கூட்டங்களைச் கண்டி யிமுத்தார். அப்துல் கலாம், ஆர். சிதம்பரம், அனில் ககோத்கர் போன்றோரின் கட் அவுட்கள். காவ்ரி மிஸைல் தாங்கிய பாக் வரைபடம், இவற்றிடையே, அரசியல் தலை(வர்)கள் அடங்கிய பெரிய இந்தியாவின் நடுவே பிள்ளையார் கம்பீரமாக நின்றார். இது அமைதிப் பணிகளுக்கென்பதற்காக ஒரு புத்தர், சில புறாக்கள்! 'ட்ரிக் ஷாட்'களுக்கென்று, ரெகார்டு செய்யப்பட்ட 'குண்டு' வெடிப்புகள் வேறு!

யானை முட்டையிடுமா?

"ஆத்தி க்யா கண்டாலா?" பாடல், படு ஃபேமஸாகி, போவோர் வருவோரை எல்லாம் வம்புக்கிழுக்க, ரோட்சைட் ரோமியோக்களுக்கு ரொம்பவே வசதி செய்திருப்பது ஒருபுறமிருக்க, இம்முறை கணேஷோத்சவ கலை நிகழ்ச்சிகளில் லோக்கல் கலைஞர்களின் கற்பனா சக்தியையும் எந்த அளவு தட்டி விட்டிருக்கிறது பாருங்கள்! 'ஏத்தேஸ் கா கண்டாலா...?' என்ற மராத்திய மொழி பெயர்ப்புகள்; 'ஆத்திக்யா கணேஷ் தர்ஷன்லா' போன்ற 'பக்தி'ப் பாடல்கள்! இதில் 'ஆத்தி' என்பது சுத்த இந்தியில்லை; மும்பையா இந்தி; கண்டாலாவும் சிம்லா காஷ்மீர் போன்ற பிரசித்தி பெற்ற மலை வாசஸ்தலமில்லை; மும்பைக்காரர்களுக்கு மட்டுமே பரிச்சயமான 'ஊட்டி'! வேறு ஊர்களிலிருந்து வந்தவர்கள், சரியாக அர்த்தம் புரிந்து கொள்ளாமல், இஷ்டத்துக்குப் பாட்டை அலைக்கழித்தனர். முலுண்டில், நடந்த கணபதி விழாவில், ஆர்வத்துடன் பாடிய ஒரு கிறிஸ்துவப் பையன், "ஹாத்தி கா அண்டா லா" என்று குழப்பி, யானையின் முட்டையைக் கொண்டு வரச் சொன்னபோது, கூட்டமே அதிர்ந்தது! யானை முகத்தோனுக்கு, யானையின் முட்டை பிடித்திருக்குமென நினைத்திருப்பானோ?

தும்பிக்கையில் நம்பிக்கை

சித்ரலேகா மராத்தி இதழ் வருடா வருடம் கணபதி ஸ்பெஷல் வெளியிடுவது வழக்கம்; இம்முறை கூடுதல் ஸ்பெஷலாக, இரண்டு டன் பிரசாதத்தை மும்பை சித்தி விநாயகர் கோயிலுக்கு எடுத்துச் சென்று, நைவேத்தியம் செய்து, சின்னச் சின்னப் பாக்கெட்டுகளில் அடைத்து, ஒவ்வொரு



இதழுடனும் இணைத்து விட்டார்கள்! புனே, நாஸிக், நாக்பூர் போன்ற இடங்களில் இருப்பவர்களுக்கு மும்பையிலிருந்து தங்கள் வீடு தேடி வரும் சித்தி விநாயகர் பிரசாதம் சிலிர்ப்பை ஏற்படுத்தும் என்ற எதிர் பார்ப்பில், இரண்டு லட்சத்தியொரு பிரதிகளை அச்சடித்திருக்கிறார்கள். சர்க்குலேஷனுக்கு நடிகைகளை நம்பாமல் பிள்ளையாரை நம்பியிருக்கிறார்களே... பாராட்டுக்குரிய விஷயம் தான்!

காதும் காதும்

அண்மையில், செம்பூரின் தனிச் சிறப்பான அகோபில மடம், காலத்துக்கேற்ப கோயிலை ஒட்டிய திருமண மண்டபத்தை முழுதுமாக ஏ.ஸி செய்து, 40 லட்சம் செலவில் நவீன வசதிகளுடன் புதுப்பித்து, திறப்பு விழாவையும் நடத்தியது. கல்விக் கடவுளான ஹயக்ரீவர் எழுந்தருளியுள்ள இடத்தில், கல்வி அமைச்சர் கதிர் ஜோஷியை சிறப்பு விருந்தினராக ஆக்கியிருந்த பொருத்தம் ஒரு புறமிருக்கட்டும்; வி.ஐ.பி.க்கள் கதிர் ஜோஷியையும் லீலாதரையும் (தொழிலமைச்சர்) சரியாக 11 மணிக்கு பூர்ண கும்பத்துடன் வரவேற்று 11.05க்கு தீபாராதனை மாலை மரியாதைகளை முடித்துக் கொண்டு, 11.10க்கு முதல் மாடி சென்று ரிப்பனை கத்திரிக்க வைத்து, 11.15க்கு குத்து விளக்கேற்றலுடன் 11.20க்கு விழாவை 'சிக்'கென்று சிக்கனமாக முடித்தார்களே, அந்த நேர்த்தியை என்னென்பது? காதும் காதும் வைத்ததுபோல் என்று ஒரு பேச்சுக்குச் சொல்லவில்லை; உண்மையிலேயே அமைச்சர் பேசிய நாலே நாலு வார்த்தை 'மைக்' இல்லாததால், அவரைச் சுற்றியிருந்த நாலு பேர் காதில் மட்டுமே விழுந்தது. வேத கோஷங்கள் ஒலிக்க வேண்டிய இடத்தில் வேண்டாத அரசியல் பேச்சுகள் எதற்கு? இந்த புத்திசாலித்தனம் எல்லா விழாக்காரர்களுக்குமிருந்தால், எத்தனை கொட்டாவிகளைத் தவிர்க்கலாம்?

குரைக்கவோ? குறைக்கவோ?

அரை வெளிச்சத் தெருக்களில், குப்பை கூளங்களின் நாற்றம் குடலைப் புரட்ட, அரை டஜன் நாய்கள் குரையோ குரை என்று குரைத்துத் துரத்த, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடக்கும் அனுபவம் ஒவ்வொரு இந்தியப் பிரஜைக்கும் பிறப்புரிமை! திடீரென்று அதை மும்பைக்காரர்களிடமிருந்து பறிக்கப் பார்க்கிறார்களே? 'ராபீஸ்' தடுப்பூசி போட்டுக் கொள்பவர்களின் எண்ணிக்கை பெருக, தேவைக்கேற்ற மருந்து உற்பத்தியில்லாமல் மும்பை கார்ப்பரேஷன் கவலையுற்றது; நாய்களை ''ஸ்டரிலைஸ்'' செய்யும் கு.க திட்டம் தோல்வி அடையவே, பழைய விஷ ஊசி, எலெக்ட்ரிக் ஷாக் முறைகள் மீண்டும் தலை தூக்கியுள்ளன. நாய்களின் நண்பர்கள், எதிர்ப்புக் குரல் கொடுத்து, கோர்ட்டில் தடை உத்தரவு வாங்கியுள்ளார்கள். குப்பை கூளங்களைக் குறைத்து விட்டாலே, குரைப்புச் சத்தம் குறைந்து விடுமே? ●

— ஜெயஸ்ரீ ராஜ்

வட்டமேஜை

✉ ''ஆன்மீகத்தை கடைசிப் பட்சமாக் கியதால்தான் ஒழுக்கம் சிதறிப் போய்விட்டது'' என்ற தராசுவின் பதில் அட்சர லட்சம் பெறும்.
போடிநாயக்கனூர், எஸ். சையது முகமது.

✉ பிரகாஷ்ராஜ் பேட்டி படித்தேன். அவரது நடிப்பில் காணும் வித்தியாசம் பேட்டியிலும் இருந்தது. நடிகர் எனும் 'பந்தா' இல்லாமல் சாதாரணமாகத் தங்களது கேள்விக் கணை களுக்குத் தம் மனத்தில் பட்டதை அப்படியே சொல்லிய விதம் அருமை.
சிதம்பரம், ஜீ. துளசி.

✉ தலைமுறை இடைவெளியை வெகு நாசூக் குடன் உணர்த்திய 'இடைவெளி' சிறுகதை வெகு அருமை... விஜயகுமார் பாத்திரப் படைப்பு இயல்புடன் அமைந்திருந்தது. பாராட்டுக்கள்.
வலையப்பட்டி, எம்.பாலசுப்பிரமணியன்.

✉ அம்மாவின் மிரட்டல்களையெல்லாம் மறந்து, ஐந்து ஆண்டுகள் பி.ஜே.பி. ஆட்சி செய்யும் என்று கௌதமி கூறியது ஜோக் '98!
திருமானூர், ஏ.ஆர். மார்ட்டின்.

✉ திருஷ்டி சுற்றிப் போடுங்கள் என்றுதான் சொன்னேன். நீங்கள் இந்த வாரம் இலவச இணைப்பையே டபாய்த்துவிட்டீர்களே ஸ்வாமி!
பு.க. பாளையம், சி.தை. ரஜினி அருள்.

✉ லேனாவுக்கு நாலாம் வருஷம் இஞ்ஜினியரிங் படிக்கும் பையனா! வாவ்! ஆளை நேரில் பார்த்தால் சின்னப் பையனாக, அவரே இறுதி யாண்டு படிக்கும் மாணவராகத் தெரி கிறாரே!
தூத்துக்குடி - 1, சிவராம சுப்பிரமணியன்.

✉ நெல்லை மாணவர்களின் நல்ல திட்டங் களெல்லாம் உண்மையிலேயே நடைமுறையில் வந்து விட்டால், 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்ற மகாகவியின் கனவு நனவாகிவிடும்! ஆனால் முப்பது மாணவ மணிகளும் முக்கியமான ஒரு திட்டத்தை விட்டு விட்டார்கள்! சிறைச்சாலைச் சீர்திருத்தங்கள்!
வேலூர் - 6, எல். கோபாலகிருஷ்ணன்.

✉ ஸ்ரீவித்யாவின் மனக்குமுறல்கள், நெஞ்சை வருத்தி, கண்களில் கண்ணீர் வர வைத்தது!
திருவண்ணாமலை, சீதாமகன்.

✉ சவுடீசிங் பெருகி வரும் இக்கால கட்டத் தில், சபலிஸ்டுகளை சமாளிக்க, அற்புதமான பத்து யோசனைகளைக் கூறி அசத்தி விட்டீர்கள்!
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

✉ சோகமான உண்மைக்கதை உண்மை யிலேயே சோகத்தை அளித்தது. அரசு உதவி, நிவாரணம் எல்லாம் வெறும் அறிக்கை அளவில்தான் இருக்கிறது; சாதாரண மக் களிடம் சென்றடைவதில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது.
வடக்கு நரிப்பையூர், பொ. முத்துலட்சுமி.

✉ கோவை குண்டு வெடிப்பில் 'சிவகுமார் ஸ்தலத்திலேயே இறந்து விட்டார்' என்று குறிப்பிட்டு விட்டு, அடுத்த பாராவில் 'சிவகுமாருக்கு இன்று கஷ்டத்துக்கு மேல் கஷ்டம்' என்று அச்சாகியுள்ளதே!
சென்னை - 107, பி.கே. ரகுபதி.

✉ அருண்ஷோரி பேட்டி கண்டேன். இன்று சாதீய அரசியல் வேரூன்றி இருப்பதற்குக் காரணம் அம்பேத்கர்' என்ற அவரது வாதம் குதர்க்கமானது. அம்பேத்கர் கண்ட சாதீயக் கொடுமைகள் இன்றளவும் தொடர்கின்றன என்பதை மறுப்பாரா ஷோரி!
தூத்துக்குடி, பா.சுகுமார்.

சவூதி செல்பவர்களே, உஷார்!

✉ இந்தியாவிலிருந்து சவூதிக்கு வேலைக்காகச் செல்பவர்களை சவூதி யினர் கொடுமைப் படுத்துகிறார்கள். தையல் காரர், ஓட்டுனர், மெக்கானிக் என்று விசா வழங்கிவிட்டு அவர்களை ஆடு, ஒட்டகம் மேய்க்கச் சொல்கிறார்கள், செய்யாவிடில் மிரட்டி, 'திருடினாய்; என் மனைவியிடம் தகாத முறையில் நடந்து கொண்டாய் என்று காவல் நிலையத்தில் புகார் செய்வேன்' என் றும் அச்சுறுத்துகிறார்கள். இது என்ன நியா யம்? நாற்பதாயிரம் செலவு செய்து செல் பவரின் கதி என்ன! பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான மக்களில் நானும் ஒருவன். எனவே சவூதி செல்லும் மக்களே உஷார் தேவை!
நாசிங்பூர், எச். ஷேக் அலாவுதீன்.

வைரம் ஜொலிக்கிறது



வாழ்க்கை இனிக்கிறது

என் தாயின் அனுபவம் இது. 1968ம் வருடம் ஜூலை 5ல் திருமணம் முடிந்ததில் இருந்து 1985 வரையில் ஒரே வாடகை வீட்டில் குடியிருந்தோம். வீட்டுச் சொந்தக்காரர் திடுமென வீடு தேவை வேறு வீடு பார்த்துக் கொள்ளுங்கள் என்ற போது என் பெற்றோர் மிகவும் ஆடிப்போய்விட்டனர்.

என் தந்தை எப்போதோ வாங்கிப் போட்டிருந்த வீட்டு மனையில் வீடு கட்டுவதெனத் திடீர் முடிவு எடுக்க நேரிட்டது. அது வரையில் வேறு பல செலவுகளைச் சமாளித்ததில் சேமிப்பு என்பதே அறுகிவிட்ட நிலையில், வீடு கட்டுவது எப்படி என்பதே மிகுந்த கவலையளித்தது.

என் தந்தை தான் வணங்கும் எம் பெருமாள் என்றும் கைவிடமாட்டான் என்று நம்பி வீடு கட்டத் துவங்கினார். ஒவ்வொரு நிலையிலும் கடன் வாங்கி இக்கட்டுகளைச் சமாளித்து கான்கிரீட் போடும் நிலை வந்ததும் பணமுடை அதிகமாயிற்று.

கான்கிரீட் போடும் நாளையும் குறித்தாயிற்று. பணத்திற்கு எங்கு போவது? தெரிந்தவர்களிடம் எல்லாம் கடன் வாங்கியாகி வட்டது என்ற நிலையில் வெளியூரில் வசித்த எங்கள் உறவினர் ஸ்ரீராம் சிட்ஸில் அந்த மாதம் ஏலத்தில் எடுத்தப் பணத்தை யதேச்சையாக கொண்டு வந்தவர் எங்களின் தேவையறிந்து கொண்டு உதவினார்.

என் பெற்றோருக்கு ஆனந்தக் கண்ணீர். நாங்கள் வணங்கும் அப்பெருமாள் ஸ்ரீராம் சிட்ஸ் மூலம் உதவியதாக எண்ணினர்.

அன்று எடுத்த முடிவுதான். நாங்களும் எங்கள் பெற்றோரும் ஸ்ரீராமின் நிரந்தர உறுப்பினர் ஆகி விட்டோம்.

வீடு கட்டுவதற்கு மட்டுமன்றி, என் வாழ்வில் விளக்கேற்றுவதற்கும் ஸ்ரீராம் சிட்ஸ்தான் பயன்பட்டது. ஆம். திடீரென்று நிச்சயம் செய்யப்பட்ட என் திருமணத்தின் போது குறைந்த தொகையை ஸ்ரீராமின் சேமிப்பிலிருந்து தான் எடுத்து ஈடு கட்டினார்கள். இது மட்டுமன்று. என் தம்பி பொறியியல் துறையில் படிப்பை முடித்து இன்று இன்ஜினியராக விளங்கவும் காரணம் ஸ்ரீராம் சிட் பண்ட்ஸ்தான்.

அவ்வாறு சேமித்த சேமிப்பில் தான் என் திருமணமும், என் தம்பியின் பொறியியல் படிப்பும் நன்றாக முடிந்தது.

இன்று என் பெற்றோருக்கு மூன்று வீடுகள் நல்ல வசதியுடன் இருந்தும், எங்கள் 'ஸ்ரீராமன்' இல்லத்தை விட்டுவரத் தயாரில்லை. ஆம் எங்கள் வீட்டின் பெயர் 'ஸ்ரீராமன்' இல்லம் தான்.

ஸ்ரீராம் சிட்ஸின் சேவை தலைமுறை தலைமுறையாகத் தொடர எம்பெருமானை வேண்டிக் கொள்கிறோம். இது என் தாயின் நன்றியுரை.

எஸ். நர்மதா
சேலம்-18.

ADVT



1



2



3

நீங்கள் 'அப்பாவாக இருந்தால்' எப்படி நடந்து கொள்வீர்கள் என்று கோவை நிர்மலா கல்லூரி மாணவியரிடம் கேட்டோம். கலக்கி விட்டார்கள் கலக்கி...



4



5



6



7

டிபாய்தான்

1. துர்க்காதேவி: 'பாடுபட்டு தொந்து போறதோட மகளுக்கும், மகனுக்கும் காலேஜ் சீட், வேலைன்னு அப்பா அலையற அலைச்சல்... அம்மாடி... நமக்குத் தாங்குமான்னு தெரியலை!

2. தமிழரசி: இதோ பார்... நா சொல்றவனுக்குத்தான் கழுத்தை நீட்டணும். இல்லைன்னா என்னை உசிரோடவே பார்க்க முடியாதுங்கற வழக்கமான டயலாக்கை மட்டும் அடிக்கவே மாட்டேன்...!

3. எஸ். மீரா: பண்பாடுள்ள பிள்ளையாய் என் பிள்ளையை வளர்த்து நாட்டுக்கு இன்னொரு மகாத்மாவைக் கொடுப்பேன். பொண்ணா இருந்தா இந்திராவாக்குவேன்; அன்னை தெரசா ஆக்குவேன்.

4. ஏ. சகாய ராணி: மகனை ஹிட்லராக வளர்ப்பேன். எங்கள் நகரை (கோவை) நரகமாக்கிய தீவிரவாதிகளை சுட்டெரிக்க வேண்டும்.

5. எஸ். மகாலட்சுமி: ரெண்டே ரெண்டு குழந்தை மட்டும் பெத்துக்குவேன். ஆண் பிள்ளையை காந்தியா, பொண்ணை கிரண் பேடியா ஆக்க முயற்சிப்பேன்.

6. பி. ஹேமலதா: மகனை டாக்டராக்கணும்; இன்ஜினியர் ஆக்கணும்ன்னெல்லாம் அவங்களையும் நெருக்கி என் மனசையும் நொறுக்கிக்க மாட்டேன். அவன்களுக்கு என்ன இஷ்டமோ அதைச் செய்யட்டுன்னு விட்டுடுவேன்.

7. வளர்மதி: அப்பா என்றால் அறிவு, அன்பு, உழைப்பு என்பதை என்னைப் பார்ப்

8



9



10





11



12



13

காலேஜ் கார்னர்



14



15



16



17

அரசியலுக்கு அவசியம்!

பவரும் உணரும் வண்ணம் நடப்பேன். என் பிள்ளைகள் படிக்கும் புத்தகமாகத் திகழ்வேன்.

8. கே. லோகேஸ்வரி: எல்லா அப்பன்க மாதிரி வீட்டுக்கு நாலைஞ்சு பெத்துகிட்டு இப்படி நாட்டையே குட்டிச் சுவராக்கியிருக்க மாட்டேன். 'ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு' பெத்து, அட்லீஸ்ட் இந்த நாட்டுக்கு நற்குடி மகனாகவாவது இருந்திருப்பேன்.

9. எஸ். சத்யப்பரியா: குழந்தைகளுக்கு முழு சுதந்திரம் கொடுத்திருப்பேன். அடாவடி அப்பாவா இல்லாம ஃபிரெண்ட்லியா பழகுவேன். மனுசன்களுக்கு 'மதம்' பிடிக்காம இருக்க, என் பிள்ளைகளுக்கு மதம் மாற்றித்தான் 'மணம்' செய்வேன்.

10. எஸ். வினர்ட் ஹெனா எலிசபெத்: முதல் வேலையா எம் புள்ளைகளுக்குப் பொய் சொல்லக் கத்துக் கொடுப்பேன். அது நம்ம அரசியலுக்கு ரொம்ப அவசியம் பாருங்க... அதனாலதான்.

11. டி. ராதா: தேளைத் தொட்டா கடிக்கும்; தேனைச் சுவைத்தா இனிக்கும் சார்...! அது மாதிரி பெண்டாட்டி பிள்ளைகளுக்கு நான் தேளா இல்லாம தேனா 'சுவைக்கப் பார்த்துக்குவேன்.

12. ஜெ. ரம்யா: போதைக்கு அடிமையான பேதை அப்பாவாக இல்லாமல் மேதைகளைப் பெற்ற அப்பா

18



19



20





21



22



23

என்று மற்றவர் சொல்லும் பேழையாய் இருப்பேன்.

13. சு.ரா. சந்தானலட்சுமி: கனவுகளைச் சுமக்கும் பருவத்தில், மகளின் கனவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசி... அவள் முன் காத்திருக்கும் கடமையையும் உணர்த்துவேன்.

14. மேஃப்ரித்: அம்மாவோட அப்பாகிட்டக் கூட 'டௌரி' வாங்காத அப்பாவா நானிருப்பேன். பெண் இழிவைப் 'பிரம்பெடுத்து'த் துரத்துவேன்.

15. எஸ். ரேணுகாதேவி: அப்பா என்ன சார் பெரிய அப்பா...? தாயிற் சிறந்தது எந்தக் கோயில்? தாயைப் போல் இருந்தே நற்பணியாற்ற இதை விட பெரிய சந்தர்ப்பம் எப்போ சார் வரும்...?

16. பி. அபிராமி: இன்றைய சூழ்நிலையில் நம் கல்வியைக் காசாக்கி விட்ட கள்ளன்களுக்குப் பாடம் கற்பிக்க துப்பாக்கி தூக்குவேன். நக்ஸலைட்டாக மாறுவேன். கல்விக்குக் காணிக்கை தரக் காசில்லாது ஏங்கும் சமுதாயத்தைத் தூக்கி நிறுத்த ஏதாவது செய்யத் தலைப்படுவேன்.

17. அ. ரம்யா: முதலில் 'மம்மி-டாடி' கலாசாரத்தை மூட்டை கட்டி பார்சல் செய்வேன். இனிமையான தாய் மொழியில் பிள்ளைகளைப் பேசச் செய்வேன். பேசும் பாஷை ஒண்ணு, படிக்கிற பாஷை ஒண்ணா? நான் தமிழ்க்குடிமகனாகவே மாறுவேன்.

18. ஜி. அமிர்தவல்லி: கட்டின மனைவியை நிச்சயமா அடிக்கவே மாட்டேன். ஏன் படிக்கலே.... ஏன் எழுதல... ஏன் ரேங்க் எடுக்கலன்னு குழந்தைகளை மென்னியப் புடிச்சுத் திருக மாட்டேன்.

19. பி. இராதாதேவி: அப்பாவா இருந்தாலும் எனக்குள்ளே அம்மாவோட தாய்மை உணர்வுகளை அரும்ப விடுவேன். அவள் படும் வேதனைகளை உணராத நான் அப்பாவாக இருப்பதில் அர்த்தமேயில்லை.

20. சி.ஆர். புவனேஸ்வரி: இந்நாட்டிற்குச் 'சிக்கனம்' தேவை 'இக்கணம்' என்பதை என் மனைவிக்கு அறிவுறுத்துவேன்.

21. மா. நர்மதா தேவி: நா அப்பாவா இருந்தா முதல்ல அப்பாவாக இருக்க மாட்டேன். அப்பா என்பதற்கான அர்த்தத்தையே தப்பா புரிஞ்சிருக்காங்க. நம்ம அப்பாக்கள் குழந்தைகளுக்குக் குழந்தையா, மனைவிக்கு மனைவியா, அம்மாவுக்கு அம்மாவா சேவகம் செய்யணும். அவர்தான் உண்மையான அப்பா!

22. எஸ்.ஆர். பிரதீபா: குழந்தைக அவங்க இயல்பிலே வாழப் பழகணும் சார். அதுக்கு முதல்ல வழி விடறதில்லே நம்ம அப்பாக்கள். அப்போத்தானே பிள்ளைகளுக்கு மனோ தைரியம் வளரும். வாழ்க்கை சாதாரணமாத் தெரியும். அதைச் செய்வேன்! அப்பா நானாயிருந்தா...

23. கார்த்திகா: இப்போதைய அப்பாக்களுக்கு என்ன சார் குறைச்

24



25



26





27



28



29

சல்...? அன்பு, காட்டறதுல குறையா, அரவணைக்கிறதுல குறையா? என்ன... கொஞ்சம் சுதந்தரமா விடறதில்லே... அதை வேணும்னா சரி பண்ணிக்குவேன்.

24. ஹ. சையது ராபியா பேகம்: ஒழுக்கத்தை விதிக்கணும்; எய்ட்ஸை தடுக்கணும்; குடிப்பவனை உதைக்கணும். அதுக்கு நீங்க இப்படி வெறும் 'அப்பா போஸ்ட்' மட்டும் கொடுத்தா போதாது... அதிகாரமுள்ள பெரிய போஸ்ட்டா ஏதாச்சும் கொடுங்களேன்.

25. எம். தனலக்ஷ்மி: ஆடையில் இல்லை அழகு; கற்கும் கல்வியிலும் இல்லை அறிவு - நம் ஒழுக்கத்தில்தான்... நாம் காட்டும் கனிவில்தான் என்பதை என் பிள்ளைகளுக்காவது உணர்த்தி வளர்த்துவேன்.

26. மதிவதனா கோகிலவாணி: ஒய்ஃபை வேலைக்கு அனுப்பிட்டு, துணிமணி துவைத்து, சமையல் செய்து, குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைத்துவிட்டு 'ஹாயாக' நம் 'டி.வி சீரியலை பார்த்துட்டு சுகஜீவியா இருந்திருப்பேன். ம்... பொண்ணா பொறந்துட்டேனே...."

27. எஸ். ஜெகஜோதி: பையன்னா சுத்தமா கை கழுவி, தண்ணி தெளிச்சு சாமி மாடா சுத்த விடறது... பொண்ணுன்னா மட்டும் 'டாய்... டு'ய்'ன்னு கண்டிப்புக் காட்டறது. ம், அப்படிப்பட்ட அப்பாவா மட்டும் நான் இருக்கவே மாட்டேன்.

28. ப்ரியா நாராயணன்: என் பிள்ளைகளை கோ-எஜுகேஷன் கல்லூரியிலதான் படிக்க வைப்பேன். நம்ம குழந்தைக வாழ்க்கையப் படிக்க அதுதான் வழி. 'பொண்ணுகளைக் கண்டா ஈன்னு இளிக்கறது, 'ஜொள்ளு' விடறது இதெல்லாம் வாழ்க்கைக்கே முட்டுக்கட்டை. கோ-எட்ல படிச்சா அதெல்லாம் சாதாரணம் ஆயிடும் இல்லையா!

29: சங்கீதா: குழந்தைக மேல அதிகமா கட்டுப்பாடு விதிக்க மாட்டேன். சொல்லிக் கொடுத்த கல்வியும், கட்டிக் கொடுத்த கட்டுச் சோறும் எத்தனை நாளைக்கு வரும். அதனால நல்லதோ கெட்டதோ பிள்ளைகளை அவரவர் போக்குல விட்டுடுவேன். அவர்கள் பட்டுத்திருந்தணும். அதுதான் வாழ்க்கை.

30. ரோஸ்சூரியன்: பிள்ளைகளுக்கு படிப்பைப் புகட்டறதை விட சின்ன வயசுலேர்ந்தே நான் பட்ட துன்பங்களை அடிப்படையிலேயே ஊட்டி தலைமுறை இடைவெளி இல்லாம பார்த்துக்குவேன்.

31. Sister சாந்தி அமலோன்:

இங்கே -
இதயத்துள் இருக்கும்
இந்தியாவில் இமயம் வரைக்குமே
ஏராள அக்கினிச் சுவடுகள்...
இந்தத் தாயின் தூய உடம்பில்கூட
எண்ணிறைந்த துவாரங்கள்...!
ஐயா...
தன் மௌனத்தின் ஆழத்தில்
பொங்கும் கண்ணீரைப் புதைத்த
அன்னையைக் காக்க
அனுப்ப வேண்டும்
என் மகனை
- அது அப்பாவாக
நானிருந்தால் மட்டும்
சாத்யம்!

30



31



பேட்டி:
கா.சு. வேலாயுதன்

மாவீரன் பகத்சிங்



• நாடகத்தில் ஒரு காட்சி

மாஜிஸ்திரேட் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை அளிக்குமாறு தீர்ப்பளிக்கிறார். குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இளைஞர்களில் ஒருவன் கண்கள் சிவக்க, உதடு துடிக்க, படபடப்பாக "நீதிமன்ற தீர்ப்புப்படி நாங்கள் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து யுத்தம் புரிந்தவர்கள். சமூக விரோதிகளைப் போல் தூக்கில் போடாமல் ராணுவ வீரர்களை வரவழைத்து சுட்டுத் தள்ளுங்கள், இதுவே எங்கள் கடைசி ஆசை, எந்த ஒரு புரட்சிக்காரனும் இதைத்தான் விரும்புவான்!" என்று கதறுகிறான். அந்த இளைஞன் பகத்சிங்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், 'சப்தம்' கலைக்குழு, சுதந்தரப் பொன் விழா ஆண்டை ஒட்டி, சென்னையில் நடத்திய 'மாவீரன் பகத்சிங்' நாடகத்தில் ஒரு காட்சிதான் மேலே குறிப்பிட்டது.

நாடகத்தை உருவாக்கி, இயக்கி, பகத்சிங்காகவும் நடித்துள்ளவர் கே. கண்ணன்.

"பகத்சிங்கைப் பத்தி தமிழ்ல அவ்வளவா மேடை நாடகம் வரலை. எழுபதுக்கு முன்னாடி அறந்தை நாராயணன் 'இன்குலாப் ஜிந்தாபாத்'னு ஒரு நாடகம் போட்டிருக்கார். அதுவுமில்லாம மக்கள் மத்தியில பகத்சிங் ஒரு தியாகிங்கறதை விட, ஒரு தீவிரவாதியாத்தான் அடையாளம் காணப்பட்டிருக்கார். அந்தக் கருத்துல எனக்கு உடன்பாடு இல்லை. சுதந்தரத்துக்காக மகாத்மா காந்தி ஒரு வழியில போராடினார். நேதாஜி, பகத்சிங் போன்றவங்க இன்னொரு வழியில போராட்டம் நடத்தினாங்க. ஆள் நடமாட்டம் இல்லாத பாராளுமன்ற வளாகத்துல, டம்மி வெடிகுண்டைப் போட்டுட்டு, துண்டுப் பிரசுரங்களை வீசி எறிஞ்சுட்டு, தப்பி ஓட முயற்சிக்காம, சிரிச்சபடி விலங்குக்காகக் கையை நீட்டின பகத்சிங் என்னை ரொம்பவே பாதிச்சுட்டார். இதையெல்லாம் இந்த நாடகத்துல தெளிவாவே சொல்லியிருக்கிறேன்'' என்றார் கண்ணன்.

நாடகத்தில் குறைகளில்லாமலில்லை. ஒவ்வொரு காட்சிக்கும் இடையில் மகா இடைவெளி, காட்சிகளின்போது நடிகர்களின் தடுமாற்றம், ("ரெண்டு மூணு பேரைத் தவிர, மற்ற யாருக்குமே மேடை நாடக அனுபவம் இல்லை சார்" என்கிறார் கண்ணன்) நாடகத்தை காட்சிப்படுத்தலில் ஒழுங்கின்மை, இருந்தாலும் குறையாகப் படவில்லை. காரணம், நம்மை நெகிழ்த்தி விடுகிற ஒரு தியாகியின் சரித்திரம்.

ஒரு காட்சியில், லாக்கப்பில் வைத்து பகத்சிங்கையும், அவன் தோழர்களையும் போலீஸார் அடிக்கையில், பார்வையாளர்கள் மத்தியிலிருந்து, "எங்க அப்பாவை அடிக்காதீங்க! அடிக்காதீங்க!" என்ற ஒரு குழந்தையின் குரல் வீரிட்டது. அந்தக் குழந்தை கண்ணனின் மகள் வெண்மணி ப்ரியா!

— கே. பாலசுப்ரமணியன்

எழுதியவர்கள் பேசுகிறார்கள்!

'இன்ப அதிர்ச்சி' என்று தொடங்கி, பன்னிரண்டு வருட யுத்தம், முயற்சி, தவம், வளர்ச்சி, பயிற்சி, காத்திருப்பு, கனவு, ஏக்கம் என்று விதவிதமாக வர்ணிக்கிறார் நாராயணி கண்ணகி.

எதை? அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறப்புச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதையை!

தமது 'இல்லறத் துறவி'யில் இவர் கையாண்ட விஷயமும் பயன்படுத்திய மொழி நடையும் வாசகர்களைக் கொள்ளை கொண்டு போனது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் ஒவ்வொரு வருடமும் கல்கி சிறுகதைப் போட்டிக்கு எழுதி எழுதித்தான் இவர் கதை எழுதவே கற்றுக் கொண்டிருக்கிறார் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? அப்படித்தான் சொல்கிறார் இந்த ஜோலார்பேட்டைக்காரர்.

பத்து நாவல்கள். ஐந்து குறுநாவல்கள், நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எனப் பிரகாம் பார்த்துள்ள நாராயணி கண்ணகிக்கு சினிமா ஆசையும் இருக்கிறது.

"பல வெற்றிப் படிகளை எட்டும் உத்வேகத்தையும் நம்பிக்கையையும் இப்போது எனக்குக் கல்கி அளித்திருக்கிறது" என்கிறார்.



• நாராயணி கண்ணகி

இரண்டாம் பரிசு பெற்ற 'சாதாரணம் அல்ல', சாதா கதை அல்ல என்று ஏராளமான வாசகர்கள் எழுதியிருந்தார்கள்.

"இந்தக் கதை, ஒரு நிறுவனத்தில் நிஜமாகவே நடந்ததாகக் கேள்விப்பட்ட சம்பவத்தின் பாதிப்புதான்" என்று சொல்லும் அருண் சரண்யா, கல்கி மட்டுமல்ல; அனைத்துத் தமிழ்ப் பத்திரிகை வாசகர்களுக்குமே மிகவும் அறிமுகமானவர். ஜி.எஸ்.எஸ். என்றால் புரியும். கல்கியில், 'அட, இதுல இவ்ளோ விஷயம் இருக்கா?' விகடனில் 'பிரச்னை பூமிகள்', தினமணி கதிரில் 'பார்த்திருக்கிறோமே' என இவர் எழுதிய கதையல்லாத தொடர்களும் ஏராள வாசகர்களின் பாராட்டுகளைப் பெற்றவை.



• அருண் சரண்யா

"கல்கி பரிசு, என் எழுத்துக்குப் பெரும் அங்கீகாரம்; அளவிட முடியாத உற்சாகம்" என்று சொல்லும் இந்த பேங்க் ஆஃப் இந்தியாக்காரர் ஒரு புதிர் மாஸ்டரும் கூட! அதாவது, பத்திரிகை, டீவிக்களில் க்விஸ் வழங்குவதில் பதின்று கொ. போட்டவர்.



• ரவி பாலாஜி



'மனிதர்கள்' - மூன்றாவது பரிசுக் கதைக்குரிய அறிமுக எழுத்தாளர் ரவிபாலாஜிக்கு வயது 23தான்! வயதில் இல்லாத முதிர்ச்சி எழுத்தில் இருப்பது - அதுவும் முதல் கதையில் - பெரிய விஷயம்தானே? இந்

திய விமானப் படையில் தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றும் இந்த திண்டுக்கல் இளைஞர், "பாடம் மட்டும் படிக்கச் சொல்லி வற்புறுத்தாத பெற்றோருக்கும் என்னுள் எழுத்தார்வத்தை விதைத்த நண்பர்களுக்கும் கிடைத்த வெற்றி இது" என்று குறிப்பிடு கிறார்.

'கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்' என் கிறார் இன்னொரு மூன்றாம் பரிசுக்காரரான பலராம் செந்தில்நாதன். கோவை குண்டு வெடிப்பையும் தொடர்பான அவலங் களையும் அருகிருந்து பார்க்கக் கிடைத்த வாய்ப்பை வீணாக்காமல், 'ஒரு உறவும் சில நிகழ்வுகளும்' கதையில் உருக்கமாகப் பதிவு செய்திருக்கும் இந்த கவுண்டம்பாளையத் துக்காரர், "சுஜாதாவை திரும்பத் திரும்பப் படித்து என்னை சார்ஜ் செய்து கொள்வேன்" என்கிறார்.

சென்ற ஆண்டு சுஜாதா கல்கியில் 'மீண்டும் மத்யமர்' கதைகள் எழுதி, அது தொடர்பாக நடந்த சிறுகதைப் போட்டியில் இவரது கதை யும் சுஜாதாவால் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பெரிய பெருமையாகக் கருதுகிறார் பலராம் செந்தில்நாதன்.

"முதல் பரிசு எதிர்பார்த்தேன். ஆறுதல் பரிசுதான் என்றாலும் மகிழ்ச்சியே. ஏனெனில் பரிசு என்று பெறுவது இதுவே முதல் முறை" என்று குறிப்பிடும் வி. பிரசன்னகிருஷ்ணனுக்கு வயது 22தான். சி.ஏ. படித்துக் கொண்டிருக்கும் இவரது முதல் கதை வெளியானது விகடனில்.

"அநேகமாக அனைத்துப் பத்திரிகைகளிலும் சிறியதும் பெரியதுமாக நிறையவே என் படைப்புகள் வந்து கொண்டிருக்கின் றன" என்று குதூகலிக்கிறார் இந்த தி. நகர் வாசி.



• பிரசன்ன கிருஷ்ணன்

நமக்கும் குதூகலம் தான். காரணம், இவ் வாண்டு பரிசுகளை அள்ளிச் சென்ற அத் தனை பேரும் இளை ஞர்கள்! பரிசு பெற் றோரை வாழ்த் துகிறோம். வென் றதற்காகவும், இனி வெல்லப் போவ தற்காகவும்!

- ஆசிரியர் குழு



ஃபைவ் ஸ்டார் ஜெயில்!

ஜெயில் கைதிகளுக்கு, ஒரு ஸ்டார் ஓட்டலில் கிடைக்கக் கூடிய அனைத்து வசதிகளுடன் ஒரு ஜெயில் கட்டப்படுகிறதென்றால் மிகவும் ஆச்சர்யமாக இருக்கும்... ஆனால் உண்மை. துபாய் நாட்டு பணக்கார, வியாபார கிரிமினல்களுக்காக கட்டப்படும் இந்த ஜெயிலில் ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட ''செல்கள்'' உடற்பயிற்சி செய்து கொள்ள ஒரு ''ஜிம்'', சினிமா தியேட்டர், ஃபேக்ஸ் மெஷின்கள், கம்ப்யூட்டர்கள், தொலைபேசி மற்றும் இண்டர்நெட் வசதிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது.


இவ்வளவு ஆடம்பர வசதிகளை செய்து தரக் காரணம்... துபாயில் பெரும்பாலான கைதிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பெரும் வியா பாரிகள் மற்றும் தொழிலதிபர்கள். இவர்கள் தங்கள் வியாபாரங்களைத் தொடர்ந்து நடத்தவும், அவர்கள் குடும் பங்களுக்கு உதவவும் மேலும் இதன் மூலம் நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இந்தச் சிறை ஊக்குவிக்கும்!

— பெங்களூர் அ. சங்கரன்

7 சோனாலி இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் மால்ப்பே என்னும் இடத்துக்குப் பக்கத்து ஊரில் பிறந்தவள். பள்ளியில் படித்ததெல்லாம் மணிபாலில். கல்லூரிக்கு மங்களூர் சென்று அந்த நகரத்தின் குறைந்த அளவு சந்தோஷங்களில் திருப்தியடையாமல், படிப்பைப் பாதியில் நிறுத்தி (ஒரே பெண் என்பதால் சலுகை, அவள் தந்தை ராணுவ ஆபீசர்) பெங்களூரை நாடி மவுண்ட் கார்மெல் காலேஜில் சேர்ந்து, அதன் நவநாகரிக சூழ்நிலையில் ஆங்கில உச்சரிப்பும் தோற்றமும் திருத்தப்பட்டு, கூடவே ப்ரதிமா பேடியின் பள்ளியில் ஒடிசி நடனமும் கொஞ்சம் பரத நாட்டியமும் பயின்று, மெல்ல பம்பாயின் ஃபாஷன் உலகத்துக்கோ, சென்னைக்கோ அல்லது குறைந்தபட்சம் ஒரு டீ.வி. தொடருக்கோ இடம்பெயரும் உத்தேசத்துடன் தான் காத்திருந்தாள்.

அதனால் அவளுக்கு மைய பாதுகாப்பு பிரிவின் அரசு ஆராய்ச்சி நிறுவனத்தில் யாரோ மனுப்போடச் சொல்லி, விளையாட்டாக இண்டர்வ்யுவுக்குச் சென்றாள். புன்னகைகளாலேயே பதில்களை மழுப்பி, டைரக்டர் (லெட்ஸ் ஹேவ் ஸம் ப்ரெட்டி ஃபேஸஸ் இன்திஸ் லாப் என்கிற) விருப்பத்தில் லாப் அசிஸ்டண்ட் வேலை கிடைத்தபோதே தயக்கத்துடன்தான் ஒப்புக்கொண்டாள். கொஞ்ச நாள் இருந்து பார்க்கலாமே, நல்ல சம்பளம். மாலை வேளைகளில் தியேட்டர் க்ருப்களுக்கு செல்லலாம் போன்ற காரணங்களால் நீடித்தாள்.

எல்லா ஆண்களுடனும் சரளமாகப் பழகுவாள். அவர்கள் எதிர்பார்த்தபடியே அசடு வழிவார்கள். ஆனால் ஆனந்தை அவள் எதிர்பார்க்கவில்லை. முதல் முறையாக அவள் மனம் ஆனந்தால் பாதிக்கப்பட்டு, கலைந்த



தலையும் கெட்டிக் கண்ணாடியும் இத்தனை வயசாகியும் அவனை மார்போடு வைத்து ஆறுதல் சொல்லி தடவிக் கொடுக்க வேண்டும் என்று அவன் கிளப்பும் தாய் உணர்ச்சிகளும் ஆனந்தை மணந்தால் தன் வாழ்க்கையில் ஒரு ஸ்திர நிலையும் அதே சமயம் தன் இஷ்டப்படி செயல்படும் சுதந்தரமும் கிடைக்கும் என்று எப்படியோ கணித்து, அவனை பயங்கரமாக கவர முயற்சித்தாள். ஆனால் எப்



படியோ ஆரம்பித்தது எப்படியோ போய் அவன் பாரதியை மணக்கும் வரை திசை திரும்பி வேறு கதையாகிவிட்டது.

"நான் அந்த லாப் போறதில்லை ஸார். அர்ரியர்ஸ் கூட இருக்கு. ஆனந்த் கல்யாணம் ஆன மறுதினமே நான் ராஜினாமா செய்து விட்டேன் ஸார்" என்றாள், ப்ரபாகர்ராவிடம். அவள் அவர்கள் எதிரே கால்மேல் கால்போட்டு, தேனீரை உறிஞ்சாமல் கறுப்புச் சாயம் பூசிய நீண்ட விரல்களால் மிகை-சைகை செய்து பேசியதை ப்ரபாகர்ராவ் கவனித்தார்.

"ஆனந்த் கொலை செய்யப்பட்டது தெரியுமா உங்களுக்கு?"

"தெரியும். ஒருநாள் பூரா கண்ணீர் சிந்தினேன்."


"ஏன்?"

"ஒரு சமயத்தில் நாங்க நெருக்கமா இருந்தோம்."

"அவரை யார் கொன்னிருக்க முடியும்னு நீங்க நினைக்கிறீங்க?"

"எனக்கு சொல்லத் தெரியலை சார். சூய்ஸைடுங்கறாங்க?"

"இல்லை. சுட்டுக் கொல்லப்பட்டிருக்கார்."



சங்கர், "மிஸ் சோனாலி, ஆனந்த் பாரதியை கல்யாணம் பண்ணிக்கிட்டபோது நீங்க ஒருவாறு ஏமாற்றப்பட்டதாக, அதனால் ரொம்ப கோபப்பட்டதாச் சொல்றாங்க."

"ஏமாற்றப்பட்டேன். ஆனந்த் என்னை ஒருமுறை ப்ரபோஸ் பண்ணியிருந்தார். நான்தான் தள்ளிப்போட்டிருந்தேன். அதனால வருத்தப்பட்டேன். கோபப்படலை."

"லாப்ல எல்லார் முன்னாலயும் சத்தம் போட்டீங்களாம்?"

"யார் சொன்னாங்க?"

"டாக்டர் சோமசுந்தரம்."

"அந்தாளை நம்பாதீங்க. அவருக்கு என் மேல ரொம்பக் கோபம்."

"ஏன்?"

சோனாலி தயங்கினாள்.

"காரணம் கொஞ்சம் மோசமானது."

"சொல்லுங்க பரவாயில்லை."

"சோமசுந்தர் என்னை ஒரு முறை பலாத்காரம் பண்ணப் பார்த்தார். கன்னத்தில் அறைஞ்சுட்டேன். மறுதினமே டைரக்டர்கிட்ட புகார் கொடுத்தேன். அவர் அதை பெரிசு பண்ண வேண்டாம். அட்மின்ல சொல்லி லாப் மாத்திர்றேன். ஆனந்த் கீழ ஒர்க் பண்ணுனு சொன்னார். அவர் கீழ் பணிபுரிய ஆரம்பிச்சேன். அதனால அவருக்கு என்மேல கடுப்பு. என்ன வேணுமானாலும் பொய் சொல்வார். ஆனந்துக்குக் கிடைக்க வேண்டிய அவார்டை அவர் பறிச்சுக்கிட்டாரு. இது பற்றி ஆனந்த் ஒப்பனாவே சண்டை போட்டிருக்கிறார்."

"தெரியும்."

"இப்ப கேட்டீங்களே யாரு ஆனந்தை கொன்னிருக்க முடியும்னு அவர் நிச்சயம் கொன்னிருக்க முடியும். அவ்வளவு வெறுப்பு ஆனந்த் மேல."

"சோனாலி நீங்க துப்பாக்கி ஏதாவது வாங்கினீங்களா?"

அவள் சற்றும் தயங்காமல், "துப்பாக்கியா, அது எப்படி இருக்கும்னே தெரியாது சார் எனக்கு" என்றாள்.

"பெங்களூர் ஆர்மரியில உங்க பேர்ல- பாயிண்ட் த்ரீஎய்ட் துப்பாக்கி வாங்கினதா ரிஜிஸ்தர்ல பதிஞ்சிருக்கு."

"புரியலை. பாயிண்ட் திரி எய்ட்னா என்ன? விலையா?"

"இல்லை; துளை. போர் ஸைஸ். உங்க பேரு அட்ரஸ் எல்லாம் இருக்கு. அதைப் பாத்துத்தான் உங்களை நாங்க சந்திக்க

சுஜாதா

வந்தோம்."

"அவ்வளவு தூரம் போயிருக்க வேண்டாம். ஆபிஸிலேயே என் அட்ரஸ், போன் நம்பர் எல்லாம் இருக்கே."

"துப்பாக்கி நீங்க வாங்கலைங்கறீங்க?"

"சேச்சே! இல்லை ஸார்!" என்றாள் தயங்காமல்.

"பின் உங்க பேரு விலாசம் எப்படி அங்க..."

"அதுதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு!" என்ற அவள் கண்களில் உண்மையாகவே கவலையும் ஆச்சரியமும் தெரிந்தன. பொய் சொல்கிறாள் என்றால் பெரிய நடிகை என்று ப்ரபாகர்ராவ் யோசித்தார்.

இருந்தும் இந்த வினோதமான கேஸில் அவள் நிஜம் சொல்லவும் சாத்தியம் இருக்கிறது.

"அப்ப யாராவது உங்க பேர்ல அந்த துப்பாக்கியை வாங்கியிருக்கலாம்னு சொல்றீங்க?"

"அப்படித்தான் இருக்கணும் ஸார். எனக்குத் துப்பாக்கி தேவையில்லை. மற்ற ஆயுதங்கள் இருக்கு என்கிட்ட!" என்று கண் சிமிட்டினாள்.

அவை என்னவென்று சங்கர் கேட்க விரும்பினார். அதற்குள் ப்ரபாகர்ராவ், "வா சங்கர் போகலாம். நீங்க சமீபத்தில் பெங்களூர் விட்டுப் போறதா இல்லையே?"

"இல்லை. எப்ப வேணா போன் பண்ணிட்டு வாங்க."


"டான்ஸ் ஸ்கூல் நடத்தறது?"

"டி.வி. நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து என் மனைவி பார்க்கப்போய் என் நாக்கு செத்துப் போச்சு!"

"அதெப்படி?"

"இட்லி வாரம், பொங்கல் வாரம், உப்புமா வாரம், தோசை வாரம்னு கொண்டாட ஆரம்பிச்சுட்டா!"

— லலிதா செல்லப்பா



"நான்தான். எனக்கு டான்ஸ்ல கொஞ்சம் இஷ்டம் உண்டு. லாபை விட்டு விலகி அப்புறம் இதுதான் என் பிழைப்பு."

அவர்கள் போனதும் சோனாலி தன் அறையிலிருந்து சன்னல் திரையை விலக்கி அவர்கள் போவதைப் பார்த்து, உடனே டெலிபோனுக்குத் தாவினாள்.

"கண்டீரவா ட்ராவல்ஸ்?"

••• ••• •••

ப்ரபாகர்ராவ், "என்ன இப்படிச் சொல்றா?" என்றார்.

"உண்மை சொல்றான்னுதான் தோணுது."

"அந்த ரிஜிஸ்டர்ல எதாவது கையெழுத்து இருந்ததா, பார்த்தியா சங்கர்?"

"இல்லை ஸார்."

"முதல்ல கிழவன் கிட்டபோய் ரசீது புத்தகம் ஏதாவது இருக்கான்னு பார்த்துரு. அல்லது டிலிவரி சலான் ஏதாவது இருக்கா, அதில கையெழுத்து இருக்கான்னு பார்க்க வேண்டியது முக்கியம். குறிப்பா ஒரு பெண் பிள்ளை-வந்து துப்பாக்கி வாங்கிட்டுப் போனா அவருக்கு நிச்சயம் ஞாபகம் இருக்கும். பொண்ணு பொய் சொல்லுதோன்னு தோணுது. எதுக்கும் மஃப்டியில் அவளுடைய நடமாட்டங்களை கண்காணிக்கச் சொல்லுங்க."

"எனக்கென்னவோ டாக்டர் சோமசுந்தரை விட்டு சந்தேகம் விலகவே இல்லை ஸார்."

"நான் இப்ப யாரையும் சந்தேகப்படற நிலையில் இல்லை. கேஸ் குழப்படியாவுது. துப்பாக்கியில் விரல்ரேகை இருக்கும் இல்லை?"

"கிடைக்கலை ஸார். துடைச்சு வச்சிருந்தது."

"அதிலிருந்து என்ன தெரியுது?"

"திட்டமிட்டுச் சுட்ட குண்டுன்னு."

"இல்லை. அது சூய்சைடு இல்லைன்னு, ஒண்ணு கவனிச்சியா சங்கர்? ஜமதக்னிக்கு சோமசுந்தர் மேல வெறுப்பு. சோமசுந்தருக்கு சோனாலி மேல வெறுப்பு. இப்படி ஒருத்தரை ஒருத்தர் சங்கிலி போல குற்றம் சாட்டறாங்க. எல்லாருமே பேசி வச்சிருப்பாங்களோ!"

••• ••• •••

ப்ரபாகர்ராவ் நிருபதுங்கா ரோடில் இருக்கும் தன் அலுவலகத்துக்குச் செல்லும் முன் சட்டென்று மனம் மாறி, "பாரதியை பார்த்துட்டு வந்துரலாம்" என்றார்.

"துக்கம் கொஞ்சம் தணிஞ்சிருக்கும்னு நினைக்கிறீங்க?"

"இந்த சோனாலி மேட்டரை கேட்டுரலாம்னு தோணுது."

"இது தக்க சமயமா தோணலை ஸார். அந்தம்மா ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு ப்ரேக்டவுன் ஆயிட்டாங்கன்னா."

"இல்லை சங்கர். காத்ல பறக்கறா மாதிரி இருந்தாலும் அவங்க உள்ளுக்குள்ள கொஞ்சம் வலுவானவன்னுதான் எனக்குத் தெரியுது. சும்மா அவங்க இண்டராகேஷனை தள்ளிப் போட்டுக்கிட்டே போறதில் அர்த்தம் இல்லை. குறைந்தபட்சம் ஒரு தேதியாவது வாங்கிட்டு வரலாம்."

பணசங்கரியில் அந்த வீடு மிக மௌனமாக இருந்தது. வாசலில் ஒரு மாருதி கார் நின்று கொண்டிருந்தது. வாசல் கதவு திறந்து பல செருப்புக்கள் கிடந்தன. பாரதியின் தந்தை சந்திரசேகர் வரவேற்றார். "முன்னா" என்று கூப்பிட்டார். மாடியறையிலிருந்து ஓர் இளைஞன் சாந்த சோக முகத்துடன் வந்து அவர்களை சந்தித்துக் கைகுலுக்கி உட்காரச் சொன்னான் சந்திரசேகர்.

"திஸ் இஸ் முன்னா. என் மனைவியின் கஸின் பிரதர். பிரபாகர்ராவ். ஆனந்தின் கேசை இவர்தான் விசாரிக்கிறார்."

"நீங்க என்ன பண்றீங்க?"

"டிஐஎல ஸாப்ட்வேர் என்ஜினியரா இருக்கேன். விஎல்எஸ்ஐ டிஸைன்."

"முன்னாங்கற பேரு?"

"செல்லப்பேரு. கால் மி சேகர்."

பாலித்தின் உறை பிரிக்காமல் ஒரிரு மெத்தைகள் ஹால் மூலையில் கிடந்தன. ப்ரபாகர் ராவ் அவைகளை கவனிப்பதை சேகர் கவனித்து, "ஆனந்தும் பாரதியும் வேற வீடு மாத்தறதா இருந்தாங்க. பெரிய வீட்டுக்குப் போறதா போன மாசம் தான் தீர்மானிச்சாங்க. அதுக்குள்ள...ப்ச்"...

"பாரதியை பார்க்கணுமா?" என்றார் தந்தை.

"ஆமாங்க. அவங்க எங்களைச் சந்திக்கிற மூடில இருந்தா, பேசற நிலையில இருந்தா சரி. இல்லைன்னா எப்ப வரலாம்னு..."

"இல்லை இல்லை. போலீசுக்கு ஒத்துழைக்க வேண்டியது முக்கியம். நீங்க அவளைக் கேக்கலாம். ஆனா ஆனந்த் சாவைப் பற்றி மட்டும் அடிக்கடி ஞாபகப் படுத்தாதீங்க. ஷி இஸ் இன் ஷாக்."

பாரதி மாடியிலிருந்து இறங்கி வந்தாள்.

(தொடரும்)

92 வயது எழுத்தாளர்!

ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்களில் மிகவும் பிரபலமானவர் முல்க் ராஜ் ஆனந்த். 92 வயதிலும் தொடர்ந்து எழுதி வரும் இவர் மகாத்மா காந்தியுடன் நெருங்கிப் பழகியவர். சபர்மதியில் மூன்று மாதம் அவருடன் தங்கியிருந்தபோது தான் தம்முடைய முதல் நாவலான "UN TOUCHABLE" ஐ எழுதினார். அதனை காந்தியிடம் படித்துப் பார்க்கவும் கூறினார். சிரத்தையாக படித்து முடித்த காந்தி, "ஒடுக்கப்பட்டவர்கள் நீங்கள் எழுதியபடி... பெரிய பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்த மாட்டார்கள். மாறாக அவர்கள் பேச்சில் எளிமை இருக்கும்" என்றார். உடனே அதே நாவலை திரும்ப எழுதினார் முல்கி. இந்த நாவலுக்கு முன்னுரை எழுதியவரும் ஒரு பிரபலமானவர்தான். அவர் பிரபல ஆங்கில நாவலாசிரியர் ஈ.எம். ஃபார்ஸ்டர்.



• மனைவியுடன் முல்க் ராஜ் ஆனந்த்

இந்த நாவல் வெளி வந்ததும், காந்தி இவரை இந்தியா முழுவதும் ஒரு வருடம் சுற்றுப் பயணம் சென்று வரும்படி கூறினார். முல்கியும் அதை சிரமேற் கொண்டு ஒருவருடம் சுற்றுப் பயணம் செய்தார். விளைவு 7 நாவல்கள் உருவாயின.

இரண்டாவது நாவலாக "கூலி" (Coolie) வெளிவந்தது. முல்கியின் பெயர் மிகப் பிரபலமாயிற்று. ஒரு லட்சம் பிரதிகள் விற்றன. இந்த நாவல் 28 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. ஆனால் இந்தியாவில் மூன்று அல்லது நாலு மொழிகளில் மட்டுமே மொழி மாற்றம் செய்யப்பட்டதாம்!

இன்றுவரை 40 நாவல்கள் மட்டுமே எழுதியுள்ளார்.

தகவல்: **வி.ஆர். கிருத்திகா**

பொன்னியின் செல்வன்

பூர்வ கதை

இராஜராஜசோழன் என்று சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற அருள்மொழி வர்மனின் தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி நோய்ப்பட்டுத் தஞ்சை அரண்மனையில் படுத்த படுக்கையாகக் கிடந்தார். அருள்மொழி வர்மன் ஈழநாட்டில் சோழப் படைகளுக்குத் தலைமை வகித்துப் போர் நடத்தி வந்தான். சுந்தர சோழரின் மூத்த புதல்வனான ஆதித்த கரிகாலன் காஞ்சியில் இருந்தான். அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்று அவனுக்கு முன்னமே இளவரசுப் பட்டம் கட்டியிருந்தது.

சுந்தர சோழரின் பெரிய தந்தை சிவஞான கண்டராதித்தருக்கு மதுராந்தகன் என்று ஒரு குமாரன் இருந்தான். சுந்தர சோழருக்குப் பிறகு மதுராந்தகனே பட்டத்துக்கு வர வேண்டுமென்று சோழ சாம்ராஜ்யத்தில் செல்வாக்குள்ள பிரமுகர்கள் சிலர் கருதி அதற்கான பிரயத்தனமும் தொடங்கியிருந்தார்கள்.

தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர், தஞ்சைக் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட்டரையர், கடம்பூர் செங்கண்ணன் சம்புவரையர், மழபாடி மழவரையர் முதலிய சிற்றரசர்களும் பெருந்தரத்து அதிகாரிகளும் மேற்கூறிய பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆதித்த கரிகாலன் காஞ்சியில் பொன் மாளிகை கட்டினான். சுந்தர சோழ சக்கரவர்த்தி காஞ்சிக்கு வந்து அப்பொன் மாளிகையில் சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்று தந்தைக்கு ஓலை அனுப்பினான். இளவரசனின் ஓலையை எடுத்துக் கொண்டு வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் இளம் வீரன் தஞ்சைக்குப் புறப்பட்டான். வழியில் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் ஓரிரவு தங்கிய போது ஆதித்த கரிகாலனுக்கு எதிரான சதியைப் பற்றித் தெரிந்து கொண்டான்.

கல்கி கலெக்ஷன்

சதியில் ஈடுபட்டிருந்த சம்புவரையரின் குமாரன் கந்தமாறன், வந்தியத்தேவனுடைய பழைய நண்பன்.

கடம்பூருக்கு அருகில் வீரநாராயணபுரத்தில் ஆழ்வார்க்கடியான் நம்பி என்ற வீர வைஷ்ணவனை வல்லவரையன் சந்தித்தான். சம்புவரையர் மாளிகையில் நடந்த சதியாலோசனைக் கூட்டத்தை அந்த வீர

அமரர் கல்கி

வைஷ்ணவன் மதில் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்ததை வந்தியத்தேவன் பார்த்தான்.

பெரிய பழுவேட்டரையர் முதிய வயதில் நந்தினி என்னும் இளம் பெண்ணை மணம் புரிந்து கொண்டிருந்தார். அவளைப் பற்றி முதலில் ஆழ்வார்க்கடியான் மூலமாக வல்லவரையன் தெரிந்து கொண்டான். தஞ்சைக் கோட்டைக்கருகில் அவளைப் பார்த்தான். அவள் கொடுத்த பழுவூர் முத்திரை மோதிரத்தின் உதவியால் கோட்டைக்குள் புகுந்தான். சுந்தர சோழ சக்கரவர்த்தியைச் சந்தித்து ஆதித்த கரிகாலரின் ஓலையைக் கொடுத்தான். சதியாலோசனையைப் பற்றி அரசரிடம் தெரிவிக்க முயன்றும் முடியவில்லை. சின்னப் பழுவேட்டரையர் அவன் மீது சந்தேகங் கொண்டு காவலில் வைத்தார். தஞ்சைக் கோட்டையிலிருந்து தப்பித்துச் செல்ல வந்தியத்தேவன் முயன்ற போது பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையில் புகுந்தான். அதே சமயத்தில் அந்த நிலவறை வழியாகக் கந்தமாறன், மதுராந்தகனைப் பழுவூர் அரண்மனையில் சேர்த்துவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தான். சுரங்க வழியின் காவலன் கந்தமாறனுடைய முதுகில் குத்தியதைக் கண்டு, வந்தியத்தேவன் அவனைக் காப்பாற்றிக் கோட்டைக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்த்தான். ஆனால் கந்தமாறனோ தன்னை முதுகில் குத்தியவன் தன் நண்பனாகிய வந்தியத்தேவனே என்ற எண்ணத்தில் இருந்தான்.

தஞ்சைக் கோட்டையிலிருந்து வந்தியத்தேவன் குடந்தைக்கருகிலிருந்த பழையாறை நகருக்குச் சென்றான். சோழர்களின் இந்தப் பழைய தலைநகரில் சுந்தர சோழரின் அருமைப் புதல்வியாகிய குந்தவைப் பிராட்டியும், சிவஞான கண்டராதித்தரின் மனைவியாகிய செம்பியன் மாதேவியும், மற்றும் பல அரண்மனைப் பெண்டிரும் இருந்தனர். ஆதித்த கரிகாலன் குந்தவை தேவிக்கும் ஓர் ஓலை கொடுத்து அனுப்பி அவள் ஏவிய பணியைச் செய்யுமாறு வந்தியத்தேவனுக்குக் கட்டளையிட்டிருந்தான். வழியில் குடந்தை சோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங்கரையிலும் குந்தவையை வந்தியத்தேவன் சந்தித்து அவளிடம் தன் இளம் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தான். சோழ குலத்து இளவரசி அவள்தான் என்று அறிந்து அடங்கா வியப்பு அடைந்தான். அவள் பணித்தால் ஏழு கடலையும் கடந்து சென்று எந்தக் காரியத்தையும் முடித்து வர வந்தியத்தேவன் ஆயத்தமாயிருந்தான். குந்தவை தேவி ஒரே ஒரு கடலைத் தாண்டும்படியே அவனுக்குப் பணித்தாள்! இலங்கையில் இருந்த தன் இளைய சகோதரனாகிய அருள்மொழி வர்மனுக்கு ஓர் ஓலை கொடுத்து அனுப்பினாள். *"பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்"* என்று அந்த ஓலையில் எழுதியிருந்தது.

ஓலையை எடுத்துக் கொண்டு வந்தியத் தேவன் கோடிக் கரையை அடைந்தான். அங்கிருந்து இலங்கைக்குப் படகு செலுத்திக் கொண்டு போக ஆள் யாரும் கிடைக்கவில்லை. கலங்கரை விளக்கின் காவலர் தமது குமாரி பூங்குழலியை அனுப்பி வைத்தார். வந்தியத்தேவனைக் கைப்பற்றுவதற்கென்று வந்த பழுவூர் வீரர்களிடமிருந்து பூங்குழலி அவனைத் தப்புவித்தாள். இரவில் அவனைப் படகில் ஏற்றிக் கொண்டு தானே படகு வலித்துக் கொண்டு சென்றாள். வந்தியத்தேவன் கடலில் விழுந்துவிட்ட போதும் அவனை அவள் தப்புவித்தாள். இதற்கெல்லாம் பிரதியாக ஒன்று அவனிடம் கேட்டாள். இளவரசர் அருள்மொழி வர்மருக்குச் 'சமுத்திர குமாரி'யை நினைவூட்ட வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை. பூங்குழலியின் இன்னொரு பெயர் 'சமுத்திர குமாரி.'

ஆதித்த கரிகாலன் பிள்ளைப் பிராயத்தில் நந்தினிக்குத் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தான். அவனுடைய பெரிய பாட்டியான செம்பியன் மாதேவியின் கட்டளைக்கு இணங்கி நந்தினியை மறக்க முயன்றான். பாண்டியர்களோடு நடந்த இறுதிப் போரில் ஆதித்த கரிகாலன் வீரபாண்டியனைக் கொல்லப் போன சமயத்தில், நந்தினி குறுக்கிட்டு வீரபாண்டியனுடைய உயிருக்காக மன்றாடினாள். கரிகாலன் அதைப் பொருட்படுத்தாமல் வீரபாண்டியனைக் கொன்று விட்டான். நந்தினியின் இச் செய்கையினால் கலக்கமுற்ற கரிகாலன் உள்ளம், பின்னால் அவள் பெரிய பழுவேட்டரையரை மணந்த செய்தி அறிந்து அதிக குழப்பத்தை அடைந்தது. நந்தினியை மறக்க முயன்றும் அவனால் மறக்க முடியவில்லை. ஆதலின் அருள்மொழி வர்மனைத் தருவித்து அவனுக்கு இளவரசுப் பட்டங்கட்டி விட்டுத் தான் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று சோழ சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க எண்ணினான். எனவே, தம்பியை அழைத்து வரும் பொருட்டு, பல்லவ குலத்தில் வந்தவனும் தன் இன்னோர் அந்தரங்கத் தோழனுமான பார்த்திபேந்திரனை ஈழத்துக்கு அனுப்பினான்.

பழையாறையில் குந்தவைக்கும் வந்தியத்தேவனுக்கும் நடந்த சம்பாஷணையை ஆழ்வார்க்கடியான் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு அவன் இராமேசுவரம் சென்றான். இராமேசுவரத்தில் சுந்தர சோழரின் மான்ய மந்திரியான அநிருத்தப் பிரம்மராயர் அச்சமயம் இருந்தார். ஆழ்வார்க்கடியான் அவரைச் சந்தித்து, தான் கண்டு கேட்டுத் தெரிந்து கொண்ட விவரங்களை எல்லாம் கூறினான்.

வந்தியத்தேவன் ஓலையுடன் ஈழநாட்டுக்குப்

புறப்பட்டுச் சென்றதிலிருந்து குந்தவைப் பிராட்டிக்குப் பழையாறையில் இருப்புக் கொள்ளவில்லை. தஞ்சையில் தந்தை சுந்தர சோழருக்கு அருகில், தான் இருப்பது அவசியம் என்று கருதிக் கொடும்பாளூர் இளவரசி வானதியுடன் தஞ்சைக்குச் சென்றாள். தஞ்சையில் நவராத்திரிக் கொண்டாட்டம் நடந்தது. ஒரு நாள் இரவு குந்தவையும் மற்ற ராணிகளும் துர்க்கை ஆலயத்துக்குச் சென்றிருந்த போது வானதி தனியாக அரண்மனையைச் சுற்றி வந்தாள். சுந்தர சோழரின் பரிதாபக் குரல் அந்த நள்ளிரவில் "ஐயோ! உன்னை நான் கொன்றது உண்மைதான்! அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று கதறியதைக் கேட்டாள். அவருக்கெதிரே நந்தினியைப் போன்ற ஒரு பெண் உருவம் நிற்பதையும் கண்டாள். அங்கிருந்து திரும்பிச் செல்கையில் நடைபாதையில் மூர்ச்சையுற்று விழுந்தாள்.

பதினாறாம் அத்தியாயம்

சுந்தர சோழரின் பிரமை

மறுநாள் காலையில் சுந்தர சோழ சக்கரவர்த்தி தம் அருமைக் குமாரியை அழைத்து வரச் செய்தார். ஏவலாளர், தாதிமார், வைத்தியர் அனைவரையும் தூரமாகப் போயிருக்கும்படி கட்டளையிட்டார். குந்தவையைத் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டு அன்புடன் முதுகைத் தடவிக் கொடுத்தார். அவர் சொல்ல விரும்பியதைச் சொல்ல முடியாமல் தத்தளிக்கிறார் என்பதைக் குந்தவை தெரிந்து கொண்டாள்.

"அப்பா! என் பேரில் கோபமா?" என்று கேட்டாள்.

சுந்தர சோழரின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"உன் பேரில் எதற்கு அம்மா, கோபம்?" என்றார்.

"தங்கள் கட்டளையை மீறித் தஞ்சாவூருக்கு வந்ததற்காகத்தான்!"

"ஆமாம்; என் கட்டளையை மீறி நீ வந்திருக்கக் கூடாது. இந்தத் தஞ்சாவூர் அரண்மனை இளம் பெண்கள் வசிப்பதற்கு ஏற்றதல்ல. இது நேற்று இராத்திரி நடந்த சம்பவத்திலிருந்து உனக்கே தெரிந்திருக்கும்."

"எந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள், அப்பா?"

"அந்தக் கொடும்பாளூர்ப் பெண் மூர்ச்சையடைந்ததைப் பற்றித்தான் சொல்லுகிறேன். அந்தப் பெண்ணுக்கு இப்போது உடம்பு எப்படியிருக்கிறது?"

"அவளுக்கு இன்றைக்கு ஒன்றுமேயில்லை, அப்பா! பழையாறையிலும் அடிக்கடி இவள் இப்படிப் பிரக்ஞை இழப்பது உண்டு. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சரியாகப் போய்விடும்."

"அவளை நீ கேட்டாயா, அம்மா? இராத்திரி இந்த அரண்மனையில் அவள் ஏதேனும் கண்டதாகவோ, கேட்டதாகவோ சொல்லவில்லையா?"

குந்தவை சற்று யோசித்துவிட்டு, "ஆம், அப்பா! நாங்கள் எல்லாரும் துர்க்கை ஆலயத்துக்குச் சென்றிருந்த போது அவள் தனியாக மேல் மாடத்துக்குப் போகப் பார்த்தாளாம். அப்போது யாரோ பரிதாபமாகப் புலம்புவது போலக் கேட்டதாம். அது அவளுக்குப் பயத்தை உண்டாக்கியதாகச் சொன்னாள்" என்றாள்.

"அப்படித்தான் நானும் நினைத்தேன். இப்போதேனும் அறிந்தாயா, குழந்தாய்? இந்த அரண்மனையில் பேய் உலாவுகிறது. நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். போய்விடுங்கள்!" என்று சுந்தர சோழர் கூறிய போது, அவர் உடல் நடுங்குவதையும் அவருடைய

கண்கள் வெறித்தபடி எங்கேயோ பார்ப்பதையும் குந்தவை கவனித்தாள்.

"அப்பா! அப்படியானால் தாங்கள் மட்டும் இங்கே எதற்காக இருக்க வேண்டும்? அம்மா இங்கே எதற்காக இருக்க வேண்டும்? எல்லாரும் பழையாறைக்கே போய்விடலாமே? இங்கு வந்ததினால் உங்கள் உடம்பு குணமாகியிருப்பதாகவும் தெரியவில்லையே?" என்றாள்.

சக்கரவர்த்தி துயரம் தோய்ந்த புன்னகை புரிந்து, "என் உடம்பு இனிமேல் குணமாவது ஏது? அந்த ஆசை எனக்குக் கொஞ்சமும் கிடையாது!" என்றார்.

"அப்படி ஏன் நிராசை அடைய வேண்டும் அப்பா! பழையாறை வைத்தியர் தங்கள் உடம்பைக் குணப்படுத்த முடியும் என்று சொல்கிறார்."

"அவர் சொல்வதை நம்பி நீயும் இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர ஆள் அனுப்பியிருக்கிறாயாம்! நான் கேள்விப்பட்டேன். மகளே! என் பேரில் உனக்குள்ள பாசத்தை அது காட்டுகிறது."

"தந்தையிடம் மகள் பாசம் கொண்



டிருப்பது தவறா, அப்பா!"

"அதில் தவறு இல்லை. இப்படிப் பட்ட வாஞ்சையுள்ள புதல்வியைப் பெற்றேனே, அது என் பாக்கியம். இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வர நீ ஆள் அனுப்பியதிலும் தவறில்லை. ஆனால் இலங்கையிலிருந்து மூலிகை வந்தாலும் சரி, சாவகத் தீவிலிருந்து வந்தாலும் சரி, தேவலோகத்திலிருந்து அமுதமே வந்தாலும் சரி, எனக்கு உடம்பு இந்த ஜன்மத்தில் குணமாகப் போவதில்லை..."

"ஐயையோ! அப்படிச் சொல்லாதீர்கள்!" என்றாள் இளவரசி.

"என் கட்டளையையும் மீறி நீ இங்கு வந்தாயே, அம்மா! அதற்காக உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒருநாள் என் மனத்தைத் திறந்து உன்னிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அதற்கு இப்போது சந்தர்ப்பம் கிடைத்தது. சொல்கிறேன், கேள்! உடம்பைப் பற்றிய வியாதியாயிருந்தால் மூலிகை மருந்துகளினால் தீரும். என்னுடைய நோய் உடம்பைப் பற்றியதல்ல; மனக் கவலைக்கு மருந்து ஏது?"

"தந்தையே! மூன்றுலகம் ஆளும் சக்கரவர்த்தியாகிய தங்களுக்கு அப்படி என்ன தீராத மனக்கவலை இருக்க முடியும்?"

"கவிகளுடைய அதிசயோக்தியான கற்பனையை நீயும் சொல்கிறாய், குழந்தாய்! நான் மூன்று உலகம் ஆளும் சக்கரவர்த்தியல்ல; ஓர் உலகம் முழுவதையும் ஆளுகிறவனும் அல்ல. உலகத்தில் ஒரு மூலையில் ஒரு சிறு பகுதி என் இராஜ்யம். இதன் பாரத்தையே என்னால் சுமக்க முடியவில்லை..."

"தாங்கள் ஏன் சுமக்க வேண்டும், அப்பா? இராஜ்ய பாரத்தைச் சுமப்பதற்குத் தகுந்தவர்கள் இல்லையா? மணி மணியாக இரண்டு புதல்வர்கள் தங்களுக்கு இருக்கிறார்கள். இருவரும் இரண்டு சிங்கக் குட்டிகள்; வீராதி வீரர்கள். எப்படிப்பட்ட பாரத்தையும் தாங்கக் கூடியவர்கள்..."

"மகளே! அதை நினைத்தால்தான் எனக்கு நெஞ்சு பகீர் என்கிறது. உன் சகோதரர்கள் இருவரும் இணையில்லா வீரர்கள்தான். உன்னைப் போலவே அவர்களையும் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்தேன். அவர்களுக்கு இந்த இராஜ்யத்தைக் கொடுத்தால் நன்மை செய்கிறவனாவேனா என்று சந்தேகப்படுகிறேன். இராஜ்யத்துடன் பெரியதொரு சாபக்கேட்டையும் அவர்களிடம் ஒப்புவித்துவிட்டுப் போவது நல்லதென்று சொல்வாயா?"

"அப்படி என்ன சாபக்கேடு இருக்க முடியும் இந்த ராஜ்யத்திற்கு? புறாவுக்காகச் சதையை அளித்த சிபியும் கன்றுக் குட்டிக்காக மகனை அளித்த மநுநீதிச் சோழரும் நம் குலத்து முன்னோர்கள். கரிகால் வளவரும் பெருநற் கிள்ளியும் இந்த ராஜ்யத்தை ஆண்டவர்கள். திருமேனியில் தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த வீர விஜயாலய சோழர் இந்தச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். காவேரி நதி தீரத்தில் நூற்றியெட்டு ஆலயங்கள் எடுப்பித்த ஆதித்த சோழரும், சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து பொன்னம்பலமாக்கிய பராந்தகரும் இந்த ராஜ்யத்தை விஸ்தரித்தார்கள். அன்பே சிவம் எனக் கண்டு, அன்பும் சிவமும் தாமேயாக வீற்றிருந்த கண்டராதித்தர் அரசு புரிந்த தர்ம மகா ராஜ்யம் இது. இப்படிப்பட்ட ராஜ்யத்திற்குச் சாபக்கேடு என்ன இருக்க முடியும்? அப்பா! தாங்கள் ஏதோ மனப் பிரமையில் இருக்கிறீர்கள்! இந்தத் தஞ்சாவூர் கோட்டையை விட்டுத் தாங்கள் புறப்பட்டு வந்தால்..."

"நான் இவ்விடம் விட்டுப் புறப்பட்டால் அடுத்த கணம் என்ன ஆகும் என்று உனக்குத் தெரியாது! அழகிய பழையாறையை விட்டு இந்தத் தஞ்சைக்

கோட்டையாகிய சிறையில் நான் சந்தோஷத்துக்காக இருக்கிறேன் என்று கருதுகிறாயா? குந்தவை! நான் இங்கே இருப்பதனால் இந்தப் பழம் பெரும் சோழ ராஜ்யம் சின்னாபின்னமாகாமல் காப்பாற்றி வருகிறேன். நேற்றிரவு நாடகம் ஆடிக் கொண்டிருந்தபோது என்ன நடந்தது என்பதை யோசித்துப் பார்! நிலா மாடத்தின் முகப்பிலிருந்து நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன். நாடகத்தை நடுவில் நிறுத்தி விடலாமா என்று கூடத் தோன்றியது..."

"தந்தையே! இது என்ன? நாடகம் மிக நன்றாக இருந்ததே! சோழ குலப் பெருமையை எண்ணி என் உள்ளம் பூரித்ததே! எதற்காக நிறுத்த விரும்பினீர்கள்? நாடகத்தில் எந்தப் பகுதி தங்களுக்குப் பிடிக்காமலிருந்தது?"

"நாடகம் நன்றாகத்தானிருந்தது, மகளே! அதில் ஒரு குற்றமும் நான் காணவில்லை. நாடகம் பார்த்தவர்களின் நடத்தையைப் பற்றியே சொல்கிறேன். கொடும்பாளூர்க் கட்சியும் பழுவேட்டரையர் கட்சியும் எழுப்பிய போட்டி கோஷங்களை நீ கவனிக்கவில்லையா?"

"கவனித்தேன், அப்பா!"

"நான் ஒருவன் இங்கு இருக்கும் போதே இவர்கள் இப்படி நடந்து கொள்ளுகிறார்களே! நான் இல்லாவிட்டால் என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்! நான் தஞ்சாவூரை விட்டுக் கிளம்பிய தட்சணமே இரு கட்சியாருக்குள்ளும் சண்டை மூளும். கிருஷ்ண பரமாத்மாவின் சந்ததிகள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு அழிந்தது போல் இவர்களும் அழிவார்கள். இவர்கள் அழியும் போது இந்த மகாசாம்ராஜ்யமும் அழிந்து விடும்..."

"அப்பா! தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரச் சக்கரவர்த்தி. பழுவேட்டரையர்களும் சரி, கொடும்பாளூர் வேளிரும் சரி, தங்கள் காலால் இட்டதைத் தலையால் செய்யக் கடமைப்பட்டவர்கள். அவர்கள் அத்து மீறி நடந்தால் அவர்களுடைய அழிவை அவர்களே தேடிக் கொள்ளுகிறார்கள். தாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"மகளே! சென்ற நூறு வருஷமாக இந்த இரு குலத்தாரும் சோழ சாம்ராஜ்யத்துக்கு இணையில்லா ஊழியம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய உதவியின்றிச் சோழ ராஜ்யம் இப்படிப் பல்கிப் பெருகியிருக்க முடியுமா? அவர்கள் அழிந்தால் இராஜ்யத்துக்கும் அது பலவீனந்தானே?"

"அப்பா! அந்த இரு கட்சியில் ஒரு கட்சிக்காரர்கள் தங்களுக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் என்று தெரிந்தால்....?"

சுந்தரசோழர் குந்தவையை வியப்போடு உற்றுப் பார்த்து, "என்ன மகளே, சொல்கிறாய்? எனக்கு விரோதமான சதியா? யார் செய்கிறார்கள்?" என்று கேட்டார்.

"அப்பா! தங்களுடைய உண்மையான ஊழியர்களாக நடித்து வருகிறவர்கள் சிலர் தங்களுக்கு எதிராக இரகசியச் சதி செய்கிறார்கள். தங்களுடைய புதல்வர்களுக்குப் பட்டமில்லாமல் செய்துவிட்டு, வேறொருவருக்குப் பட்டம் கட்டச் சதி செய்து வருகிறார்கள்..."

"யாருக்கு? யாருக்கு? மகளே! உன் சகோதரர்களுக்குப் பட்டம் இல்லையென்று செய்துவிட்டு வேறு யாருக்குப் பட்டம் கட்டப் பார்க்கிறார்கள்?" என்று சுந்தர சோழ சக்கரவர்த்தி பரபரப்புடன் கேட்டார்.

குந்தவை மெல்லிய குரலில், "சித்தப்பா மதுராந்தகனுக்கு, அப்பா! நீங்கள் நோய்ப் படுக்கையில் படுத்திருக்கையில் இவர்கள் இப்படிப் பயங்கரமான துரோகத்தைச் செய்கிறார்கள்..." என்றாள்.

உடனே சுந்தர சோழர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து, "ஆகா! அவர்களுடைய முயற்சி மட்டும் பலித்தால் எவ்

வளவு நன்றாயிருக்கும்?" என்றார்.

குந்தவைக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"தந்தையே! இது என்ன, தாங்கள் பெற்ற புதல்வர்களுக்குத் தாங்களே சத்துரு ஆவீர்களா?" என்றாள்.

"இல்லை. என் புதல்வர்களுக்கு நான் சத்துரு இல்லை. அவர்களுக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன். இந்தச் சாபக் கேடு உள்ள ராஜ்யம் அவர்களுக்கு வேண்டியதில்லை. மதுராந்தகன் மட்டும் சம்மதித்தால்..."

"சித்தப்பா சம்மதிப்பதற்கு என்ன? திவ்யமாகச் சம்மதிக்கிறார். நாளைக்கே பட்டங்கட்டிக் கொள்ளச் சித்தமாயிருக்கிறார். அம்மாதிரி தாங்கள் செய்யப் போகிறீர்களா? என் தமையனின் சம்மதம் கேட்க வேண்டாமா?..."

"ஆம்; ஆதித்த கரிகாலனைக் கேட்க வேண்டியதுதான். அவனைக் கேட்டால் மட்டும் போதாது. உன் பெரிய பாட்டி சம்மதிக்க வேண்டும்..."

"பிள்ளைக்குப் பட்டம் கட்டினால் தாயார் வேண்டாம் என்று சொல்வாளா?"

"ஏன் சொல்ல மாட்டாள்? உன் பெரிய பாட்டியுடன் இத்தனை நாள் பழகியும் நீ அவரை அறிந்து கொள்ளவில்லையா? செம்பியன் மாதேவியின் வற்புறுத்தலினாலேயே நான் அன்று சிம்மாசனம் ஏறினேன். ஆதித்தனுக்கும் இளவரசுப் பட்டம் கட்டினேன். குந்தவை! உன் பெரிய பாட்டிக்கு உன் பேரில் மிக்க அன்பு உண்டு. நீ அவரிடம் நயமாகச் சொல்லி மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதற்குச் சம்மதம் வாங்கிவிடு!..."

குந்தவை திகைத்துப் போய்ப் பேசாமலிருந்தாள்.

"பிறகு காஞ்சிக்குப் போ! அங்கே உன் அண்ணன் ஆதித்த கரிகாலனிடம் சொல்லி, 'இந்தச் சாபக்கேடு வாய்ந்த இராஜ்யம் எனக்கு வேண்டாம்' என்று சொல்லும்படி செய்துவிடு. மதுராந்தகனுக்கே பட்டம் கட்டிவிடுவோம். பிறகு நாம் எல்லாரும் சாபம் நீங்கி நிம்மதியாக இருக்கலாம்" என்றார் சக்கரவர்த்தி.

"அப்பா! அடிக்கடி சாபம் என்கிறீர்களே? எந்தச் சாபத்தைச் சொல்கிறீர்கள்?" என்று குந்தவை கேட்டாள்.

"மகளே! பூர்வ ஜன்மம் என்று சொல்கிறார்களே அதை நீ நம்புகிறாயா? பூர்வ ஜன்மத்தின் நினைவுகள் இந்த ஜன்மத்தில் சில சமயம் வரும் என்கிறார்களே, அதில் உனக்கு நம்பிக்கை உண்டா?"

"தந்தையே! அவையெல்லாம் பெரிய விஷயங்கள். எனக்கென்ன தெரியும், அந்த விஷயங்களைப் பற்றி?"

"மகா விஷ்ணுவின் பத்து அவதாரங்களைப் பற்றிச் சொல்கிறார்களே? புத்த பகவான் கடைசி அவதாரத்துக்கு முன்னால் பல அவதாரங்கள் எடுத்ததாகச் சொல்லுகிறார்களே? அந்த அவதாரங்களைப் பற்றிய பல அழகான கதைகள் சொல்கிறார்களே?"


"கேட்டிருக்கிறேன், அப்பா!"

"கடவுளுக்கும் அவதார புருஷர்களுக்கும் அப்படியென்றால், சாதாரண மனிதர்களுக்கு மட்டும் முற்பிறவிகள் இல்லாமலிருக்குமா?"

"இருக்கலாம், அப்பா!"

"சில சமயம் எனக்கும் பூர்வ ஜன்ம நினைவுகள் வருகின்றன, மகளே! அவற்றைக் குறித்து இதுவரையில் யாரிடமும் சொல்லவில்லை. சொன்னால் யாரும் நம்பவும் மாட்டார்கள்; புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். எனக்கு உடல் நோயுடன் சித்தப் பிரமையும் பிடித்திருப்பதாகச் சொல்வார்கள். வைத்தியர்களை அழைத்து வந்து தொந்தரவு கொடுப்பது போதாது என்று மாந்திரீகர்களையும் அழைத்து வரத் தொடங்குவார்கள்...."

"ஆம், தந்தையே! இப்போதே சிலர் அப்படிச் சொல்கிறார்கள். தங்கள்



நோய் மருத்துவத்தினால் தீராது: மாந்திரீகர்களை அழைக்க வேண்டும் என்கிறார்கள்..."

"பார்த்தாயா? நீ அப்படியெல்லாம் நினைக்க மாட்டாயே? நான் சொல்வதைக் கேட்டுவிட்டுச் சிரிக்க மாட்டாயே?" என்றார் சக்கரவர்த்தி.

"கேட்க வேண்டுமா, அப்பா! உங்களுடைய மனம் எவ்வளவு நொந்திருக்கிறது என்று எனக்குத் தெரியாதா? தங்களைப் பார்த்து நான் சிரிப்பேனா?'' என்று குந்தவை கூறினாள். அவளுடைய கண்ணில் நீர்

மலர்கிறது.

"எனக்கு தெரியும், மகளே! அதனாலேதான் மற்ற யாரிடமும் சொல்லாததை உன்னிடம் சொல்கிறேன். என்னுடைய பூர்வ ஜன்ம நினைவுகளில் சிலவற்றைச் சொல்லுகிறேன், கேள்!" என்றார் சுந்தர சோழர்.


நாலுபுறமும் கடல் சூழ்ந்த ஓர் அழகிய தீவு. அத் தீவில் எங்கெங்கும் பச்சை மரங்கள் மண்டி வளர்ந்திருந்தன. மரங்கள் இல்லாத இடங்களில் நெருங்கிய புதர்களாயிருந்தன. கடற்கரையோரத்தில் ஒரு புதரில் வாலிபன் ஒருவன் ஒளிந்து கொண்டிருந்தான். சற்றுத்தூரத்தில் கடலில் பாய்மரம் விரித்துச் சென்ற கப்பல் ஒன்றை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்! அது மறையும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு, "அப்பா! பிழைத்தோம்!" என்று பெருமூச்சு விட்டான்.



அந்த வாலிபன் இராஜகுலத்தில் பிறந்தவன். ஆனால் இராஜ்யத்துக்கு உரிமையுள்ளவன் அல்ல; இராஜ்யம் ஆளும் ஆசையும் அவனுக்குக் கிடையாது. அவனுடைய தகப்பனாருக்கு முன்னால் பிறந்த மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். ஆகையால் இராஜ்யம் ஆளுவதைப் பற்றி அவன் கனவிலும் நினைக்கவில்லை; ஆசை கொள்ளவும் இல்லை. கடல் கடந்த நாட்டுக்குப் போருக்குச் சென்ற சைன்யத்தோடு அவனும் போனான். ஒரு சிறிய படையின் தலைமை அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. போரில் அவனுடைய சைன்யம் தோல்வியுற்றது. கணக்கற்றவர்கள் மாண்டார்கள். வாலிபன் தலைமை வகித்த படையிலும் எல்லோரும் மாண்டார்கள். அந்த வாலிபனும் போரில் உயிரை விடத் துணிந்து எவ்வளவோ சாஹஸச் செயல்கள் புரிந்தான். ஆனாலும் அவனுக்குச் சாவு நேரவில்லை. தோற்று ஓடிய சைன்யத்தில் உயிரோடு தப்பிப் பிழைத்தவர்கள் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். திரும்பித் தாய் நாடு செல்லுவதற்கு அவர்கள் ஆயத்தமானார்கள். திரும்பிப் போவதற்கு அந்த வாலிபன் மட்டும் விரும்பவில்லை. தன் கீழிருந்த படை வீரர்கள் அனைவரையும் பறி கொடுத்துவிட்டு அவன் தாய்நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. அவனுடைய குலத்தைச் சேர்ந்தவர்கள் மகா வீரர்கள் எனப் புகழ் பெற்றவர்கள். அந்தப் புகழுக்குத் தன்னால் அபகீர்த்தி நேருவதை அவன் விரும்பவில்லை. ஆகையால், கப்பல் போய்க் கொண்டிருந்தபோது, சற்றுத் தூரத்தில் அழகிய தீவு ஒன்று தெரிந்தபோது, வாலிபன் மற்ற யாரும் அறியாமல் கடலில் மெள்ளக் குதித்தான். நீந்திக் கொண்டே போய்த் தீவில் கரை ஏறினான். கப்பல் கண்ணுக்கு மறையும் வரையில் காத்திருந்தான். பிறகு ஒரு மரத்தின் மேல் ஏறி அதன் அடிக்கிளையில் உட்கார்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அந்தத் தீவின் அழகு அவன் மனத்தைக் கவர்ந்தது. ஆனால் அத் தீவில் மனித சஞ்சாரமே இல்லை என்று தோன்றியது. அச்சமயம் அது ஒரு குறையென்று அவனுக்குத் தோன்றவில்லை. அவனுடைய உற்சாகம் மிகுந்தது. மரக்கிளையில் சாய்ந்து உட்கார்ந்தபடி வருங்காலத்தைப் பற்றிப் பகற் கனவுகள் கண்டு கொண்டிருந்தான்.

திடீரென்று மனிதக் குரலில், அதுவும் பெண் குரலில், ஒரு கூச்சல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். இளம்பெண் ஒருத்தி கூச்சலிட்ட வண்ணம் ஓடிக் கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து பயங்கரமான கரடி ஒன்று ஓடியது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கரடி மேலும் மேலும் அந்தப் பெண்ணை நெருங்கிக் கொண்டிருந்தது. இருவருக்கும் இடையிலே இருந்த தூரம் குறுகிக் கொண்டிருந்தது. வேறு யோசனை ஒன்றும் செய்வதற்கு அப்போது நேரம் இருக்கவில்லை. வாலிபன் மரக் கிளையிலிருந்து பொத்தென்று கீழே குதித்தான். மரத்தில் தான் சாத்தியிருந்த வேலை எடுத்துக் கொண்டு ஓடினான். கரடி அந்தப் பெண்ணை நெருங்கி அதன் பயங்கரமான கால் நகங்களை அவள் கழுத்தில் வைப்பதற்கு இருந்தது. அச்சமயத்தில் குறி பார்த்து வேலை எறிந்தான். வேல் கரடியைத் தாக்கியது. கரடி வீல் என்று ஏழுலகமும் கேட்கும்படியான ஒரு சத்தம் போட்டுவிட்டுத் திரும்பியது. பெண் பிழைத்தாள். ஆனால் வாலிபன் அபாயத்துக்குள்ளானான். காயம்பட்ட கரடி அவனை நோக்கிப் பாய்ந்தது. வாலிபனுக்கும் கரடிக்கும் துவந்த யுத்தம் நடந்தது. கடைசியில் அந்த வாலிபனே வெற்றி பெற்றான்.

வெற்றியடைந்த வாலிபனுடைய கண்கள் உடனே நாலாபுறமும் தேடின. எதைத் தேடின



என்பது அவனுக்கே முதலில் தெரியவில்லை. அப்புறம் சட்டென்று தெரிந்தது. அவன் கண்கள் தேடிய பெண், சாய்ந்து வளைந்து குறுக்கே வளர்ந்திருந்த ஒரு தென்னை மரத்தின் பின்னால், அதன் பேரில் சாய்ந்து கொண்டு நின்றாள். அவள் கண்களில் வியப்பும் முகத்தில் மகிழ்ச்சியும் குடிகொண்டிருந்தன. அவள் காட்டில் வாழும் பெண், உலகத்து நாகரிக வாழ்க்கையை அறியாதவள் என்று அவளுடைய தோற்றமும் உடையும் தெரிவித்தன. ஆனால் அவளுடைய அழகுக்கு உவமை சொல்ல இந்த உலகத்தில் யாரும் இல்லையென்று சொல்லும்படியிருந்தாள். அந்தப் பெண் அங்கு நின்றிருந்த காட்சி, ஒப்பற்ற

ஆற்றல் படைத்த ஓவியக் கலைஞன் ஒருவன் தீட்டிய சித்திரக் காட்சியாகத் தோன்றியது. அவள் உண்மையில் ஒரு பெண்ணாயிருந்தாலும் இந்த உலகத்துப் பெண்ணாயிருக்க முடியாது என்று அந்த வாலிபன் கருதினான். அருகில் நெருங்கினான். ஆனால் அவன் எதிர்பார்த்ததுபோல் அவள் மாயமாய் மறைந்து விடவில்லை. எதிர்பாராத விதமாக அவள் ஓட்டம் பிடித்து ஓடினாள். சற்று அவளைப் பின் தொடர்ந்து ஓடிப் பார்த்தான். பிறகு நின்று விட்டான். அவன் மிகக் களைப்புற்றிருந்த படியால் மானின் வேகத்துடன் ஓடிய அந்தப் பெண்ணைத் தொடர்ந்து அவனால் ஓடவும் முடியவில்லை. மேலும், ஒரு பெண்ணைத் தொடர்ந்து ஓடுவது அநாகரிகம் என்றும் அவன் எண்ணினான். "இந்தச் சிறிய தீவிலேதான் இவள் இருக்க வேண்டும்? மறுபடியும் பார்க்காமலா போகிறோம்!" என்று கருதி நின்று விட்டான். கடற்கரையோரமாகச் சென்று தெள்ளிய மணலில் படுத்துக் கொண்டு களைப்பாறினான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பெண் திரும்பி வந்தாள். தன்னுடன் ஒரு வயோதிகனான மனிதனையும் அழைத்து வந்தாள். வந்தவன் இலங்கைத் தீவின் கடற்கரையோரத்தில் வாழ்ந்து மீன் பிடித்துப் பிழைக்கும் 'கரையர்' என்னும் வகுப்பைச் சேர்ந்தவன் என்று தெரிந்தது. அவன் மூலமாய் அவ்வாலிபன் ஒரு முக்கியமான உண்மையைத் தெரிந்து கொண்டான். அதாவது அந்தப் பெண் தக்க சமயத்தில் அவனுடைய உயிரைக் காப்பாற்றினாள் என்று அறிந்தான். அவன் மரக்கிளையின் மேல் உட்கார்ந்து கடலையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தபோது கரடி ஒன்று அவன் பின்பக்கமாக வந்து அவனை உற்றுப் பார்த்தது. பிறகு மரத்தின் மேல் ஏறத் தொடங்கியது. இதையெல்லாம் அந்தப் பெண் பார்த்துக் கொண்டிருந்தாள். கரடியை வேறு திசையில் இழுப்பதற்கும் அந்த வாலிபனை எச்சரிக்கை செய்வதற்கும் அவள் அவ்விதம் கூச்சலிட்டாள். கரடி மரத்தின் மேல் ஏறுவதை விட்டு அவளைத் தொடர்ந்து ஓடத் தொடங்கியது.

இதைக் கேட்டதும் அந்த வாலிபனுக்கு எப்படியிருந்திருக்குமென்று சொல்லவும் வேண்டுமா? தன்னைக் காப்பாற்றிய பெண்ணுக்கு அவன் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். ஆனால் அவளோ ஒரு வார்த்தையும் மறுமொழியாகச் சொல்லவில்லை. அவளிடம் வாலிபன் கூறியதற்கெல்லாம் அவளுடன் வந்த மனிதனே மறுமொழி சொன்னான். இது வாலிபனுக்கு முதலில் வியப்பாயிருந்தது. உண்மை இன்னதென்று அறிந்ததும் வியப்பு மறைந்தது. அந்தப் பெண் பேசத் தெரியாத ஊமை. அவளுக்குக் காதும் கேளாது என்று அறிந்து கொண்டதும், அவ்வாலிபனுடைய உள்ளம் கனிந்து உருகியது. அதனால் அந்தப் பெண்ணிடம் அவனுடைய பாசம் பன்மடங்காகியது. பாசம் வளர்ந்து தழைப்பதற்குச் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் துணை செய்தன. காது கேளாததும் பேசத் தெரியாததும் ஒரு குறைவாகவே அவ்வாலிபனுக்குத் தோன்றவில்லை. வாயினால் சொல்ல முடியாத அற்புதமான உண்மைகளையும் அந்தரங்க இரகசியங்களையும் அவளுடைய கண்களே தெரியப்படுத்தின. அந்த நயன பாஷைக்கு ஈடான பாஷை இந்த உலகத்தில் வேறு என்ன உண்டு? அது போலவே காது கேளாததற்கு ஈடாக அவளுடைய நாசியின் உணர்ச்சி அதிசயமான சக்தி வாய்ந்ததாயிருந்தது. அடர்ந்த காட்டின் மத்தியில் வெகு தூரத்தில் மறைந்திருக்கும் காட்டு மிருகம் இன்னதென்பதை அவளுடைய

முகர்தல் சக்தியைக் கொண்டே கண்டு பிடிக்க அவனால் முடிந்தது. ஆனால் இதெல்லாம் என்னத்திற்கு? இருதயங்கள் இரண்டு ஒன்று சேர்ந்து விட்டால், மற்ற புலன்களைப் பற்றி என்ன கவலை? அந்த வாலிபனுக்கு அத்திவு சொர்க்க பூமியாகவே தோன்றியது. நாட்கள், மாதங்கள், வருஷங்கள், – இவ்விதம் சென்றன; எத்தனை நாள் அல்லது வருஷம் ஆயிற்று என்பதைக் கணக்குப் பார்க்கவே அவன் மறந்து விட்டான்.

வாலிபனுடைய இந்தச் சொர்க்க வாழ்வுக்குத் திடீரென்று ஒருநாள் முடிவு நேர்ந்தது. கப்பல் ஒன்று அந்தத் தீவின் அருகில் வந்து நின்றது. அதிலிருந்து படகிலும் கட்டு மரங்களிலும் பலர் இறங்கி வந்தார்கள். அவர்கள் யார் என்று பார்க்க வாலிபன் அருகில் சென்றான். தன்னைத் தேடிக் கொண்டு தான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிந்தான். அவனுடைய நாட்டில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல நடந்து விட்டன. அவனுடைய தந்தைக்கு மூத்த சகோதரர்கள் இருவர் இறந்து போய் விட்டார்கள். இன்னொருவருக்குப் புத்திர சந்தானம் இல்லை. ஆகையால், ஒரு பெரிய சாம்ராஜ்யம் அவனுக்காகக் காத்திருக்கிறது என்று தெரிந்து கொண்டான். அவனுடைய உள்ளத்தில் ஒரு பெரிய பூசல் ஏற்பட்டது. அந்த அழகிய தீவையும் அதைச் சொர்க்க பூமியாக்கிய ஊமைப் பெண்ணையும் விட்டுப் போக அவனுக்கு மனமில்லை. அதே சமயத்தில் ஊரையும் உற்றார் உறவினரையும் பார்க்கும் ஆசை ஒரு பக்கத்தில் அவனைக் கவர்ந்து இழுத்தது. அவன் பிறந்த நாட்டை நாலாபுறமும் அபாயம் சூழ்ந்திருக்கிறதென்றும் அறிந்தான். யுத்த பேரிகையின் முழக்கம் மிக மிகத் தொலைவிலிருந்து அவன் காதில் வந்து கேட்டது. இது அவன் முடிவு செய்வதற்குத் துணை செய்தது. "திரும்பி வருகிறேன்; என் கடமையை நிறைவேற்றி விட்டு வருகிறேன்'' என்று அப்பெண்ணிடம் ஆயிரம் முறை உறுதி மொழி கூறிவிட்டுப் புறப்பட்டான். காட்டில் பிறந்து வளர்ந்த அந்த ஊமைப் பெண் நாட்டிலிருந்து வந்திருந்த மனிதர்களுக்கு மத்தியில் வருவதற்கே விரும்பவில்லை. வாலிபன் படகில் ஏறியபோது, அவள் சற்றுத் தூரத்தில் அந்தப் பழைய வளைந்த தென்னை மரத்தின் மேல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இரு கண்களும் அப்போது இரண்டு கண்ணீர்க் கடல்களாக வாலிபனுக்குத் தோன்றின. ஆயினும் அவன் தன் மனத்தைக் கல்லாகச் செய்து கொண்டு படகில் ஏறிச் சென்று கப்பலை அடைந்தான்....

"குந்தவை! அந்த வலைஞர் குலப் பெண் அப்படி நின்று பார்த்துக் கொண்டிருந்தாளே, அந்தக் காட்சியின் நினைவு அடிக்கடி என் மனக்கண் முன் தோன்றிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு மறந்தாலும் மறக்க முடியவில்லை. அதைக் காட்டிலும் சோகமான இன்னும் ஒரு காட்சி, நினைத்தாலும் குலை நடுங்கும் காட்சி அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. இரவிலும் பகலிலும் உறங்கும் போதும் விழித்திருக்கையிலும் என்னை வருத்தி வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதையும் சொல்லட்டுமா?'' என்று சுந்தர சோழர் தம் அருமை மகளைப் பார்த்துக் கேட்டார்.

உருக்கத்தினால் தொண்டை அடைத்துத் தழுதழுத்த குரலில், சுந்தர சோழரின் அருமைக் குமாரி, "சொல்லுங்கள், அப்பா!'' என்றாள்.

(தொடரும்)

சென்ற வாரக் கடைசியில் தமிழ் நாடு எங்கும் தமிழ்ப் பெருமக்களின் அகமும் முகமும் மலர்ந்தன; கண்களும் காதுகளும் குளிர்ந்தன.

தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் கவிச் சக்கரவர்த்தி பாரதியாரின் நாமம் ஒலித்தது; எட்டுத் திசையிலும் அவரது அமுத கீதங்கள் மிதந்து வந்தன; பல்வேறு சங்கங்களின் ஆதரவில் பாரதி விழாக்கள் விமரிசையாக நடைபெற்றன.

கவிச் சக்கரவர்த்தி பிறந்த எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்த மண்டபத்தில் பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்களின் தலைமையில் ஏராளமான மக்கள் கூடி தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் புத்துயிர் அளித்த மகானுக்கு அஞ்சலி செய்தார்கள்.



நாடெங்கும் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போன்ற காட்சியைக் கண்டு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மனம் பூரித்தார்கள்.

சென்னை பாரதி சங்கத்தின் சார்பில் நடந்த பாரதி தின விழாவில் தவயோகி சுத்தானந்த பாரதியார் கவியோகி பாரதியாருக்குப் பாமாலையும் புகழ் மாலையும் சூட்டிப் பரவசம் அடைந்தார்.

அமர வாழ்வு பெற்றுப் புகழுடம்புடன் விளங்கும், தமிழர்களின் நாவிலும் உள்ளங்களிலும் வீற்றிருக்கும் பாரதியார் அன்று எல்லா இடங்களிலும் பிரசன்னமாகியிருந்தார்.

'நான் அமரன்' என்று பாரதியார் அடிக்கடி கூறுவது உண்டு என்று யோகி சுத்தானந்தர் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்டார்.

பாரதியாரின் தீர்க்க தரிசனங்கள் பலவும் பலித்து வருவதைப் போல் தமது அமர வாழ்வு பற்றி அவர் கூறியதும் பலித்ததைச் சென்ற வாரம் மக்கள் கண்டு களித்தனர்.

சென்னையில் சிறப்பாகப் பாரதி விழா கொண்டாடுவதன் தனிப் பொருத்தத்தைத் தவயோகி சுத்தானந்த பாரதியார் எடுத்துக் கூறினார்.

"பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார்; புதுவையில் கவி சுரந்தார்; சென்னையில் புகழ் சிறந்தார்" என்று விளக்கினார்.

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்ற பழமொழியைப் பொய்த்துப் போகும்படி செய்த மகிமை பாரதியார் ஒருவருக்கே உரியது.

இந்த உலகத்திலே எத்தகைய இன்னல்களையும் எதிர்த்து நிற்கும் இரகசியத்தைப் பாரதியார் மக்களுக்கு உபதேசித்ததுடன் செயலிலும் காட்டினார். அச்சத்தைத் தவிர்ப்பதே அந்த இரகசியம் ஆகும்.

அச்சத்தைக் காட்டிலும் பாரதியார் வெறுத்த விஷயம் வேறு எதுவுமே இல்லை. "யானெதற்கும் அஞ்சுகிலேன் மானிடரே" என்று முழங்கினார். அண்டஞ் சிதறினாலும் அஞ்சாதீர்; அஞ்சி வறுமைக்கும் வஞ்சகக் கவலைக்கும் இடம் கொடாதீர் என்று உபதேசித்தார்.

அச்சம் என்ற நோயால் அவஸ்தைப் படுவோரை, 'அஞ்சி யஞ்சிச் சாவார்-இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே' என்று நிந்தையாகப் பாடினார். உச்சிமீது வானமே இடிந்து விழுந்தாலும் அச்சமில்லை, அச்சமில்லை என்று வீர சங்க நாதம் செய்து, ஆண்மை ஊட்டிய பாரதியாரின் மகத்துவத்துக்கு ஈடு இணை ஏது?

பயமில்லாதவர்களுக்கு நிச்சயம் ஜயம் உண்டு என்ற தத்துவத்தை என்றும் அழியாத பசும்பொன் எழுத்துக்களால் பொறித்த கவிச்சுடரின் தெய்வீக ஒளி தமிழ்மொழி உள்ள வரையில் குன்றாது

அமரர் கல்கி

லட்சியங்கள்

விளங்கும் அல்லவா?

பாரதியாரின் இலட்சியங்களில் மிகவும் முக்கியமான இலட்சியம் நம் காலத்தில் நிறைவேறி விட்டது. பாரத தேசம் அன்னியர் அடிமைத் தனத்திலிருந்து நீங்கிப் பூரண சுதந்தரம் பெற்று விட்டது.

ஆனால் பாரதியாரின் இலட்சியங்களில் இன்னும் பூரணமாக நிறைவேறாத இலட்சியங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

''இல்லையென்ற கொடுமை உலகில்
இல்லையாக வைப்போம்!''

என்ற பாரதியாரின் வாக்கு இன்னும் நமது நாட்டிற்குள்ளேயே நிறைவேறவில்லை; விரைவில் நிறைவேறும் என்பதற்குரிய அறிகுறிகளும் காணப்படவில்லை.

ஒரு பக்கத்தில் 'கல்வி இல்லை' என்ற கூக்குரல் எழுகிறது. நூற்றில் எண்பத்தைந்து பேர் வீதம் இன்னும் எழுத்தறிவில்லாதவர்களாவே இருந்து வருகிறார்கள். நூறு குழந்தைகளில் ஐம்பத்தைந்து குழந்தைகள் இன்னும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படாமலே இருக்கிறார்கள்.

போதிய அளவு பள்ளிக்கூடங்கள் இல்லை; இருக்கிற பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் போதவில்லை; ஆசிரியர்களுக்குச் சம்பளம் போதவில்லை.

கல்வியறிவு படைத்தவர்களுக்குப் போதுமான வேலையில்லை; வேலையுள்ளவர்களுக்குப் போதிய வருமானம் இல்லை.

நோய்ப்பட்டவர்கள் சிகிச்சை செய்து கொள்ளப் போதிய வைத்திய சாலைகள் இல்லை; பயிற்சி பெற்ற வைத்தியர்களும் இல்லை.

வறுமையின் கொடுமையைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை.

''வருத்தமழிய வறுமை யொழிய
வையமுழுதும் வண்மை பொழிய
வேண்டுமடி எப்போதும்
விடுதலை!''

என்று பாரதியார் பாடினார். அத்தகைய விடுதலை, 'வருத்தமும் வறுமையும் ஒழிந்த' விடுலை, இன்னும் இந்நாட்டு மக்களில் பெரும்பாலோருக்குக் கிட்டவில்லை.

பாரதியாரின் தேச சுதந்தர இலட்சியத்துக்கு அடுத்தபடியாக அவர் கொண்டிருந்த முக்கியமான இலட்சியம் வறுமைப் பிணியை ஒழிக்கும் இலட்சியமேயாகும். அந்த இலட்சியம் நம் காலத்தில் நிறைவேறுவதற்கு நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

''சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்.''

என்று பாரதியார் பாடினார். இந்த இலட்சியம் கொள்கையளவில் இப்போது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் வாழ்க்கையிலும் செயலிலும் பூரணமாக நிறைவேறவில்லை. சாதிப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட கிளர்ச்சிகளும், பிரசாரங்களும் வளர்ந்து வருகின்றன. பாரதியின் வாக்கு இந்தத் துறையிலும் நிறைவேற வேண்டும்.

பாரதியார் தமிழன்னையை எவ்விதமெல்லாம் போற்றிப் பாமாலை புனைந்து அளித்திருக்கின்றார் என்பது அனைவரும் அறிந்ததே.

''சொல்லில் உயர்வு தமிழ்ச்
சொல்லே-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!''

என்று பாடினார். ஆயினும் நம்மவர்களை விட்டு அன்னிய மொழி மோகம் இன்னும் நீங்கிவிட்டதாகச் சொல்ல முடியாது.

இவ்விதம் பாரதியாரின் பாடல்களில் பொதிந்து கிடக்கும் இலட்சியங்கள் அனைத்தும் நமது காலத்தில் நிறைவேற வேண்டும் என்று பிரார்த்திப்போமாக. அதற்கான முயற்சிகளைச் செய்வோமாக. அம்முயற்சிகளுக்குப் பாரதியாரின் பாடல்களே நமக்கு வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அத்தகைய தெய்வீக சக்தி வாய்ந்த பாரதி பாடல்களை நினைவூட்டிக் கொள்ளவும், பிரசாரம் செய்யவும் பாரதி விழாக் கொண்டாடுதல் தக்க வாய்ப்புத் தரும் சந்தர்ப்பம் அன்றோ? ●

(1954 செப்டெம்பர் 19ந் தேதி கல்கி தலையங்கம்.)

கல்கி
கலெக்ஷன்

தெய்வத் தமிழ் நாட்டினிலே...

தெய்வத்தமிழ் நாட்டினிலே வெண்ணிலாவே - நாங்கள்
நேரமின்றிப் பேதையர்போல் வாழ்ந்திருந்தோம் - ஏதும்
செய்வதறியாதிருந்த போதினிலே - ஒரு
சிங்கநாதம் கேட்டெழுந்தோம் வெண்ணிலாவே!

இருளடைந்த நாடிதென்று எவரோசொன்னார் - அந்த
இழிவும் ஒரு பெருமை என்று எண்ணி வாழ்ந்தோம் - நல்ல
அறிவொளியால் இருளகற்ற ஒருவர் வந்தார் - இதை
அமரர்தா டென்றறிந்தோம் வெண்ணிலாவே!

கங்கையெனப் பொங்கிவரும் தண்டமிழினில் - இன்பக்
கவிதைபல புனைந்தளித்தார் வெண்ணிலாவே - வெற்றி
சங்கமூதி முரசறைந்து எழுகவென்றார் - இந்த
தரணியில் நமக்குநிகர் இல்லையென்றார்...

கவியரசர் பாரதியின் கவிதை இன்பம் - உன்
கதிரொளியில் காண்பதென்ன வெண்ணிலாவே - இந்தப்
புவியில் நீயும் தமிழனெனப் பிறந்ததுண்டோ - அவர்
புதுமைக்கவி மதுவருந்தி மகிழ்ந்ததுண்டோ?

(-அமரர் கல்கி இயற்றி எம்.எஸ். சுப்புலட்சுமி பாட
இசைத்தட்டாக வெளியான பாடல்)

நாற்பதாண்டுகளுக்கு மேல் கல்கியில் உதவி ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் பணியாற்றிய பி.எஸ். மணி, அமரர் கல்கி பற்றிய நினைவுகளை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்...

● அமரர் கல்கியின் பொன்னியின் செல்வனை இன்றைக்கு நீங்கள் நான்காம் முறையாகப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். அமரர் கல்கி இதை எழுதியபோது, உதவி ஆசிரியர்களாக இருந்த நாங்கள்தான் முதல் வாசகர்களாகப் படித்தோம். அடுத்து அச்சுக் கோக்கும் கம்பாசிடர்கள். கல்கி அவர்கள் எழுதித் தரும் கையெழுத்துப் பிரதியை மூன்று நான்கு பகுதிகளாகப் பிரித்து மூன்று நான்கு கம்பாசிடர்களிடம் தருவோம், அச்சுக் கோப்பதற்காக. அவர்கள் முணு முணுத்துக் கொண்டே அச்சுக் கோப்பார்கள் - சலிப்புடன் அல்ல. கதையின் அத்தியாயத்தை ஒருவரிடமே தராமல் பிரித்துத் தருவதால் கதையைத் தொடர்ச்சியாகப் படித்து ரசித்து அச்சுக் கோக்க முடியவில்லையே என்கிற ஆதங்கம் அவர்களுக்கு!

● இந்த வாரத்து அத்தியாயம் அச்சுக் கோக்கப்பட்டு மெஷினில் ஏற்றி அச்சடிக்க ஆரம்பிக்கிற சமயத்தில், "இந்த அத்தியாயத்தை அடுத்த வாரத்துக்கு வைத்துக் கொள்ளலாம். இந்த வாரத்துக்கு வேறொன்று எழுதித் தந்து விடுகிறேன்" என்று சொல்லி விடுவார் கல்கி. இப்படிப் பலமுறை நடக்கும்! இதற்குக் காரணம், ஒரு விஷயத்தை எழுதிவிட்ட பிறகு, 'அப்பாடா வேலை முடிந்தது' என்று அதை அப்படியே மறந்து விட மாட்டார். கடைசி நேரம் வரையில், தாம் எழுதியதை இன்னும் எப்படிச் சிறப்புடையதாக்க முடியும் என்று சதா சிந்தித்துக் கொண்டேயிருப்பார்!

ஒருமுறை அப்படித்தான் ஒரு தலையங்கம் எழுதினார். அது அச்சுக்கும் போய் விட்டது. ஓர் உதவியாசிரியர், கல்கி அவர்களைப் புகழ்ந்துரைப்பதாக எண்ணிக் கொண்டு, 'இந்த வாரம் நீங்கள் எழுதியிருக்கும் தலையங்கம் ரொம்பவும் பிரமாதம். பக்கத்து வீட்டுக்காரர் ரொம்பவே பாராட்டினார்!' என்று ஒரு போடு போட்டார்.

''அப்படியா! என்ன சொன்னார் பக்கத்து வீட்டுக்காரர்?'' என்று தூண்டில் போட்டார் கல்கி.

உதவி ஆசிரியர் வரிக்கு வரி விலாவாரியாகத் தலையங்கத்தைப் புகழ ஆரம்பித்தார்...

''அடடா இத்தனை நன்றாக எழுதியிருக்கிறேன் என்று எனக்குத் தெரியாமல் போச்சே! தெரிந்திருந்தால் நீங்கள் வீட்டுக்குப் போன பிறகு நேற்று இரவோடு இரவாக அதை மாற்றியிருக்க மாட்டேன்!'' என்றார் கல்கி.



• பேத்தி கௌரியுடன்...

உதவி ஆசிரியர் அசடு வழிவதை நிறுத்த ரொம்ப நேரமாயிற்று!

● அமரர் கல்கி சதாசர்வ காலமும் தாம் எழுதப் போவது

சேந்தன் அமுதன் ராஜாவான கதை!

பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார் என்பதற்கு இன்னொரு உதாரணம்: அமரர் கல்கி யோகாசனம் செய்வார். ஒவ்வொரு ஆசனத்துக்கும் எத்தனை நிமிடங்கள் என்று ஒரு கணக்கு. கல்கி ஆசனம் செய்யும்போது, நிமிடக் கணக்குகளைச் சொல்ல வேண்டியது கல்கியின் புதல்வர் ராஜேந்திரனைச் சேர்ந்தது. ஒருமுறை சிரசாசனம் செய்து கொண்டிருந்த கல்கி, புதல்வர் ராஜேந்திரன் கணக்குச் சொல்வதற்கு முன்னமே சிரசாசனத்தை முடித்துக் கொண்டு விட்டார். காரணம் கேட்டபோது, 'பொன்னியின் செல்வனில் வருகிற சேந்தன் அமுதனை ராஜாவாக்கினால் என்ன?' என்று அந்த கேரக்டர் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டார்!



● உதவி ஆசிரியர் ரா. வீழிநாதனைக் கொண்டு நிறைய ஹிந்தி நாவல்களை மொழி பெயர்த்து வெளியிட்டார் கல்கி என்பது அனைவருக்கும் தெரியும். கல்கிக்கு ஓரளவுக்குத்தான் ஹிந்தி தெரியும். ஆனாலும் அதை மேலும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டுவார். அதனால் மாலை வேளைகளில் வீழிநாதனை அழைத்துக் கொண்டு கல்கி தோட்டத்திலுள்ள மரத்தடிக்குச் சென்று விடுவார். வீழிநாதன் ஹிந்தி நாவலைப் படித்துக் காட்டுவார். கல்கி அதைக் கேட்டுக் கொண்டே வருவார். அப்படி கேட்டுக் கொண்டு வரும்போதே அதில், புரியாத வார்த்தைகளுக்கு அர்த்தம் கேட்டறிவார். கூடவே எந்தெந்தப் பகுதிகளை எப்படியெப்படி மொழி பெயர்த்தால் வாசகர்கள் சுவாரஸ்யமாகப் படிப்பார்கள் என்பதைச் சொல்லி விடுவார். அதாவது பத்திரிகை ஆசிரியரின் 'எடிட்டிங்' பணியையும் செய்து முடித்து விடுவார்!

● கல்கி அவர்களின் எழுத்துக்களில் எந்த அளவுக்கு ஹாஸ்யம் மிளிரும் என்பதைச் சொல்லவே தேவையில்லை. தாம் ஹாஸ்யம் எழுதினால் மட்டும் போதாது; தமது உதவி ஆசிரியர்களும் எழுத வேண்டும் என்று அக்கறை காட்டுவார். ஒவ்வொரு வாரமும் பிரசுரிப்பதற்கான ஹாஸ்யங்களைத் தேர்ந்தெடுப்பதற்கென்றே ஆசிரியர் குழு மீட்டிங் நடக்கும். அப்போது ஒவ்வோர் உதவி ஆசிரியரும் ஹாஸ்யங்களைச் சொல்லித்தான் ஆக வேண்டும். ஒரு சமயம் ஓர் உதவி ஆசிரியர், 'மாஸ்கோவில் மழை பெய்கிறது; மெட்ராசிலுள்ள கம்யூனிஸ்ட் அனுதாபி ஒருவர் குடை பிடித்துக் கொண்டு செல்கிறார்' என்றார். 'ஹாஸ்யம் பிரமாதம். ஆனால் இப்படி முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு சொன்னால் எப்படி ரசிக்க முடியும்? சொல்லுகிற நீங்களே அதை ரசித்து அனுபவித்துச் சொல்ல வேண்டாமா?' என்றார். அதாவது சொல்பவர் ரசிக்காவிட்டால், பிறராலும் அதை ரசிக்க முடியாது என்பார் கல்கி.

● அமரர் கல்கிக்குக் கிரிக்கெட் என்றாலே பிடிக்காது. அதைப் பார்ப்பதிலும் சுவாரஸ்யம் இல்லை; அதை ஆடுபவர்களுக்கும் உடற்பயிற்சி கிடைப்பதாகத் தெரியவில்லை என்பது கல்கியின் எண்ணம். இதன் காரணமாக, உதவியாசிரியர் ஒருவரை விட்டு, கிரிக்கெட்டைத் தாக்கி ஒரு கட்டுரை எழுதச் சொல்லி வெளியிட்டு விட்டார். அதற்கு ஏகப்பட்ட எதிர்ப்பு. ஜனங்கள் இதில் இத்தனை மோகமாக இருப்பதையுணர்ந்த கல்கி, தமக்கு அது பிடிக்காவிட்டாலும் வாசகர்களுக்காக, அது பற்றிய செய்திகளைப் பிரசுரிக்கத் தயங்கவில்லை.

● சென்னையில் மல்யுத்தம் நடந்தபோது, 'கிரிக்கெட்டை எதிர்க்கிற நீங்கள், மனிதனோடு மனிதன் மோதுகிற மல்யுத்தம் சரியா? அதை எதிர்த்து எழுத வேண்டாமா?' என்று பலரும் கல்கியிடம் கேட்டார்கள். ஆனால் கல்கி என்ன செய்தார் தெரியுமா? மல்யுத்தம் என்பது புராண காலத்திலிருந்தே நம் நாட்டில் இருந்து வருகிற வீர விளையாட்டு. பீமனும் இடும்பனும் மல்யுத்தம் செய்யவில்லையா? மல்யுத்தம் காரணமாகத்தான் இடும்பனை இடும்பி

காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டாள் என்று மல்யுத்தம் பற்றி விலாவாரியாக எழுதி அட்டைப்படக் கட்டுரையாகவே வெளியிட்டார்! அப்புறமென்ன, எதிர்க்கச் சொன்னவர்களெல்லாம் கப்சிப் ஆகி விட்டார்கள்.

● திறமை யாரிடமிருந்தாலும் அதை மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுவார்; ஊக்கப்படுத்துவார் கல்கி. அலுவலகத்தில் அச்சுக் கோப்பவராக இருந்தார் விந்தன். அவர் ஒரு சிறுகதை எழுதி ஃபோர்மேனிடம் தர, அவர் கல்கி அவர்களின் மேஜையின் மேல் வைத்து விட்டுச் சென்று விட்டார். படித்துப் பார்த்த கல்கி, 'யார் எழுதியது இதை? பிரமாதமாக இருக்கிறதே!' என்று பாராட்ட, அச்சுக் கோக்கும் விந்தனை அழைத்து வந்தார், ஃபோர்மேன். விந்தனை மேலும் மேலும் ஊக்கப்படுத்தி அவரையும் ஓர் உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார் கல்கி.

● எழுத்துக்குச் சிபாரிசு என்பது கல்கிக்குப் பிடிக்காத ஒன்று. ஒருசமயம் அரசியல் பிரமுகர் ஒருவர் எழுதிக் கொடுத்த கட்டுரைகளைப் பிரசுரிக்கத் தகுதியானவை அல்ல என்று திருப்பிக் கொடுத்து விட்டார். ஆனாலும் அதை ரொம்பவும் நாசூக்காகக் கையாண்டார். அந்தப் பிரமுகர் அலுவலகத்துக்கு வந்திருந்தபோது, உதவி ஆசிரியர் ஒருவரை அழைத்து, 'சாருக்கு ஏதோ கட்டுரைகளைத் திருப்பித் தருவதற்காக வைத்திருக்கிறீர்களே, அதைக் கொண்டு போய் அவரது காரில் வைக்கச் சொல்லுங்கள்!' என்று ரொம்பவும் இயல்பாகச் சொல்லி, அந்தப் பிரமுகர் பதில் பேச முடியாமலே செய்து விட்டார்.

● கல்கி அவர்களுக்கு ஒரேயொரு விஷயம் மட்டும் வேப்பங்காய், அதுதான் விடுமுறை. எப்போதும் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும் அவருக்கு. ஜுரம் வந்த நிலையில்கூட அவர் எழுதாமல் இருக்க மாட்டார். எழுதி முடித்து விட்டுத்தான் ஜுரத்துக்கான மருந்தைக்கூடச் சாப்பிடுவார். 'ஜுரம் வந்து, உடம்பு சூடாகும்போதுதான் என்னால் நன்றாகச் சிந்தித்து எழுத முடிகிறது!' என்றும் சொல்லுவார் கல்கி.

● கல்கி அவர்களுக்கு மிகப் பிடித்த விஷயமும் ஒன்று உண்டு. அதுதான் அவரது பேத்தியான குழந்தை கௌரி. (ஆனந்தியின் மகள்). செல்லமென்றால் அப்படியொரு செல்லம். ஒருமுறை கல்கி அவர்கள் எழுதிக் கொண்டிருந்தபோது, குழந்தை கௌரி ஏதோ போய்ப் பேச, எழுத்து சுவாரஸ்யத்தில் அதைக் கவனிக்காமல் இருந்து விட்டார் கல்கி. குழந்தைக்கு அதனால் தாத்தாவின் மேல் கோபம். அந்தக் கோபத்தில், அவர் எழுந்து போன சமயம் பார்த்து, அவர் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதிகளை எடுத்துச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து விட்டாள் குழந்தை. வந்து பார்த்த கல்கி, குழந்தையின் மேல் கோபப்படவில்லை. 'இப்படிக் குழந்தை வந்து கிழித்துப் போடுகிறதைக்கூட கவனிக்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று பக்கத்து அறையிலிருந்த தமது புதல்வர் ராஜேந்திரனைத்தான் கோபித்துக் கொண்டார். அது மட்டுமல்ல; சுக்கலாகக் கிழிந்தவற்றையெல்லாம் பொறுக்கியெடுத்து, ஒன்றாகச் சேர்ந்து ஒட்டித் தர வேண்டிய தண்டனையும் கிடைத்தது ராஜேந்திரனுக்கு!

கல்கி அவர்களின் இந்த பேத்தி பாசம் உதவியாசிரியர்களான எங்களுக்கு மிகவும் சாதகமாக இருந்தது. ஆம், எங்களுக்கு ஏதாவது பர்மிஷன், லீவு என்று தேவைப்படும்போதெல்லாம் அவர் பேத்தியைக் கொஞ்சிக் கொண்டிருக்கிற சமயமாகப் பார்த்துக் கேட்போம். உடனடியாக சாங்ஷன் ஆகிவிடும்! ●





மே 28:

இன்று இரவு குட்டைத் திடலில் எங்கள் கட்சிப் பொதுக்கூட்டம் அண்ணனின் சிறப்புரையோடு நடக்கவிருப்பதை வெங்கடாசலம் நினைவூட்டிச் சென்றான். ஆற்றுக்குச் சென்று துணிகளைத் துவைத்து தயார் ஆனேன்.

இரவு எட்டு மணியளவில் நானும் வெங்கடாசலமும் மொபட்டில் சென்றோம். கூட்டம் தாமதமாகவே தொடங்கியது. எப்போதும் போல் அண்ணன் பிரமாதமாகப் பேசினார். அவருக்குக் கை கொடுக்க முயற்சி செய்தோம். கூட்டத்தில் முடியவில்லை. அவரின் பேச்சில் இருந்த வேகமும் கம்பீரமும் வார்த்தைகளின் அழுத்தமும் நெஞ்சை விட்டு அகல மறுக்கின்றது. என்னைப் போல எத்தனையோ பேரை தன் சிங்கக் கர்ஜனையால் கவர்ந்தவர் ஆயிற்றே.

ஜூன் 7:

இன்று செய்தித் தாளில் அதிர்ச்சியான செய்தி வந்திருந்தது. எங்கள் அண்ணனை மனச்சாட்சியே இல்லாமல் கட்சியிலிருந்து நீக்கிவிட்டார்கள். மிகவும் ஆத்திரமாக வந்தது.

அவருக்குத் தனிப்பட்ட வகையில் பெரும் வரவேற்பு இருப்பதால் தலைமையைப் பிடித்து விடுவார் என்று பயந்தே நீக்கிவிட்டார்கள் என்று எங்கள் தோழர்கள் சொன்னார்கள்.

கட்சியின் மீதிருந்த ஈடுபாடு அப்படியே வெறுப்பாகி விட்டது. அண்ணன் இனி என்ன செய்வார் என்று குழப்பமாக இருந்தது.

நாங்கள் எல்லோரும் குழுவாகச் சென்று அண்ணனை சென்னையில் போய்ப் பார்ப்பது என்று முடிவு செய்தோம்.

ஜூன் 15:

இன்று மாலை கோவையிலிருந்து சேரன் எக்ஸ்பிரஸ் ரயிலில் சென்னை புறப்பட்டோம். வழியெங்கும் தலைமைக் கழகத்தையும் தலைவரையும் விமர்சித்துக் கொண்டே போனோம்.

இது வரையிலும் உயிராக நினைத்துக் கொண்டிருந்த கட்சி, அண்ணனை நீக்கிய மாத்திரத்தில் துச்சமாகிவிட்டதை நினைத்துப் பார்த்தேன். அதிசயமாக இருந்தது.

காரை. சந்திரசேகரன்

அதிகாலை சென்னை வந்து சேர்ந்தோம். பாலுவுடன் படித்த நண்பரின் அறை போரூரில் இருந்தது. அங்கு சென்று தங்கிக் கொண்டோம். நன்றாக உபசரித்தார்.

ஜூன் 16:

இன்று மாலை அண்ணனை அவரது வீட்டில் சந்திக்கச் சென்றோம். எங்களை மாதிரியே நூற்றுக் கணக்கான தொண்டர்கள் வந்த வண்ணம் இருந்தனர். எல்லோரும் இளைஞர்கள். இரும்புக் கம்பிகளை நரம்பாகக் கொண்ட தீவிரவாத இளைஞர்கள். எல்லோரிடமும் கோபம் இருந்தது. தலைமைக் கழகத்தை பச்சையாக விமர்சித்தார்கள்.

அண்ணன் எளிமையாக இருந்தார். முகத்தில் லேசான சோகம் அப்பிக் கொண்டிருப்பது போல இருந்தாலும் அந்த சிங்க கர்ஜனை, கம்பீரம் குறையாமல் இருந்தது.

எங்களிடம் ஆறுதலாகவும் நகைச் சுவையாகவும் பேசினார். சிவக்குமார்தான் எங்களில் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவனாக அண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டான். எங்கள் அனைவரைப் பற்றியும் விசாரித்தார். இந்தத் தங்க நாளை என்றும் மறக்க முடியாது.

இரவு ஊருக்குப் புறப்பட்டோம்.

ஜூன் 17:

அதிகாலை ஊர் வந்து சேர்ந்தோம். அப்பா மிகவும் கோபமாகி விட்டார். பொறுப்பில்லாமல் கண்டபடி சுற்றுவதாக மிகவும் கடிந்து பேசினார்.

இந்த மாதிரி நான் சுற்றுவதற்கு அம்மா தான் காரணமென்று அம்மாவிடம் சண்டைக்குச் சென்றார். இரண்டு மூன்று நாட்களாக வீட்டில் பெரும் பிரச்னையென்று தம்பி சொன்னான். வருத்தமாக இருந்தது.

ஜூன் 20:

இன்று காலையிலேயே இனிய அதிர்ச்சியோடு வந்தது செய்தித்தான். அண்ணன் தனிக்கட்சி தொடங்குவதாகக் கொட்டை எழுத்தில் தலைப்புச் செய்தியோடு வந்திருந்தது.

எனக்கு முன்பே செய்தியைப் படித்து விட்டு வீடு தேடி வந்து விட்டான் சிவக்குமார். உற்சாகமாயிருந்தது.

பட்டாசு வைத்து எங்களின் சந்தோஷத்தை வெளிப்படுத்தினோம். அனைவரும் சேர்ந்து அப்போதே வாழ்த்துத் தந்தியை அனுப்பி வைத்தோம்.

ஜூன் 25:

இன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டேன். இன்று நாங்கள் அனைவரும் உறுப்பினர்கள் ஆவதைப் பதிவுத் தபாலில் சென்னைக்கு அனுப்பி வைத்தோம்.

இன்று வெங்கடாசலத்திற்கு கல்யாண நிச்சயதார்த்தம் சிங்காநல்லூரில் நடந்தது. பெண் அவனுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. நிறம்தான் கொஞ்சம் கம்மி. வெங்கடாசலத்திற்கு ஒரே மகிழ்ச்சி.



கல்யாணத்தை ஆகஸ்ட்-23ல் வைத்துக் கொள்ளலாம் என்று நிச்சயமானது. அண்ணனின் தலைமையில் கல்யாணத்தை நடத்துவது என்று நாங்கள் அனைவரும் முடிவெடுத்தோம்.

ஜூன் 26:

இன்று எங்கள் அனைவருக்கும் உறுப்பினர் கார்டு வந்திருந்தது. தலைமைக் கழகக் கொடியில் லேசான மாற்றத்துடன் கொடி இருந்தது. எடுப்பாக இருந்தது.

எல்லா ஊரிலும் உறுப்பினர்களை சேர்க்கச் சொல்லி அண்ணன் கைப்படக் கடிதம் எழுதியிருந்தார். எல்லா ஊரிலும் கட்சிக்குத் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பதாகவும், நாங்களும் அது மாதிரி தேர்ந்தெடுத்து அதுபற்றிய

விவரத்தை அனுப்பச் சொல்லியிருந்தார்.

பொன்னுச்சாமியின் வீட்டில் இன்று இரவு திடீர்க் கூட்டம் நடத்தினோம். பொன்னுச்சாமி தலைவர். வெங்கடாசலம் செயலாளர். நான் துணைச் செயலாளர். சக்திவேல் பொருளாளர்.

எங்களின் முந்தைய கட்சியிலிருந்து முத்து, ராமசாமி, சின்ராசு போன்றோர் எங்களின் மீது அதிருப்தியாயிருந்தனர். எங்களை மோசமாக விமர்சனம் செய்வதாக கருப்புச்சாமி அண்ணன் சொன்னார்.

ஜூன் 27:

இன்று அம்மன் கோவில் அருகே வைத்து சின்ராசுவுக்கும் பொன்னுச்சாமிக்கும் கடும் வாக்குவாதம் நடந்தது. எங்கள் தலைவரைப் பற்றி டீக் கடையில் சின்ராசு மட்டமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு பொன்னுச்சாமி தகராறுக்குப் போய் விட்டான்.

லேசான கைகலப்போடு முடிந்து விட்டது. ராமண்ணன் தலையிட்டு இரண்டு பேரையும் சமாதானம் செய்திருக்கிறார். குமரன் தான் இந்த விஷயத்தைப் பற்றிச் சொன்னான்.

ஜூன் 29:

இன்று இரவு சின்ராசு கட்சிப் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டம் நடத்துவதற்குப் படாத பாடு பட்டு விட்டனர். விரல் விட்டு எண்ணக்கூடியவர்களே அதன் தீவிர உறுப்பினர்கள். போஸ்டர் ஒட்டக் கூட ஆளில்லாமல் சினிமாப் போஸ்ட் ஒட்டுகிற ராமனைப் பிடித்து ஒட்டியிருக்கின்றனர். கூட்டமும் அவர்கள் எதிர்பார்த்த அளவு வரவில்லை.

அந்தக் கட்சியின் மூத்த பேச்சாளர் பேசுகையில் அண்ணனைப் பச்சோந்தி என்று வர்ணித்து மேலும் சில அநாகரிகமான வார்த்தைகளைப் பேசினார்.

யாரும் எதிர்பாராத விதமாக சக்திவேல் மேடையின் மீதேறி மைக்கைத் தள்ளிவிட்டு அவரின் சட்டையை எட்டிப் பிடித்து விட்டான். எல்லோரும் அதிர்ச்சியடைந்து விட்டோம். ஒரே களேபரமாகிவிட்டது.

அங்கு அவனைப் போலீஸாரும் கட்சிக்காரர்களும் மிகவும் மோசமாக அடித்து ஸ்டேஷனுக்குக் கொண்டு போனார்கள்.

ஜூன் 30:

இன்று மாவட்டத் தலைவரோடு போய் சக்திவேலை ஜாமீனில் எடுத்து வந்தோம். ஸ்டேஷனிலும் வைத்து மோசமாக அடித்திருக்கிறார்கள். மூக்கின் மேல் பெரிய காயம் ஆகியிருந்தது.

அம்மா இன்று அழ ஆரம்பித்து விட்டாள். இனிமேல் கட்சி வேலைக்குப் போகக் கூடாது என்று கெஞ்சினாள். எனக்கே என்னவோ போல் இருந்தது.

இன்று இரவு குமரன் வீட்டில், இனி மேற்கொண்டு எப்படி இயங்குவது என்பது பற்றி விவாதித்தோம்.

ஜூலை 3:

இன்று தலைமையிடமிருந்து கடிதம் வந்திருந்தது. மாநில அளவில் மாநாடு நடத்துவது குறித்து. சேலத்தில் நடக்கிறது. ஜூலை 28,29,30 தேதிகளில்.

ஒவ்வொரு ஊரிலிருந்தும் இரண்டு லாரிகள் அளவுக்கு ஆட்களை திரட்டச் சொல்லியிருந்தார்கள். ஆகும் செலவுகளை அந்தந்த மாவட்டத் தலைவரிடம் பெற்றுக் கொள்ளவும் சொல்லியிருந்தார்கள்.

முதல் கட்டமாக கட்சிப் பொதுக்கூட்டம் விரைவில் ஒவ்வொரு ஊரிலும் மாவட்டத் தலைவரை வைத்து நடத்தச் சொல்லியிருந்தது.



ஜூலை 4:

மாநாட்டில் நமது ஊர் சார்பில் பெரிய அளவில் செய்ய வேண்டும் என்று, இன்று அனைவரும் முடிவு செய்தோம். போஸ்டர்களை அதிக அளவில் அடித்து ஊர் முழுவதும் ஒட்ட வேண்டும் என சிவக்குமார் கூறினான்.

முடிவில் போஸ்டர்களுக்கும், லாரிக்கும் பெரிய நிறுவனங்களிடம் ஸ்பான்ஸர் பிடிப்பது என்று முடிவு செய்தோம்.

ஜூலை 7:

இன்று வெங்கடாசலத்துடன் உடுமலைக்குச் சென்றேன். அவன் கல்யாணப் பத்திரிக்கையை அடிக்க பிரஸ்ஸுக்கு சென்று வந்தோம்.

இன்று, மாநாடு குறித்தும், முதல் பொதுக் கூட்டம் போடுவது குறித்தும் ஆலோசனைக் கூட்டம் போட்டோம். பந்தல் செலவுகளை பொன்னுச்சாமி ஏற்றுக் கொண்டான்.

போஸ்டர் ஒட்டுவதற்கும் புதிய கொடிகளை ஏற்றுவதற்கும் எங்களின் பழைய கட்சியிலிருந்து எங்கள் பங்காக கொடிக் கம்பங்கள் மற்றும் தட்டிகளை முத்துவிடம் சொல்லி வாங்க வேண்டும் என்று முடிவு செய்தோம்.

ஜூலை 10:

இன்று காலை குமரன், வெங்கடாசலம், சிவக்குமார் ஆகியோரும், நானும் முத்துவின் வீட்டுக்குச் சென்றோம்.

எங்களைக் கட்சி ஆபீஸ் திண்ணையில் உட்கார வைத்து விட்டு, சின்ராசு, செல்லமுத்து, நடராசன், கருவாயன் ஆகியோரைக் கூட்டி வந்தான்.

தட்டி மற்றும் கொடிக் கம்பங்களைக் கேட்டபோது இளக்காரமாகப் பேசினார்கள். முத்து கெட்ட வார்த்தைகளாய்ப் பேசினான்.

வெங்கடாசலத்திற்குக் கோபம் வந்து விட்டது. அவனாகவே உள்ளே போய் தட்டியை எடுத்தான். பின்னாலேயே ஓடிய கருவாயனும், நடையனும் அவனைக் கீழே தள்ளிவிட்டு வயிற்றின் மீது உதைத்தான்.

நானும் சிவக்குமாரும் ஓடிப்போய் கருவாயனைக் கீழே தள்ளிவிட குமரன் ஓடி வந்து அவனை வயிற்றின் மேல் உதைத்தான். சின்ராசு இரும்புக் கம்பியால் சிவக்குமாரின் காலைப்பார்த்து அடித்தான்.

வெங்கடாசலம் வலியில் துடித்துக் கொண்டிருந்தான். சின்ராசு ஆட்களெல்லாம் ஓடி விட்டார்கள்.

டாக்ஸி பிடிக்கப் போனான் குமரன்.



அவன் போன ஐந்து நிமிடத்துக்குள் துடிப்பு அடங்கிவிட்டது. அவனது விறைத்த பார்வையைப் பார்த்து பயந்து போனோம். எங்கள் கண் முன்னாலேயே உயிரை விட்டான் வெங்கடாசலம். இது என் வாழ்நாளில் மோசமான நாள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் முடிந்து விட்ட இந்த நிகழ்ச்சியை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. மயங்கிக் கீழே விழுந்து விட்டேன்.

ஜூலை 11:

மருத்துவ மனையிலிருந்தேன். மூன்று படுக்கை தள்ளி சிவக்குமார் படுத்திருந்தான். அவனுக்கு முழங்காலுக்குக் கீழே பெரிய காயம்.

அம்மா ஆஸ்பத்திரிக்குள் வந்து அழுது பெரிய கலாட்டா பண்ணி விட்டுப் போனாள். வெங்கடாசலத்தின் குடும்பமே துடித்துக் கொண்டிருப்பதாக தம்பி சொன்னான். புது மாப்பிள்ளை. எல்லாம் தலைவிதி. அந்தப் பெண் பாவம் என்ன செய்வாளோ?

நிச்சயத்தோடு நின்று போன அவனை இனி யார் கல்யாணம் பண்ண முன் வருவார்கள்? கடைசி யாக வெங்கடாசலம் துடித்து விறைத்த காட்சியே மறுபடியும் மறுபடியும் வந்து தொல்லை செய்கிறது.

சின்ராசுவைத் தவிர எல்லோரும் ஸ்டேஷனில் சரண்டர் ஆகி விட்டதாக பொன்னுச்சாமி சொன்னான்.

இன்னும் மூன்று தினங்களில் எங்களைப் பார்த்து ஆறுதல் சொல்ல தலைவர் வருகிறார் என்று மாவட்டத் தலைவர் வந்தபோது சொன்னார். இந்தத் துக்கத்திலும் சந்தோஷமாக இருந்தது.

ஜூலை 13:

இன்று என் வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான நாள். என்னையும் என் நண்பர்களையும் கோமாளிகளாக்கிய நாள்.

காலையில் வந்த அப்பா செய்தித்தாளை வீசி யெறிந்து படிக்கச் சொன்னார்.

எங்கள் தலைவன் மீண்டும் தலைமைக் கழகத்துடன் சேர்ந்திருந்தான். தன்னுடன் தொண்டர்களையும் சேர அழைப்பு விடுத்திருந்தான்.

பேப்பரைக் கசக்கித் தூர எறிந்துவிட்டு, சுவரில் மாட்டியிருந்த அவன் போட்டோவின் மீது காறி உமிழ்ந்தேன்.

''வாண்டேட்''

வளைகுடாப் போரின் போது அமெரிக்க ராணுவத்தின் மேஜர், ஈராக் சிறுவன் ஒருவனை சுடச் சொல்ல, எந்தத் தப்பும் செய்யாத அச்சிறுவனைக் கொல்லமாட்டேன் எனக் கூறிய ராணுவ வீரன், வாக்குவாதம் முற்றி இறுதியில் மேஜரையே சுட்டு விடுகிறான்!

ராணுவத்தினர் முறைப்படி இவ்வீரனை மின்சார நாற்காலியில் வைத்துக் கொல்ல உத்தரவு வருகிறது. அதிலிருந்து தப்பித்து நாட்டுக்கு மீண்டும் நல்லது செய்யும் ஒரு வீரனின் கதையாக ''வாண்டேட்'' என பெயரிட்டு வெளிவந்துள்ளது ஒரு திரைப்படம்.

''கீனன் இவாரி'' என்ற நீக்ரோ இளைஞர் கதாநாயகனாக நடித்துள்ள இத்திரைப்படம் ஐரோப்பிய—அமெரிக்க நாடுகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

— பாரீஸ் பார்த்தசாரதி

என்னைச் செதுக்கிய எண்ணங்கள் - 36

அறிஞர் அண்ணாவுக்குப் பின் முதல்வராக கலைஞர் மு. கருணாநிதி பதவி ஏற்றார். கட்சியைக் கட்டுக்கோப்பாக நிர்வகிப்பதிலே அண்ணாவின் பாராட்டையும், சென்னை மாநகர் தேர்தலில் வெற்றி பெற்றதற்குத் தங்க மோதிரத்தையும் பெற்றவர். அந்தத் திறமையே மூத்த தலைவர் நெடுஞ்செழியனையும் ஒதுக்கி, இவரை பதவி ஏற்றியது.

யாருமே பதவிக்கு வரும்போது அற்புதமான கனவுகளுடனும் நல்ல எண்ணங்களுடனும்தான் வருகிறார்கள். ஆனால் காலப் போக்கில் பலர் சூழ்நிலைக்கு ஈடு கொடுக்கிறார்கள். அதிலேயே காலம் கழிந்து விடுகிறது. சிலர் சூழ்நிலைக்கு மேல் உயர்கின்றனர். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பதவி ஏற்றபோது அரசியல் வேறு திசையில் செல்லத் துவங்கியது. ஆனாலும் அண்ணா ஓராண்டே பதவியில் இருந்ததால் கலைஞரிடம், மக்களுக்கும் படித்தவர்களுக்கும், இருந்த எதிர்பார்ப்பு அதிகம்.

முதல்வர் மு. கருணாநிதி அமெரிக்க நாட்டின் அழைப்பின் பேரில் அமெரிக்கா வருகிறார் என்ற செய்தியைப் படித்தேன். அண்ணா வரும்போது சில முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு வந்திருந்தால் மிக முக்கிய செனட்டர்களை (பாராளுமன்ற உறுப்பினர்களை) பார்த்திருக்க முடியும்; பல விஷயங்கள் தமிழ்நாட்டிற்கு உபயோகமாக இருந்திருக்கும் என்று எண்ணியவன் நான்.

எனவே அவருக்கு இது பற்றி ஒரு விரிவான கடிதம் எழுதினேன். கலைஞர் மு.க.வை அப்போது அதிகம் அறிந்தவனல்ல நான். அண்ணாவுக்கு அடுத்து உள்ள இளந்தலைமுறைகளில் உள்ள ஒருவர் என்பது தெரியும்; நன்றாக பேசக் கூடியவர் என்பது தெரியும். திருவாரூரிலிருந்து அவர் பிரசுரித்துக் கொண்டிருந்த முரசொலியை அவர் எழுத்தின் நடைக்காகவே படித்தவன். அண்ணாவின் 'திராவிட நாடு', பெரியாரின் 'விடுதலை', கலைஞரின் 'முரசொலி', நாவலரின் 'மன்றம்', 'போர்வாள்' - இப்படிப் பல பத்திரிகைகளையும் வாங்கி வருபவர் எனது பால்ய நண்பர் விளநகர் கணேசன். அவர் பலமுறை தி.மு.க சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். நாங்கள் அனைவரும் தி.மு.கவின் கொள்கைகளிலே ஈடுபாடு கொண்டவர்கள். தூத்துக்குடியில் நடந்த மிகப் பெரிய தி.மு.க மாநாட்டிற்கு விளநகர் கணேசன் போய் வந்தார். அதை விட ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு முரசொலி காரியாலயத்திலேயே தங்கி கலைஞர் மு.க.வுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். எங்கள் நண்பர் கூட்டம் தி.மு.கவிடமிருந்து பிரமாதமாக எதிர்பார்த்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி சொன்னார். "வெளியிலிருந்து பார்ப்பது வேறு; உள்ளே போனதும் நிலவும் நிலைமை வேறு, என்பதை உள்ளே போனவுடன்தான் நான் உணர்ந்து கொண்டேன்" என்று.

கலைஞரின் பேச்சை ஒரு முறை நான் வைத்தீஸ்வரன் கோயிலில் கேட்டிருக்கிறேன். இளமைக்கே உரிய வேகமும், சப்தமும் அதிகம். அவர் அமெரிக்கா வந்தபோது அவர் வைத்தீஸ்வரன் கோவிலில் பேசியதை நினைவு படுத்தினேன். அவர் உடனே அன்று "மழை பெய்தது நினைவிருக்கிறதா?" என்று கேட்டார். நான் உண்மையிலேயே அவர் ஞாபக சக்தியைக் கண்டு அதிசயத்துப் போனேன்.

இராவிட நாடு - தனி நாடு - ஒருநாள் வருவதாகவும் அப்போது ஹிந்து, விகடன், கல்கி போன்றவை எல்லாம் ஆண்டு மலர் வெளியிடுவார்கள் என்று அவர்களது முரசொலி பொங்கல் மலரில் கார்ட்டூன் போட்டிருந்தார்கள். தனித் 'தமிழ்நாடு சாத்தியமல்ல' என்று புரிந்து கொள்ள எனக்கும் மிகுந்த காலம் தேவைப் பட்டது.

கலைஞர் கவிதை நடையிலே எழுதுவார் முரசொலியில். "காவிரி நதிக் கரையில் விளையாடினன்; கங்கை நதிக் கரையில் புகழ்பாடினன்" என்று. அவர் ஒரு அருமை யான இலக்கிய கர்த்தா. அவர் வசனம்தான் ஒரு காலத்தில் சினிமாவில் எடுபட்டது.

அண்ணா அமெரிக்கா வந்தபோது ஐக் கிய நாடுகள் சபையின் நிரந்தர இந்திய பிரதி நிதியாக திரு ஜி. பார்த்தசாரதி இருந்தார். அவருக்கு அண்ணா மீது அளவு கடந்த மரியாதை. 'கண்ணியம்' என்ற வார்த்தைக்கு ஓர் உருவம் கொடுத்தால் அது அண்ணா வாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட



கண்ணியம் அவருடன் பழகும்போதும் பேசும் போதும் பிரதிபலிக்கும். எனவே ஜி.பி. நியூயார்க்கில் இருந்த இந்திய ஹாலில் மிகப் பெரிய சந்திப்புக்கு – அண்ணாவை இந்திய மக்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார். இப்படியெல்லாம் அவர் ஏற்பாடு செய்ய வேண்டியதில்லை. எனினும் அவர் அண்ணா மீது கொண்டிருந்த மதிப்பு அவரை அதைச் செய்யச் செய்தது.

ஜி.பி அவர்களுடன் பேசிக் கொண் டிருந்த போது "நீங்கள் ஏன் தமிழ் நாட் டுக்கு வந்து நல்ல காரியங்களைச் செய்யக் கூடாது?" என்று கேட் டேன். அவர் சொன்னார்: "இன்னும் இரண்டாண்டுகளில் என் பதவி இங்கே முடிகிறது. நான் தமிழ்நாட்டுக்கு வருவதாக இருக்கிறேன். பல்கலைக் கழக பொறுப்பை எடுத்துக் கொள்வதாக இருக் கிறேன். அண்ணா என்னுடன் பேசினார். அப்போது நிறைய செய்யலாம்" என்றார் மலர்ந்த முகத்துடன்.

சுருட்டையான தலை மயிர்; நெடிய உரு வம்; கம்பீரமான தோற்றம்; புன்னகையுடன் கூடிய முகம். "எப்போது வேண்டுமானாலும் என் வீட்டுக்கு வாருங்கள். என் வீட்டு டெலி போன் நம்பரைத் தருகிறேன்" என்றார் ஜி.பி.

அண்ணா காலமானபின், நான் அவ ரைச் சந்தித்தேன். "ஏன் வரவில்லையா?" என்று கேட்டேன். ''அண்ணாவுடன் கொண்டிருந்த நட்பு வேறு!" என்று சொல்லி விஷயத்தை விட்டு விட்டார்.

முதல்வர் மு. கருணாநிதி அமெரிக்கா வருகிறார் என்று அறிந்தபோது நான் மகிழ்ந் தேன். டெல்லியில் உள்ள அமெரிக்க தூது வரகத்தில் என்னென்ன ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வந்தால் நல்லது, என்பது பற்றி எழுதி இருந்தேன்.

ஜான் ஹாப்கின்சில் கலைஞருக்கு கண் சிகிச்சை முடிந்தவுடன், நியூயார்க் வால்டார்ப் ஆஸ்டோரியா ஹோட்டலில் தங்கியிருப்பாரென்றும் சந்திக்க அங்கு வருமாறும் கூப்பிட்டுச் சொன்னார்கள். வால்டார்ப் ஆஸ்டோரியா, ஒரு புகழ் பெற்ற ஹோட்டல். நேரு தங்கியிருந்த ஹோட்டல். நேருவும் ஐசன்ஹோவரும் சந்தித்த இடம்.

நான் அங்கே மூன்று நாட்கள் தங்கி இருந்தேன். கலைஞர் என்னைப் பார்த் தில்லை; நானும் அவரை இதுவரை தனியாக சந்தித்ததில்லை. அங்கு அன்று தமிழர் களிடையே அவர் பேசியபோது திரளான கூட்டம். நான் முதல் வரிசையில் அமர்ந் திருந்தேன்.

முதல்வருடன், மூன்று பேர் வந்திருந் தார்கள். அன்றைய நிதித்துறை செயலர் வெங்கட்ராமணன், மாறன் எம்.பி, டாக்டர் வெங்கடசாமி (கண் மருத்துவர்). என்னை முதல்வருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் வெங்கட்ராமணன்.

மறுநாள் மதிய உணவின்போது அமெரிக்காவின் தலைசிறந்த இரு கல்வி யாளர்கள் முதல்வரை சந்திக்க ஏற்பாடு

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

செய்திருந்தேன். கல்வியாளனாக இருந்த எனக்கு, நமது ஊர் கல்வித் திட்டம் மாற்றப் பட வேண்டுமென்பதில் பெரும் அக்கறை.

பேச்சு ஆங்கிலத்தில் இருந்தாலும் அதை மொழி பெயர்ப்பில் புரிந்து கொண்ட கலை ஞர், மிகத் துல்லியமாக, ஆழமான கேள்வி களை அவர்களிடம் கேட்டுக் கொண் டிருந்தது என்னை வியப்பில் ஆழ்த்தியது. இதை இன்னும் என்னால் மறக்க முடிய வில்லை. அன்றிரவே அவர் அறையில் நாவலர் நெடுஞ்செழியன் (அன்றைய கல்வி அமைச்சர்) அவர்களைக் கூப்பிட்டு இப்படி ஒரு கல்வி மாற்றத்திற்கான குழு இங்கிருந்து வர இருக்கிறது என்பதைத் தெரிவித்தார்.

இன்றும்கூட, சில மாதங்களுக்கு முன் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் உள்ள பொருளாதாரப் பேராசிரியர்களை அழைத்து தமிழ்நாட்டிற்கான நல்ல யோசனைகளைத் தெரிவிக்குமாறு அழைத் திருக்கிறார் என்பதை செய்தித் தாளில் படித் தேன். அதாவது நல்லது செய்வதில் அவருக்கு ஆர்வம் இருந்தது பற்றி யாருக்கும் ஆட்சேபம் இருக்க முடியாது.

பங்களாதேஷ் போரின் காரணமாக அமெரிக்க இந்திய உறவு பாதிக்கப்பட்ட தால் அக் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று என்னைக் கூப்பிட்டுச் சொன்னனர்கள்.

ஒரு தலைவனுடைய வாழ்க்கை எல் லோரும் பார்க்கக் கூடிய ஒரு திறந்த புத் தகம். அதில் தனி மனித வாழ்க்கை, குடும்பப் பிரச்னை, சகாக்களது நம்பகத் தன்மை, கட்சி அமைப்பு, எதிர்க்கட்சிகளின் சவால் கள், நாட்டின் பிரச்னைகள் என்று பலவும் இருக்கின்றன. எந்தத் தலைவரைப் பார்த் தாலும் சமீப காலங்களில் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே - தங் களுடைய 'இமேஜை' நிலை நிறுத்திக் கொள் வதிலேயே - பெருமளவு நேரம் போய் விடுகிறது.

எனவே அவர்கள் வாழ்வில் குறைகளும் நிறைகளும் உண்டு. ஒருவர் பதவியிலிருக் கிறார் என்பதற்காக அவருக்கு ராஜ ராஜ சோழன் விருது அளிக்கப் படுகிற காலமும் உண்டு. அவர் பதவியிலிருந்தால் நாம் ஜெயிலுக்குப் போக வேண்டும். எனவே எப்படியாவது அவர் ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்பதை மட்டுமே லட்சியமாக வைத்துச் செயல்படும் எதிர்க்கட்சிகள் இருக்கும் கால கட்டமும் உண்டு.

முதல்வர் மு.க. அவர்களின் குறை நிறை களை எல்லாம் சீர் தூக்கிப் பார்த்து, இன் றைய கால கட்டத்தில் வாழ்பவர்கள் சரி யாக எழுதிட முடியாது. இந்த கால கட்டம் கடந்த பின்தான் ஒரு சரித்திராசிரியன் எல்லாவற்றையும் பின்னோக்கிப் பார்த்து பாரபட்சமில்லாமல் தீர்ப்பைக் கூற முடியும்.

எம்.ஜி.ஆர் பதவியிலிருந்தது, எப்படி கலைஞர் மு.க. வை பதவியிலிருந்து அப்புறப் படுத்தி வைத்திருந்தோ, அதேபோல அவரது இன்றைய ஆட்சிக்கும் தேர்தல் வெற்றிக்கும் என்ன காரணம் என்று கலைஞரை நிருபர்கள் கேட்டபோது ஒரே வார்த்தையில் பதில் சொன்னார் "ஜெயலலிதா!" என்று.

ஒரு சமயம் அமெரிக்காவுக்கு திரும் பும்போது நான் கலைஞரைச் சந்திக்க கோட் டையிலுள்ள சட்டமன்றத் தலைமையகம் சென்றேன். சட்டமன்றம் நடந்து கொண் டிருந்தது. கலைஞர் நேரம் எடுத்துக் கொண்டு வந்து என்னை அவருடைய தனி அறைக்கு அழைத்துச் சென்றார். அப்போது நியமிக்கப்பட்டிருந்த பல்கலைக் கழக துணை வேந்தர்களின் தரத்தைப் பற்றியும் இதனால் நமது எதிர்கால சந்ததிகள் அல் லவா பாதிக்கப் படுவார்கள் என்றும் நான் கூறினேன். கலைஞர் மனம் விட்டுப் பேசி தமக்கேற்பட்ட நிர்ப்பந்தங்களைச் சொன் னார். "எவ்வளவு சீக்கிரம் அவர்களை நீக்க முடியுமோ அதைச் செய்யுங்களேன்..." என்றேன் நான். "அதெப்படி முடியும்? இன் னும் இரண்டாண்டு காலம் அவர்களுக்குப் பதவி இருக்கிறதே?"

இப்போதுதான் முடியாது என்று சொல் கிற கருணாநிதி அவர்களைப் பார்க்கிறேன்" என்று நான் சொன்னபோது அவர் சிரித் தார்; பதில் பேசவில்லை. அது அவர் மனத்தை உறுத்தி இருக்க வேண்டும். விஷ யம் அத்துடன் முடியவில்லை. அடுத்த வாய்ப்பு வந்தபோது சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு யுனெஸ்கோவிலிருந்த டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யாவையும் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திற்கு உலகப் புகழ் பெற்ற டாக்டர் சந்திரசேகரையும் நியமித் திருந்தார். நான் பல தலைவர்களுடனும் பழகி இருக்கிறேன். கலைஞர் நன்கு விஷயம் தெரிந்தவர்; திறமைசாலி, நிர்வாகத்திற்கு வேண்டிய கண்டிப்பும் மிகுந்தவர், பேச்சுத் திறன் மிக்கவர். நிஜமில்லாததையும் நிஜ மென்று நம்ப வைக்கக் கூடியது அவர் பேச்சு. தோற்றால்கூட "நாங்கள் எங்கே தோற்றோம்? தம்பி புள்ளி விவரத்தைப் பார்த்தாயா?" என்பார்.

இவருடைய செய்தித்தாள்
மக்கள் கையில்.
மக்கள் தீர்ப்பு இவர் கையில்.



இது, நாம் படைத்த அரசு என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் இதை உருவாக்கி, ஆட்டிப் படைப்பது இந்த பத்திரிகை ஆளுநரும் இவர் கூட்டாளிகளும். இப்போது நாம் செய்யக் கூடியதெல்லாம், பார்த்துக்கொண்டிருப்பதுதான்.

அக்னி

260 எபிஸோடுகளை
கொண்ட பிரம்மாண்டமான புதிய தொடர்.

VIJAY TV

வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரை.
இரவு 7.00 மணி முதல் 7.30 வரை.



"அந்த வீட்டிலேருந்துதான் எல்லா பொருள்களையும் தொடைச்சு எடுத்துக்கிட்டுப் போனியே, திரும்பி அந்த வீட்டுக்கே ஏன் போய்த் தொலைச்சு மாட்டிக்கிட்டே?"

"ஹி....ஹி... திருடும்போது மறந்து போய் பீடி கட்டை அங்க வைச்சுட்டு வந்துட்டேன்!"

- கிறிஸ்டி

அப்போது எம்.ஜி.ஆர் முதல்வராக பதவியில் இருந்தார். கலைஞர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அப்போது இலங்கைப் பிரச்னை தமிழகத்தில் தொய்வு நிலையில் இருந்தது. சில மாதங்களுக்கு முன்பு தான் சபாரத்தினம் கொல்லப்பட்டார். அதில் கலைஞருக்கு மிகவும் அதிர்ச்சி. எம்.ஜி.ஆருக்கோ – விடுதலைப்புலிகள், அவர் கொடுத்த பணத்தையும் வாங்கிக் கொண்டார்கள், அதே சமயம் கலைஞர் திரட்டிக் கொடுத்த பணத்தையும் பெற்றுக் கொண்டார்கள் என்பதில் விடுதலைப் புலிகள் மீது அதிருப்தி.

அப்போது இலங்கைத் தமிழர் தலைவர்களான அமிர்தலிங்கமும், சிவ சிதம்பரமும் முதல்வர் எம்.ஜி.ஆரின் விருந்தினராகச் சென்னையில் குடி இருந்தனர்.

இந்த நிலையில் இலங்கையில் தமிழர் படுகொலை அநியாயமாக நடந்து கொண்டிருந்தது. கேட்பாரில்லை. டாக்டர் இரா. ஜனார்த்தனம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் இருவரையும் அழைத்துக் கொண்டு நான் தங்கி இருந்த இடத்திற்கு வந்து விஷயத்தை விளக்கினார். எம்.ஜி.ஆரிடம் சொல்லுங்கள் என்றார்கள்.

எம்.ஜி.ஆரோ எனது நெருங்கிய நண்பர். எனினும் நான் அவரிடம் செல்லவில்லை. கலைஞரை அவருடைய தேனாம்பேட்டை அலுவலக மாடியில் தனியே சந்தித்தேன். சிரித்துக் கொண்டே அவர் கேட்ட முதல் கேள்வி: "எம்.ஜி.ஆர்தான் உங்கள் நண்பராயிற்றே. ஏன் அங்கே போகவில்லை?"

"அங்கே நான் ஏன் போகவில்லை என்பது இங்கே வந்திருப்பதிலிருந்தே தெரிந்திருக்குமே. நீங்கள் ஏதாவது இலங்கை மக்களுக்குச் சாதகமாக அறிக்கை விட்டால் தான் அவர் நகர்வார்; அவரும் இதில் அக்கறை காட்டுவார்'' என்று விவரமாகச் சொன்னேன். யாரைப் பற்றியாவது ஒரு அபிப்ராயம் எம்.ஜி.ஆர் மனதில் விழுந்து விட்டால் நாம் சொல்லி அவரை மாற்றுவது சுலபமல்ல. ஆனால் கலைஞர் அறிக்கை விடுவாரானால் உடனே அவரும் இறங்குவார். இது என் கணிப்பு.

நான் எம்.ஜி.ஆரின் நண்பராக இருந்த போதிலும் நான் கலைஞரைப் போய்ப் பார்க்கத் தயங்கவில்லை; அவரும் என்னுடன் இனிமையாகப் பேசத் தயங்கவில்லை. திறந்த மனத்துடன் விஷயத்தை அணுகினார். "நான் உங்களுக்குத் திங்கட்கிழமை பதில் சொல்கிறேன்" என்றார். நான் அவரைப் பார்க்கச் சென்றது வெள்ளிக் கிழமை.

திங்களன்று, நான் அவரை முன்பு போல் தனியாகத்தான் சந்திப்பேன் என்று எண்ணிச் சென்ற எனக்கு காத்திருந்தது அதிர்ச்சி. அங்கே அரங்கண்ணல், பேராசிரியர், வைகோ மற்றும் ஒரு பத்துப் பேர் – தீவிர தி.மு.க கட்சிக்காரர்கள். அங்கே அமர்ந்திருந்தார்கள். அவரது முடிவை எதிர்பார்த்துச் சென்ற என்னைப் பார்த்து அவர்களது கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுங்கள் என்று சொல்லி விட்டார் கலைஞர்.

இது நான் எதிர்பாராத ஒன்று. எனினும் பதில் சொன்னேன். விளைவு? மறுநாளே அவர் சொன்னதுபோல ஒரு அறிக்கை விட்டார். பின்பு வழக்கம் போல இலங்கைப் பிரச்னையில் எல்லாத் தரப்பு தலைவர்களும் அக்கறை கொண்டார்கள். அமிர்தலிங்கம் அவர்களுக்கும் சிவசிதம்பரம் அவர்களுக்கும் இதில் மிகுந்த திருப்தி. முக்கியமான இலங்கைப் பிரச்னையை விட்டுக் கொடுக்காமல், தமிழர்களின் உரிமைக்காக அவர் அன்று இறங்கினார். அது சாதாரண விஷயமல்ல. அதனால் அன்று ஒரு திருப்பம் ஏற்பட்டது உண்மை.

(தொடரும்)

செம்மங்குடி சீனிவாசய்யர் சொல்கிறார்:

“ஒரு பவர்ஃபுல் பேனா!”

சங்கீதம் தெரியாதவனும்கூட அவர் எழுதுவதைப் படித்து ரசிக்க முடியும். சங்கீதத்தில் ஒரு ருசி வரும் அளவுக்கு எழுதியவர் கல்கி.

என் முதல் கச்சேரி 1932லோ, 33லோ அரண்மனைக்காரன் தெருவிலுள்ள சௌந்தர்ய மகாலில் நடந்தது. அதைப் பற்றி விமர்சனம் எழுதியிருந்தார் கல்கி. நன்றாகத்தான் எழுதினார். சாகித்திய உச்சரிப்பு நன்றாக இருக்க வேண்டும் என்று அதில் ஓர் அட்வைஸ் செய்திருந்தார். அதை நான் வரவேற்றேன்.

அதைத் தொடர்ந்து ‘ஆனந்த விகடனி’ல் ‘ஆடல்- பாட’லில், செம்மங்குடி சீனு என்று (வால் போஸ்டரில்!) போட்டு ஒரு பிரதானமான இடத்தைக் கொடுத்தார். அது முதற் கொண்டே கல்கி எனக்குப் பழக்கமானார்.

1933ல் நானும் சதாசிவமும் கும்பகோணத்தில் எக்ஸிபிஷனில் கதர்த் துறை வைத்த போட்டியில் ஜட்ஜுகளாக இருந்தோம். அப்போது ஆனந்த விகடனில் இருந்தார் சதாசிவம். அப்போதுதான் அவரும் நானும் நெருங்கிய நண்பர்களானோம். அதைத் தொடர்ந்து கல்கியும் எனக்கு மிக நெருக்கமானவர் ஆனார்.

கல்கியை ஒரு க்ரிட்டிக் என்று சொல்ல மாட்டேன். ஆனால் ஒரு கச்சேரியைப் பற்றி எழுதினால், அதைப் படிக்கிறவர்கள் அந்தக் கச்சேரியை நேரில் பார்க்கிற மாதிரி ஒரு தோற்றத்தை உண்டு பண்ணி விடுவார். அவ்வளவு ரொம்ப பவர்ஃபுல் பேனா அவரோடது.

சில காரணங்களுக்காக என்னைத் தாக்கி எழுதியிருக்கிறார் கல்கி. அதை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அவர் வீட்டிலேயே கச்சேரி செய்யக் கூப்பிட்டிருக்கிறார். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் பாடச் சொல்லி என்னை ஊக்குவித்தவர் கல்கி.

எனக்கு நல்ல லிஃப்ட் கொடுத்தவர் அவர்தான். அரசியல் சம்பந்தமாக அவர் எழுதினதை எல்லாரும் புரிஞ்சுக்க முடியறது. காரணம் அவர் நடை. ஜனங்களுக்கு அரசியல் ஞானம் வர அவர் உதவினார் என்றால் அதில் தப்பே இல்லை.

தமிழிசை இயக்கத்தின்போது, ஆரம்பத்தில் நான் அதற்கு ஒத்துழைக்கவில்லை போன்ற குறை அவருக்கு இருந்தது உண்மைதான். தமிழ்நாட்டில் தமிழில் பாடணும்தான். இதில் தவறே இல்லை. ஆனால் எங்களுக்குப் பாடம் சொல்லித் தந்தவர்கள் அவ்வளவு அதிகமாகத் தமிழ்க் கீர்த்தனைகள் சொல்லித் தரவில்லை என்று நான் சொன்னதைப் பிறகு அவர் ஏற்றுக் கொண்டார்.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் ஒருதடவை இது விஷயமாகப் பேச என்னை அவர் மாளிகைக்கு அழைத்திருந்தார். நானும் முத்தையா



பாகவதரும் போனோம். வாயில் முகப்பிலேயே நின்று கொண்டு, கார் கதவை அவரே திறந்து விட்டு எங்களை வரவேற்றார் அண்ணாமலைச் செட்டியார். தமிழ்ப் பாடல்கள் கச்சேரிகளில் பிரபலமாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். கச்சேரிகளில் பாடக்கூடிய பாட்டுக்களைத் தேர்ந்தெடுத்து, வர்ண மெட்டுக்கள் அமைத்துப் புத்தகமாகப் போட்டுப் பரவச் செய்ய வேண்டும் என்று நான் சொன்னேன். அதன்படியே செய்தார் அண்ணாமலைச் செட்டியார்.

தமிழிசைக்கு நான் எதிரி அல்ல என்பதைப் பிறகு கல்கி புரிந்து கொண்டார்.

கானாடுகாத்தானில், ஒரு கச்சேரியில் தமிழ்ப் பாட்டுக்களையே பாடச் சொல்லிக் கேட்டார்கள். பாடினேன்.

கண்டனூரிலும் அதே மாதிரி தமிழ்க் கீர்த்தனைகளைப் பாடச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில் பாடுகிறேன் என்று சொல்லி விட்டுப் பாடினேன். கச்சேரிக்கு வந்திருந்த அண்ணாமலைச் செட்டியார் தம் கைப்பட ஒரு கடிதம் எழுதி என்னைப் பாராட்டியிருந்தார். இவை எல்லாம் கல்கிக்கும் தெரியும்.

1938ல் சென்னை வானொலி ஆரம்பித்தார்கள். நான் அப்போது கும்பகோணத்தில் இருந்தேன். நீங்கள் ஆரம்ப நாளன்று வந்து பாட வேண்டும் என்று எழுதியிருந்தார்கள். இதற்காகச் சென்னை வந்து போவது எனக்கு உசிதமாகப்படவில்லை. நான் வர இயலாது என்று எழுதிப் போட்டு விட்டேன். அதைத் தெரிந்து கொண்ட கல்கி, 'ராஜாஜி அன்றைக்குப் பேசப் போகிறார். நீங்கள் அவசியம் வந்து பாடத்தான் வேண்டும்' என்று வற்புறுத்தி எழுதினார். நான் வந்து பாடினேன். என் பேரில் இருந்த விசேஷ அன்புதான் அதற்குக் காரணம்.

கல்கி என்னைத் தாக்கி எழுதினாலும், தூக்கி எழுதினாலும் நான் அதை வரவேற்றேன். அதனால் எங்கள் நட்பு பாதிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை.

சந்திப்பு: **சாருகேசி**

இந்துக்களுக்கு எதிரான நீதிபதி என்று சிவ சேனைக்காரர்கள் பிரசாரம் செய்து வரும் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவிடம், டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் பெண் நிருபர் ஒருவர் பேட்டி தருமாறு கேட்டார்.

வெகு அடக்கமானவர் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா. பேட்டி, புகைப்படம் என்றாலே ஒதுங்கி விடுவார். அசாத்திய தெய்வபக்தி உள்ளவர். ஆதி சங்கரரின் உபதேசங்களில் ஊறிப் போனவர். மாதுங்காவில், அவர் வீட்டில் உள்ள பூஜை அறையில் விநாயகர், சிவன், கிருஷ்ணர், ராமர் படங்களுடன் பதின்மூன்றாவது சிருங்கேரி சங்கராச்சாரிய சுவாமிகள் படமும் இருக்கிறது. நீதிபதியின் குடும்பத்தின் குரு இவர்தான். ரங்கோலி கோலமும், புத்தம்புது மலர்களின் வாசனையும் ஊதுவத்திகளின் நறுமணமுமாக, பூஜை அறையைப் பார்த்தாலே மனம் அமைதியடையும்.



''என் ரிப்போர்ட் சரியா, தவறா என்பது பற்றி எல்லாம் நான் கவலைப்படவில்லை. என்னை இந்துக்களின் எதிரி என்று சொல்லுவது பற்றியும் நான் கவலை கொள்ளவில்லை. நான் செய்த முழு விசாரணையும் என் மனசைப் பாதித்தது. குழந்தைகளை உயிரோடு எரித்ததும், பெரியவர்களை அரிவாள்களால் வெட்டிப் போட்டதும், என் உணர்வுகளை அப்படியே பிழிந்து எடுத்து விட்டது. நாங்கள் நீதிபதிகள். சட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்தவர்கள். நெல்லையும் உமியையும் பிரித்து எடுப்பது எப்படி என்று அறிந்தவர்கள்!'' என்கிறார் ஸ்ரீகிருஷ்ணா.

வேறு யாருக்குமே பேட்டி கொடுக்காத நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா, இந்த நிருபருக்கு மட்டும் பேட்டி அளிக்க ஒப்புக் கொண்டது எப்படி?

நிருபரின் பெயர்: திரௌபதி ரொஹேரா! 'திரௌபதி கேட்டு ஸ்ரீகிருஷ்ணன் உதவ மறுக்க முடியுமா?' என்று சொல்கிறார் நீதிபதி. இன்னொரு நிருபருக்கும் பேட்டி தரச் சம்மதித்திருக்கிறார் ஸ்ரீகிருஷ்ணா. அவர் பெயர் குந்தி!

நன்றி – டைம்ஸ் ஆஃப் இந்தியா

– எஸ்.வி.என்.



• பிரதமர் வாயால்....

● என்.கே. மூர்த்தி, குடந்தை-1.

? கள்ளச் சாராயம் காய்ச்சுவோருக்கு ஆயுள் தண்டனையாமே?

!Good! துணை போகும் காவல் துறையினருக்கும் வஞ்சனை இல்லாமல் தண்டனையைக் கடுமையாக்கலாம்.

●. மு. இரவிச்சந்திரன், சேலம் – 9.

? சமீபத்தில் தங்களை உலுக்கிய செய்தி?

! பெரிய பெரிய விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துப் போய் கடலிலே கரைக்கிறேன் என்று ஆரம்பித்து, அரைகுறையாகச் செய்யப் போக, ஏராள சிலைகள் சிதிலமடைந்த நிலையில் அலைகளால் கரையில் ஒதுக்கப்பட்டு, கேட்பாரற்றுக் கிடக்கும் அவலக் காட்சியைப் படம் பிடித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் பிரசுரித்திருந்தது. உண்மையிலேயே கண்ணீரை வரவழைத்து விட்டது இந்தப் படச் செய்தி.

● எஸ். சிவாஜி மனோகர், கோவை – 9.

? தி.மு.க அரசு திருக்குறள் மாதிரி; அவரவர் தங்களுக்கு ஏற்ப உரை எழுதுகிறார்கள். அதற்குத் திருக்குறள் பொறுப்பாகாது என்று கலைஞர் பேசியுள்ளாரே...?

! ஆட்சி, குறளைப் போல் குறையில்லாததாக இருந்தால் உரை யாவுமே பெருமைதானே சேர்க்கும்!

● டீ.எஸ்.டீ ராயன், நல்லத்துக்குடி ❐

? அமெரிக்காவின் தாக்குதல் சரியான அணுகுமுறையா...?

! அமெரிக்க மக்களிடம் மன்னிப்புக் கோரும் நிலைக்குத் தள்ளப்பட்ட கிளிண்டன் தமது சுய கௌரவத்தைத் திரும்பப் பெற எண்ணி நடத்திய அதிரடித் தாக்குதல் இது! இதனால் பயங்கரவாதம் மடியாது; அப்பாவி மக்கள் தான் சாவார்கள். பயங்கரவாதம் பழி வாங்கும் படலத்தைத் தொடரும்.

● ஜி. கிருஷ்ணமூர்த்தி, தஞ்சாவூர் – 7.

? 'பிரமோத் மகாஜன் கடிதத்துக்குப் பதில் என்ன' என்று கேட்ட நிருபர்களிடம், 'கண்டவர்கள் கடிதங்களுக்கெல்லாம் (Tom, Dick and Starry) பதில் சொல்ல முடியாது' என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறாரே...?

! அகந்தையின் உச்சம்! பதில் சொல்ல முடியாமல் திணறும்போதுகூட அது தலை காட்டுகிறது!

● செ. மலர்விழி, மதுரை – 10.

? ஹிந்துமத தத்துவத்தைப் பரப்ப மூன்று கட்டப் பயிற்சி மையங்களை அமைக்கப் போவதாக விஷ்வ ஹிந்து பரிஷத் கூறுகிறதே...?

! முஸ்லிம் அடிப்படைவாதிகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதைப் பார்த்த ஷரீஃப், அவர்களை ஓரம் கட்டி, தமது நிலையைப் பலப்படுத்திக் கொள்ள 'பாகிஸ்தானில் இனி சட்டங்கள் குரான் அடிப்படையில் இருக்கும்' என்று அறிவித்து விட்டாரல்லவா...? எனவே இங்கேயும் ஹிந்துத்வா கோஷம் முன்னிலும் அதிகரிக்கும்! ஆனால், இரு நாடுகளுமே தவறான திசைகளில் செல்கின்றன என்பதில் ஐயமில்லை.

● எல்.எம். மங்கை, திருவண்ணாமலை.

? அரசியல்வாதிகளில் பொறுமை காத்தலில் முதலிடம் யாருக்குத் தரலாம்?

! வாஜ்பேயைத் தவிர வேறு யாரைச் சொல்ல முடியும்?!

● என். சங்கர், கோட்டையூர்

? பி.ஜே.பி ஆதரவின் பரிசீலனை முடிவை ஜெ எப்பொழுது வெளியிடுவார்...?

தி.மு.க. அரசு

! ஆதரவு குறித்து மறு பரிசீலனை செய்யும் முடிவு மறுபரிசீலனையில் இருப்பதாக மறுபரிசீலனை செய்து சொல்லியிருக்கிறாரே... பொறுத்துப் பார்ப்போம்!

● வே. முருகேசன், சென்னை – 4.

? தபால் கட்டணம் உயர்ந்து விட்டதே?

! களீர் சவுக்கடி சார்!

● கே.ஆர். வேலுச்சாமி, அன்னூர்.


? இப்போதெல்லாம் படிப்புக்கேற்ற வேலை கிடைப்பதில்லையே...?



• தவறான கருத்துட..



• நிகழாத....



• சந்திப்பு!

திருக்குறள் மாதிரியா?

நீங்கள் கேட்டவை — தராசு

! வேலைக்கேற்ற படிப்பாகப் பார்த்துப் படிக்க வேண்டியது தானே!

● ப.சுகுமார், தூத்துக்குடி - 1.

? ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்வதைவிட, ஆட்களை மாற்றுவதில் அதிக ஆர்வம் காட்டுகிறாரே மத்திய அமைச்சர் தம்பிதுரை?

! ஜெத்மலானியும் அவர் வழி தொடர்கிறார். M.S. Shoes நிறுவனத்துக்கு முறைகேடாக நிலம் ஒதுக்கக் குறுக்கே நின்ற அதிகாரி ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டார்!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? மக்கள் பெருமளவு பயன்படுத்தும் கடுகெண்ணெய், அவர்களுக்கு எதிராகவே திரும்பியதன் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாதா?

! கலப்படம் என்று கண்டு பிடித்துள்ளார்களே! கலப்படத்தின் மூலஸ்தானம் கண்டறியப்பட்டுத் தகர்த்தெறியப்பட வேண்டும்.

● எம். சாம்பமூர்த்தி, வேலூர்-1.

? டெண்டுல்கர், பிராட்மன் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டது எப்படி இருந்தது...?

! விழாவில் பலர் கலந்து கொண்டனர். ஆனால் பிராட்மன் அன்று சந்தித்த இருவருள் ஒருவர் நமது சசின் - 'என்னை எனக்கு நினைவூட்டும் ஆட்டக்காரர்' என கிரிக்கெட் பிதாமகரால் போற்றப்பட்டவர். நாட்டுக்கே பெருமைதான்.

● ஆர். இராமசாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

? 'தவறு என்று தெரிந்தால் எதையும் தூக்கி எறிவோம். நாற்பத்தைந்து ஆண்டு கால காங்கிரஸ் உறவையே தூக்கி எறிந்து விடவில்லையா...?' என மூப்பனார் கூறியதைப் பற்றி உங்கள் கருத்து என்ன...?

! சொல்லி விட்டுப் போகட்டும்; ஆனால் செயல்படும்போது Ground realities கவனித்துத்தான் செயல்படுவார் மூப்பனார் என்று நம்புவோம்.

● கே. மூர்த்தி, குட்டலாடம்பட்டி

? தொலைக்காட்சிகளில் வரும் டப்பிங் தொடர்களால் ஏதேனும் கருத்து (message) நேயர்களுக்குக் கிடைக்கிறதா...?

! கிடைக்கிறதே! இதையெல்லாம் பார்த்து நேரத்தை வீணடிக்காதீர்கள் என்ற மெஸேஜ்!



• 'தம்பி' வழியில்...!



• மறு மறு மறுபரிசீலனை!



• குறள் உவமை!



• சுய கௌரவம் காக்க...

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? ஒகூர் அருகே நடந்த விஷச் சாராய சம்பவத்தை அடுத்து தமிழக அரசு தனது தோல்வியை ஒப்புக் கொண்டு கள் மற்றும் சாராயக் கடைகளைத் திறக்க வேண்டும் என்று பா.ம.க நிறுவனர் ராமதாஸ் கொடுத்த யோசனை பற்றி...?

! பஸ், ரயில் எல்லாம் விபத்துக்குள்ளாவது உண்மைதான். அதற்காக பஸ், ரயில் போக்குவரத்தை நிறுத்தி விட முடியுமா? மதுவின் கொடுமைகள் அறிந்த ஒரு டாக்டர் இப்படிப் பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது!

● இ. ஆத்தியடிமுத்து, கல்விடைக்குறிச்சி

? தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் அணி சேரா நாடுகளின் கூட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் 'பேசிக்' கொள்வதனால் இந்தியாவுக்குப் பயன் ஏதாவது உண்டாகுமா?

! பேச வழியின்றி பாக் அதிபர் பயணமே ரத்தாகி விட்டதே! - பாக்கில் உள்நாட்டுப் பிரச்னை காரணமாக! இரு நாடுகளின் அயல் விவகாரச் செயலர்கள் அரைத்த மாவையே அரைத்து வருவார்கள்!

□ ரூ 50 பரிசு பெறுபவர்:

டி.எஸ்.டி. ராயன்,
ஓஷோ காலனி,
உடையார் தெரு,
நல்லத்துக்குடி, மயிலாடுதுறை 609 001

அவர் தொடாததில்லை

சின்னக் குத்தூசி



ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு 'கல்கி' மாதமிருமுறை ஏடாகத் தொடங்கப்பட்ட போது அதன் முதல் இதழில் - பத்திரிகையின் நோக்கம் என்ன என்பது பற்றி வாசகர்களிடம் நகைச் சுவை பொங்கிடப் பேசுகிறார் பேராசிரியர் கல்கி.

"புதிய பத்திரிகைக்கு எழுத ஆரம்பிக்கும் போது முதன் முதலில் நேயர்களிடம் கொஞ்சம் க்ஷேம லாபம் விசாரிக்கலாமென்று நினைத்தேன். "உபயகுசலோபரி" என்று போடுவதற்காக 'உ' என்னும் முதல் எழுத்தை எழுதினேனோ இல்லையோ, பின்னாலிருந்து "நல்லவேளை! பிள்ளையார் சுழி போட்டாயா? எங்கே என்னை மறந்து விடுகிறாயோ என்று பார்த்தேன்" என்னும் குரல் கேட்டது.

ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தேன்; சாக்ஷாத் விநாயகக் கடவுள் நின்று கொண்டிருந்தார்.

- என்று தொடங்கி - புதிய பத்திரிகை தொடங்குவதில் அந்தக் காலத்திலேயே இருந்த கஷ்ட நஷ்டங்கள் - சிரமங்கள் பற்றியெல்லாம் விநாயகரோடு கல்கி விவாதிக்கிறார். அந்த விவாதத்தின் மூன்று திருக்குறள்பாக்களை பொருத்தமான இடங்களில் சொல்லி, விநாயகரை அசத்துகிறார். அப்போது விநாயகர் கேட்கிறார் :

"உன்னுடைய பத்திரிகையின் நோக்கங்கள் என்ன?" என்று கணபதிராயர் கேட்டார்.

"ஸ்வாமி! தப்பில்லாமல் சரியாகப் பேசினால் பேசுங்கள்; இல்லாவிடில் வாயை மூடிக் கொள்ளுங்கள்" என்றேன்.

"என்ன தப்பு?" என்று கணபதி கேட்டார்.

"இது தமிழ் மக்களுடைய பத்திரிகை; தாங்கள் 'உன்னுடைய பத்திரிகை' என்று சொன்னது தப்பு" என்றேன்.

"அப்படியே இருக்கட்டும்; இந்தத் தமிழர் பத்திரிகையின் நோக்கங்கள் என்ன? புதிதாய்ப் பத்திரிகை ஆரம்பிக்கிறவர்கள் எல்லாம் இதைச் சொல்லுவது சம்பிரதாயமாயிற்றே?" என்றார் விநாயகர்.

"நானும் சொல்கிறேன், ஸ்வாமி! இந்தப் பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் உண்டு; முதலாவது நோக்கம் தேச நலன்..."

"இரண்டாவது?"

"இரண்டாவது, தேச நலன்."

"மூன்றாவது?"

"மூன்றாவதும் தேச நலன்தான்!"

"இவ்வளவுதானா? வேறு நோக்கம் ஒன்றுமே கிடையாதா? தமிழ் பாஷையைக் காப்பாற்றும் நோக்கம் கூடக் கிடையாதா?"

"தமிழ் பாஷை நன்றாய்த்தானே இருக்கிறது ஸ்வாமி! அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஒன்றும் காணோமே; நம்மைத்தான் தமிழ்த் தாய் காப்பாற்ற வேண்டும்!"

"கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்கம் அணுவளவும் கிடையாதா?"

"கலைகளுக்கும் அப்படி ஒன்றும் நேர்ந்து விடவில்லையே ஸ்வாமி! புத்துயிர் அளிக்க வேண்டிய அவசியம் என்ன? கலைகளை நாம் அனுபவிப்பதுதானே அவசியமாய் இருக்கிறது?"

- கல்கியின் இந்தப் பதில்களைக் கேட்டதும் விநாயகர், "ரொம்ப சந்தோஷம் அப்பா! நான் உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதென்று தீர்மானித்து விட்டேன்" என்கிறார்.

இப்படிச் சொல்லி விட்டு கல்கிக்கு தனது சந்தாத் தொகை என்று மூன்று ரூபாயை வழங்குகிறார். விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட விநாயகர் மறுபடியும் திரும்பி வந்து,

"நம்முடைய தம்பி எந்த விஷயத்திலும் போட்டிக்கு வருகிறவன் ஆயிற்றே! எனக்குப் பத்திரிகை படிக்கக் கிடைக்காமல் அவன் கொண்டு போய் விடுவான். அவனுக்கும் ஒரு சந்தா கட்டி விடுகிறேன்" என்று சொல்லி மறுபடியும் மூன்று (ஒரு ரூபாய்கள் அடங்கிய) கொழுக்கட்டைகளை

வைத்தார்"

– என்கிறார் கல்கி.

கல்கிக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? அந்தக் காலத்திலும் சரி, இந்தக் காலத்திலும் சரி, சாதனைகள் குவித்த எழுத்தாளர்கள் எத்தனையோ பேர் இருந்தார்கள்; இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் சிறுகதை – நாவல் – கவிதை என்று ஏதாவது ஒரு துறையில்தான் சாதனை படைத்திருப்பார்கள். கல்கி அப்படியல்ல; நாவல், சிறுகதை, அரசியல் விமர்சனம், வாழ்க்கை வரலாறு – சங்கீத விமர்சனம், பயணக் கட்டுரைகள், சினிமா விமர்சனம் என்று அவர் தொடாத துறைகளே இல்லை எனலாம்! அவர் தொட்டது அத்தனையும் பொன் போலப் பிரகாசித்தன என்பதைத்தான் – எத்தனை முறை சிவகாமியின் சபதம் – பொன்னியின் செல்வன் போன்ற அவரது படைப்புக்களை திரும்பத் திரும்ப மறு பிரசுரம் செய்தாலும் – மறுபடியும் மறுபடியும் அவற்றைப் படிக்க வாசகர்கள் போட்டி போட்டுக் கொண்டிருப்பது நிரூபிப்பதாக இருக்கிறது.

கல்கி எழுதியது எதுவானாலும் – தலையங்கம் ஆனாலும், சினிமா விமர்சனமானாலும் – அவர் எழுதிய எல்லாவற்றிலும் நகைச்சுவை என்பது இழையோடிக் கொண்டிருக்கும். முதல் இதழின் 'உபயகுசலோபரி'யிலும் அந்த நகைச்சுவை உணர்வு ஆரம்ப முதல் கடைசி வரையில் பளிச்சிட்டபடியே இருக்கிறது.

வாசகர்களில் சிலர் கேட்கலாம். "பிள்ளையாராவது, வருவதாவது; வந்தாராம்; சந்தா கட்டினாராம்; தன் தம்பி முருகனுக்கும் ஒரு சந்தா கட்டினாராம்" – இது என்ன முதல் இதழிலேயே வாசகர்களின் காதுகளில் பூச்சுற்ற முயன்றிருக்கிறாரே கல்கி! இதைப் போய் நகைச்சுவை என்று சின்னக் குத்தூசியும் சேர்ந்து கயிறு திரிக்க முயற்சிக்கலாமா?" என்று சந்தேகிக்கலாம். இந்த சந்தேகத்துக்கு கல்கியே – நகைச்சுவை ததும்பிட பதிலளிக்கிறார் அந்தக் கட்டுரையின் கடைசிப் பகுதியில்.

"நேயர் ஸ்ரீ சந்தேகஸ்வாமி அவர்களுக்கு ரொம்ப ரொம்ப ஆத்திரம் வந்து கொண்டிருப்பது எனக்குத் தெரிகிறது. "இதெல்லாம் என்ன கதை? விநாயகர் வரவாவது? சந்தா செலுத்துவதாவது? முதல் இதழிலேயே இவ்வளவு பொய்யும் புனைசுருட்டுமா?" என்று அவர் கோபமாய்க் கேட்பது என் காதில் விழுகிறது!

தயவுசெய்து அவருக்குச் சௌகரியப்படும் போது நமது காரியாலயத்துக்கு விஜயம் செய்து, நமது சந்தாதாரர் ரிஜிஸ்டரைப் புரட்டிப் பார்க்கும்படி ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன். மற்றுமுள்ள நேயர்களையும் அவ்வாறே வேண்டிக் கொள்கிறேன்.

அப்படி விநயம் செய்யும் அன்பர்கள் சந்தாதாரர் புத்தகத்தின் தலைப்பில் பின்வரும் பதிப்புகளைப் பார்ப்பார்கள் :

1. ஸ்ரீ. ஆர். விநாயகம் பிள்ளை எம்.ஏ.பி.எல்.,
93, வடக்குத் தெரு, சிதம்பரம்.
2. ஸ்ரீ. க. நா. சுப்ரமணியம்,
ஆணிக்காரன் தெரு; சிதம்பரம்.



தொட்டுப் பொன்னாக்காததில்லை!

விநாயகம் என்பவர் சிதம்பரத்தி லிருந்து முதல் சந்தாவையும், பிரபல இலக்கிய விமர்சகர் க. நா. சுப்ரமண்யம் இரண்டாவது சந்தாவையும் அனுப்பி வைத்தது தற்செயலாக நிகழ்ந்த ஒன்றாக இருக்கலாம். அதையே விநாயகர் விநய மாக்கி, அதன் மூலம் பத்திரிகையின் நோக் கங்களை விளக்கி – விநாயகரே தனக்கும் தன் தம்பி முருகனுக்கும் சந்தாக்கள் கட்டிய தாகக் கற்பனை செய்வது என்பது எல்லோ ருக்கும் கைவரக்கூடியதா? கல்கிக்குத்தான்– அது அவருக்கே உரித்தான தனிச்சிறப்பு என்றால் மிகையல்ல.

இன்று எல்லாப் பத்திரிகைகளுமே – வாசகர்களின் கடிதங்களை வெளியிடுகின் றன! வாசகர் கடிதங்களை வெளியிடுவதில் கூட கல்கி – தமக்கென ஒரு தனிப்பாணி வகுத்துக் கொண்டார்! வாசகரின் கடி தத்தை வெளியிடுவதோடு நிறுத்திக் கொண்டு விடாமல் – ஒவ்வொரு வாசகரின் கடிதத்திற்குக் கீழும் – தமது பதிலை அல் லது விளக்கத்தையும் அவர் வெளியிட்டு வந்தார் 'நமது வட்டமேஜை' என்ற தலைப் பின் கீழ் இரண்டாவது இதழில் வாசகர் கடிதங்களை வெளியிட்ட அவர், அந்தப் பகுதிக்கு ஒரு முன்னுரை எழுதியிருக்கிறார்; அதுவும் தனித்தன்மை வாய்ந்ததே!

''இந்த வட்டமேஜை மகாநாட்டில், 'கல்கி' நேயர்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டு. வாழ்த்துக் கூறலாம்; வம் புக்கு இழுக்கலாம்; சந்தேகம் கேட்கலாம்; சண்டை பிடிக்கலாம்; ஆட்சேபம் எழுப்ப லாம்; சமாதானமும் சொல்லலாம்; எழுதும் விஷயம் சுருக்கமாக இருக்க வேண்டும் என்ற ஒரே நிபந்தனைதான்'' என்று எழுதியிருக்கிறார் கல்கி.

ஒவ்வொரு கடிதத்திற்கும் அவர் பதில் எழுதியிருப்பது – அவரே எல்லாக் கடிதங் களையும் படிக்கிறார்; உதவி ஆசிரியர்கள் மூலம் வாசகர் கடிதங்களைத் தயாரிப் பதில்லை – என்பதை நிரூபிப்பதோடு வாச கர்கள் யாரும் ''சபாஷ்'' 'கீப் இட் அப்'' என்று அவருக்கு ஐஸ் வைத்து ஏமாற்றி விட முடியாது என்பதையும் பம்பாய் வாசகர் ஒருவரின் கடிதத்துக்கு எழுதிய பதிலி லிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

''கல்கியைப் படித்தேன்; நன்றாயிருக் கிறது'' என்று ''பாயசம் தித்திக்கிறது'' என்கிற தோரணையில் சொல்ல' நான் விரும்பவில்லை. கல்கியின் சிருஷ்டி பின் எப்படித்தான் இருக்கும்? இப்படிச் சொல்லும்பொழுது கோல்டுஸ்மித்தைப் பற்றி டாக்டர் ஜான்சன், ''அவர் தொடாத தில்லை; தொட்டுப் பொன்னாக்காத தில்லை'' என்று சொன்னது ஞாபகம் வரு கிறது. பத்திரிகை – மதிப்புரைக்காரர்கள் சொல்லுகிறபடி ராஜ்யம், இலக்கியம், சித்திரம், சிறுகதை, சினிமா, ரேடியோ, சங்கீதம் இத்யாதி விஷயங்களை ஏந்திப் பெரிய சைஸ் – நூறு பக்கங்களில் வெளி வருவது இந்தக் காகிதப் பஞ்சகாலத்தில் உமது தைரியத்தைக் காட்டுகிறது. இரண் டணாவுக்கு 'ராக்ஷஸ மதிப்பு' இங்கிலீஷில் 'ஜெயண்ட் வால்யூ' என்பார்களே அது போல'' என்று பம்பாய் வாசகர் பி.எஸ். சேஷாத்ரி எழுதிய விமர்சனக் கடிதத்திற்கு கல்கி எழுதிய பதிலில் – வாசகரின் கவனக்குறைவை – நயம்பட நகைச்சுவை

கருத்து : ராஜிராதா





''உங்க கட்சி நடத்திய உண்ணாவிரதம் பிரம்மாண்டமான துன்னு எப்படிச் சொல்றீங்க?''

''அன்னைக்கு பிரியாணி செலவு மட்டுமே ஐயாயிரம் ரூபாய்க்கு மேலே ஆயிருக்கே!''

– சீர்காழி ரேவதி

உணர்வோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்.

''ரேடியோ, சங்கிதப் பகுதிகள் முதல் இதழில் சேர்க்கப்படாததை இவ்வளவு நயமாக எடுத்துக்காட்டியதற்காக எனது ராட்சச வந்தனம்.''

– என்று பதிலளித்திருக்கிறார் கல்கி!

சினிமா விமர்சனங்களிலும் அவர் ஒரு தனிப்பாணியைக் கையாண்டார். வந்த படங்களுக்கு விமர்சனம் எழுதுவது மட்டுமல்ல; வரப் போகிற படங்களுக்கும் அவர் முன்னோட்டம் போல, நகைச்சுவை ததும்பிட எழுதுவார்.

'அசோக்குமார்' படம் வெளிவருவதற்கு முன்பு – முண்டாசு கட்டிய பாகவதரின் படத்தை முக்கால் பக்க அளவுக்கு வெளியிட்டு – அதன் கீழே கால் பக்கம் விளக்கமளித்திருக்கிறார் கல்கி. ''யார் தெரிகிறதா? பேஷாய்த் தெரிகிறதே. இப்படியெல்லாம் பெரிய முண்டாசாகக் கட்டிக் கொண்டு, ஏமாற்றப் பார்த்தால் முடிகிற காரியமா என்ன? ஸ்ரீ எம். கே. தியாகராஜபாகவதர் எந்த வேஷத்தில் இருந்தாலும், எந்தப் படத்தில் நடித்தாலும், முதலில் பாகவதர்தான், அப்புறந்தான் கதாநாயகர். கடைசியாக இவர் கதாநாயகனாக நடித்திருக்கும் அசோக் குமார் படம் சீக்கிரத்தில் சென்னைக்கு வருகிறதாம். இவருடன் மேற்படி படத்தில், பிரசித்த ஆந்திர நடிகர்களான கண்ணாம்பாவும், நாகய்யாவும் நடித்திருக்கிறார்களாம்! ஆனால் முக்கியப் பாத்திரமாக ஸ்ரீ பாகவதர் நடிக்கும் போது, கூட நடிப்பவர்கள் ஆந்திர நடிகர்களாய் இருந்தாலென்ன, ஆங்கிலேய நடிகர்களாயிருந்தால் தான் என்ன?''

கல்கியின் நகைச்சுவைக்கு இன்னொரு உதாரணம் – சபாபதி என்ற படம் வெளிவருவதற்கு முன்பு – நகைச்சுவை நடிகர் சாரங்கபாணியின் படத்தைப் பிரசுரித்து – கல்கி எழுதிய விமர்சனம் இது:

''சபாபதி டாக்கியில் சாரங்கபாணி ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராக நடிக்கிறாரென்றறிந்து யாம்களி பேருவகை எய்தினோம். வெண் டிரைட்டண்டமிழ்ப் படத்தின்கண் இற்றை வரை நகைச்சுவை நடிப்பிற் பல்வேடம் புனைந்து மக்களைக் களிப்பூட்டுவார் சிலரேயாம்; மிகச் சிலரேயெனினும் பிழைபடா. இன்னவர்களிலின்று இயல்போடொட்டியக் களி நடிப்பிற் நம்மோ டொப்பாரற்ற திறன் வாய்ந்த திரு. சாரங்கபாணி என்பார், இச் 'சபாபதி' வெண்டிரைப் படத்தினிற்றோன்றித் தண்டமிழ்ப் பண்டிதராய் நடிக்கிறாரெனும் செய்திகேட்டு உவகையெய்தாத மாந்தரும் உளராம் கொல்! 'சபாபதி'யின்கண், சாரங்கபாணியின் ஆசிரிய நடிப்பினைக் கண்ணுற்ற வன்பர்களொரு கருத்தினராய்ப் புகழ்தலின்வன் நோக்கிற் பிற கூறுதலெற்றுக்கு?


தமிழ் எழுத்தாளர்களில் வேறு எவரும் எழுதியிராத அளவுக்குப் பல்வேறு துறைகள் பற்றியும் கல்கி எழுதி எழுதிக் குவித்திருக்கிறார் என்பதற்கு அவரது புனைபெயர்களே சான்றாக விளங்குகின்றன.

அகஸ்தியர், கர்நாடகம், குகன், தமிழ்த் தும்பி, தமிழ் மகன், துதிக்கையான், பரிசோதகர், முகமூடி, ராசி, வழிப்போக்கன், விசிறி, ஒரு தமிழன், ஒரு பிராம்மண இளைஞன், கிராமவாசி, தமிழ்த் தேனீ, தும்பி, தேனீ, பிரகஸ்பதி, பெற்றோன், யமன், லாங்கூலன், விகடன், விவசாயி, கல்கி என்ற புனைபெயர்களில் எத்தனை எத்தனை கட்டுரைகள் – கதைகள் எழுதியிருக்கிறார்; அத்தனையையும் ஒரு கட்டுரையில் சொல்லி விட முடியுமா?

கல்கிக்குப் பிடித்த கம்பராமாயணத்தின் முதல் பாடலில் கம்பன், ''பாற்கடல் முழுவதையும் ஒரு பூனை நக்கியே குடித்து விடலாம் என்று நம்பியது போல, நான் ராமன் கதையைப் பாட வந்தேன்'' என்பார். கல்கியின் படைப்புக்கள் என்னும் பாற்கடலின் பெருமையை யார்தான் ஒரே ஒரு கட்டுரை மூலம் வர்ணித்துச் சொல்லிவிட முடியும்?


20 cms. x 6 cms.

அக்னி சர்மா பக்கம்:



மேஷம்: *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உடல்நலத்துல கவனமா இருங்க சார்! கொஞ்சம் அசந்தா ரெண்டு, மூணு நாள் பெட் ரெஸ்ட் எடுங்கன்னுடுவார் டாக்டர்! எந்தக் காரியத்தையும் திட்டமிட்டுச் செய்யுங்க. அகலக் கால் வைக்காதீங்க! அலுவலகத்துல யார்கிட்டயும் வாய்வுடாதீங்க. சிலருக்கு டிரான்ஸ்ஃபர் வந்து சங்கடம் கொடுக்கும். பெண்களுக்கு ரொம்ப சாதாரண வாரம். வீண் வம்புகளில் தலையிடவே செய்யாதீங்க.




ரிஷபம்: *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

வாழ்க்கைல ஒரு பிடிப்பு வேணும் சார்! உங்க லட்சியமெல்லாம் உயர்வானது தான். ஆனா உழைப்பு போதலையே! கடுமையா உழைச்சிங்கன்னா, வெற்றி நிச்சயம். பேச்சைக் குறைங்க. இந்த வார முற்பகுதில நீங்க திட்டமிட்டபடி காரியங்கள் எல்லாம் பிரமாதமா ஒர்க்-அவுட் ஆகும். பணவரவு திருப்தியா இருக்கும். சிலருக்குத் திருமண யோகம் கூடும்.



மிதுனம்: *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

வீட்டுல ஏதோ ஒரு மகிழ்ச்சிகரமான காரியம் நடக்கப் போவுது. அது உங்களுக்கு மகனோ பேரனோ பிறக்கறதா இருக்கும். பொருளாதார ரீதில, கையிருப்பு திருப்தியாவே இருக்கும்னாலும் தேவையற்ற செலவுகள் அதிகம் வரும்! கடன் குடுக்காதீங்க – யாருக்கும். லாட்டரி, ரேஸ் வேணாம். சிறு விபத்துக்கு சான்ஸ் இருக்கு. கவனமா இருங்க.




கடகம்: *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

விசேஷமா எதையும் எதிர்பார்க்காதீங்க. திறமைக்கு உரிய மரியாதை இல்லையேன்னு கலங்கறீங்களா? வெயிட். இது கொஞ்சம் கஷ்டமான வாரம். எதிரிகள் ரொம்பத் தொல்லை குடுப்பாங்க. பொருள் இழப்பு, மனக்கஷ்டம், அலைச்சலும் இருக்கும். ஆபீஸ்ல மேலதிகாரிகளோட அதிருப்திக்கும் ஆளாகலாம். விநாயகரை வழிபடுங்க. நல்லது நடக்கும்.



சிம்மம்: *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

ஒரு பக்கம் அலைச்சல், பொருள் இழப்பு, மறுபக்கம் புதிய வாய்ப்புகள், அதிர்ஷ்ட அனுபவங்கள். ஃபிஃப்டி ஃபிஃப்டி வாரம் இது! மனைவியோட சிறு ஊடல்கள் அடிக்கடி எட்டிப் பார்க்கும். மாமனார்/ மாமியார் கூடவும் மோதல் வரலாம். ஆனா ஆபீஸ்ல, அதிகாரிகளோட பாராட்டும் சிலருக்குப் பதவி உயர்வும் கூடக் கிடைக்கும்! இந்த வாரம் நடிகர்களுக்கு ரொம்ப விசேஷமா இருக்கும்.



கன்னி: *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


குருவும் சனியும் சாதகமா இல்லை. எந்தக் காரியத்திலும் கவனம் ரொம்ப முக்கியம். ஆனா உங்க சொல்வன்மையும் செல்வாக்கும் எப்படிப்பட்ட பிரச்னைலேருந்தும் உங்களைத் தப்ப வெச்சுரும். இயந்திர வேலை செய்யறவங்க கவனமா இருங்க. விபத்துகளுக்கு வாய்ப்பு!



சிம்ம ராசிக்காரரான ஜெயசூர்யாவுக்கு மனைவியோடு சின்னச் சின்ன ஊடல்கள் வருமாம்!


செப்டெம்பர் 9 முதல் 15 வரை

பெண்களுக்கு உல்லாச அனுபவங்கள் கிடைக்கும். பெற்றோர் உடல்நலத்தை மறந்துடாதீங்க!




துலாம்: (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)

சாதகமான வாரம். கவலையேபடாம உங்க புது முயற்சிகள்ல தீவிரமா இறங்குங்க. நண்பர்கள் உதவி உண்டு! சிலருக்கு, எதிர்பாராத விஐபிக்கள் சகாயமும் கிடைக்கலாம். லோன் கேட்டிருக்கீங்களா பேங்க்ல? இந்த வாரம் சாங்ஷன் ஆயிடும். பெண்களுக்கும் புடவை வாங்கற யோகம் உண்டு. கம்ப்யூட்டர் தொழில்ல இருக்கறவங்களுக்கு ஓஹோ வாரம்!




விருச்சிகம்: (விசாம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

கொஞ்சம் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டி இருக்கும். ஆனா வெற்றி எதிலும் உங்களுக்குத்தான்! குறிப்பா, கலைத் துறைல இருக்கறவங்களுக்கு பிரமாதமான புது வாய்ப்புகள், புகழ் வந்து சேரும். வயசானவங்களுக்குப் புண்ணிய யாத்திரைக்கான வாய்ப்பு வரும். குழந்தைகளுக்கு விளையாட்டுல பரிசு, பதக்கம் கிடைக்கப் போறது. மொத்தத்துல பிரச்னை இல்லாத, பிரமாதமான வாரம்!




தனுசு: (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

மனக்குழப்பம்தான் உங்களை சோர்வடைய வைக்குது. வீட்டுலயும் வெளிலயும் ஏன் எரிஞ்சு விழறீங்க? கோபமோ, எரிச்சலோ இப்ப உதவாது. உங்களை யாரும் புரிஞ்சிக்கலையேன்னு வருந்தாதீங்க. அமைதியா, உங்க திறமையைக் காட்டி ப்ரூவ் பண்ணுங்க. இந்த வாரம் ஒரு நல்ல அதிர்ஷ்ட வாய்ப்பு உங்களுக்கு வரும். சரியா பயன்படுத்திக்கங்க. வேலை தேடிட்டிருக்கறவங்களுக்குப் பட்சி சிக்கும் வாரம்!




மகரம்: (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

சிறு பிரச்னை, தடங்கல் இருக்கத்தாங்க செய்யும். அதுக்காக மனம் சோர்ந்துடலாமா? பஸ் கூட நேரத்துக்கு வராம உங்களைப் படுத்தும். எதுக்கும் டென்ஷன் ஆகாதீங்க. நண்பர்கள் விஷயத்துலயும் உஷாரா இருங்க. கூட இருந்தே கவிழ்க்கப் பார்ப்பாங்க. தவிர, முதலீடுகளோ ஜாமீன் விவகாரமோ வேணாம்! முடிஞ்சா தினமும் விஷ்ணு சகஸ்ரநாமம் சொல்லுங்க.



கும்பம்: (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

கவலையே இல்லை. நீங்க நினைச்சது நடக்கும். கொஞ்சம் புத்திசாலித்தனமா, கூட வேலை பார்க்கறவங்களை தட்டிக் கொடுத்து, அனுசரிச்சிப் போய்ப் பாருங்க. உங்க வேலையை அவங்க ஏத்து, செய்து முடிப்பாங்க. பெண்கள் உணர்ச்சிவசப்படாம தீர்க்கமா யோசிச்சிச் செய்யுற காரியங்கள் இந்த வாரம் உடனே ஓர்க்-அவுட் ஆகும். பண வரவும் திருப்தியாவே இருக்கும்.



மீனம்: (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

சனி, செவ்வாய் சஞ்சாரம் சரியா இல்லை. உங்க கௌரவம் குறையறாப்பல எதாவது அசம்பாவிதம் நடக்கலாம், கவனம். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுங்க. கொடுக்கல் வாங்கல் வேணாம். அரசாங்க ஊழியர்கள் ரொம்ப கவனமா இருக்கணும். நைசா லஞ்சம் கிஞ்சம் வாங்கலாம்னு நினைச்சா, மாட்டிக்கற அபாயம் இருக்கு. பயணத்துலயும் எச்சரிக்கையா இருங்க. ●

நடக்குமென்பார் நடக்கும்

75

தானொன்றுமில்லை

வார்கள். அதன் பிறகு அங்கேயே இருந்து கொண்டிருப்பார்கள். நான்கு மாதங்கள் என்பதை, ஒரு பக்ஷம் ஒரு மாதம் என்று வைத்துக் கொண்டு அந்த சாதுர் மாஸ்யத்தை இரண்டு மாதங்களிலே கூட முடிக்கலாம் என்று சன்னியாச தர்மத்திலே இருப்பதனாலே இப்போது சாமானியமாக இரண்டு மாதங்களுக்குத்தான் இந்த விரதம் நடக்கிறது.

அவர் நடக்கும் போது - ஜடபரதர் தான் - என்ன பண்ணுவார் என்றால் ஒரு நுகத்தடி தூரம் எதிரிலே பார்ப்பார்...

ஜடபரதர் மட்டுமல்ல... எல்லாருமே அப்படி ஒரு நுகத்தடி தூரம் பார்த்தபடி தான் நடக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். ஏனென்றால் கீழே, கண்ணுக்குத் தெரியாமல் பூச்சிகள் ஓடினவென்றால், அதன் மேல் நாம் கால் வைத்துவிடக் கூடாது! தாண்டித்தான் போக வேண்டும். அது வேகமாகப் போகிறதென்றால் நாம் நிற்க வேண்டும். அது அசையாமல் நின்றதென்றால் தாண்டிவிட வேண்டும்.

அதனால்தான் சன்னியாசிகள் சாதுர் மாஸ்ய விரதம் இருக்கும்போது வெளியே போக மாட்டார்கள். ஏனென்றால் நம்மைக் காட்டிலும் விரதங்கள் அதிகம் அவர்களுக்கு... அஹிம்சா தர்மங்களை அவர்கள் ரொம்ப தீவிரமாக அனுஷ்டிக்க வேண்டும். ஆதலால்தான் அந்த சாதுர்மாஸ்ய விரத காலத்தில் அவர்கள் எங்கும் போகாமல் ஓரிடத்திலேயே தங்கி இருக்கிறார்கள்.

வெளியிலே நாம் நடமாடுவதால் நம் காலின் கீழ் எத்தனையோ கிருமிகள் அகப்பட்டுக் கொண்டு மாண்டு போகின்றன. அந்த ஹிம்சை கூட பண்ணாமல், ஓரிடத்திலே இருக்க வேண்டும் என்பது சாதுர் மாஸ்ய சங்கல்பம்.

எங்கேயும் போக மாட்டேன், இந்த நாலு மாதம் இங்கேயே இருப்பேன் என்று சங்கல்பம் பண்ணிக் கொண்டு, சிஷ்யர்களெல்லாம் கூட அங்கேயே தங்கி விடுவார்கள். அந்த விரதத்தை நடத்தி வைப்பார்கள். சங்கல்ப தினம் என்று பெயர்... பூஜை பண்ணு

திரும்ப ஜடபரதருக்கு வருவோம்... அவர் அஹிம்சா தர்மத்தை ரொம்ப ஜாக்கிரதையாகக் கடைப்பிடிப்பவர். கீழே ஏதோ பூச்சி போகிறது; அது நிற்கிறது. 'பல்லக்கைத் தூக்கிக் கொண்டிருக்கிறோமே' என்று லட்சியம் பண்ணாமல், ஜடபரதர் ஒரு எகிறு எகிறி அந்தண்டை குதித்தார்.

பின்னால் பல்லக்குத் தூக்கி வந்தவர்கள் அத்தனை பேரும் இழுக்கப்பட்டார்கள்!

உள்ளே ராஜா உட்கார்ந்திருந்தானே... அவன் தலையிலே 'டங்'கென்று இடித்தது! திடீரென்று பல்லக்கு முன்னால் இழுத்த இழுப்பில், தலையிலே சரியான அடி!

கண்ணிலே தாரை தாரையாக ஜலம் வருகிறது ராஜாவுக்கு... பல்லக்கின் கதவைத் திறந்து, "இது ஏன் இந்த விஷம கதி...? இத்தனை நேரம் நன்றாகச் சுமந்து கொண்டு வந்தீர்களே? ஏன் இப்படிப் போகிறீர்கள்...?" என்றான்.

அதற்கு, பின்னாலிருந்தவர்களெல்லாம், "நாங்கள் இல்லை... அதோ முன்னே இருக்கற குண்டுதான்" என்றார்கள்!

ராஜா பார்த்தான். ஏற இறங்கப் பார்த்தான். இப்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். அதற்குள்ளே இவனைக் கடிந்து கொள்வானேன் என்று, "சரி, சரி, சரியாகத் தூக்கிக் கொண்டு போங்கள்" எனக் கூறி கதவைச் சாத்தி விட்டான்.

சற்றைக்கெல்லாம் மறுபடியும் எகிறிக் குதித்தார் ஜடபரதர். அவர் குதித்த குதியில் ராஜாவுக்குக் கன்னத்தில் சரியான அடி!

தலையிலே அடி வாங்கிய ராஜாவுடைய

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

கண்ணிலே தாரை தாரையாக ஜலம் வருகிறது! பல்லக்குக் கதவைத் திறந்து- "இது ஏன் இந்த விஷம கதி...? இத்தனை நேரமாக நன்றாகச் சுமந்து கொண்டு வந்தீர்களே ஏன் இப்படிப் போகிறீர்கள்?..." என்கிறான்.

பின்னாலிருப்பவர்களெல்லாம் சொல்கிறார்கள்... "நாங்கள் இல்லை... அதோ முன்னே இருக்கிற குண்டுதான் அப்படிப் பண்ணுகிறது!"


ராஜா பார்த்தான். ஏற இறங்கப் பார்த்தான். இப்போதுதான் வேலைக்குச் சேர்ந்திருக்கிறான்... அதற்குள்ளே இவனைக் கடிந்து கொள்ள வேண்டாமென்று முடிவு செய்தான். "சரி, சரி, சரியாகத் தூக்கிக் கொண்டு போங்கள்..." என்று பல்லக்குக் கதவைச் சாத்திவிட்டான்!

மறுபடியும் எகிறிக் குதித்தார் ஜடபரதர். குதித்தவுடனே கன்னத்திலே சரியான அடி ராஜாவுக்கு...! வலி தாள முடியவில்லை. அதனாலே, கதவைத் திறந்து, அவர் முதுகிலே ஒரு குத்து குத்தி, "பின்னாலே இவ்வளவு பேர் தூக்கிக் கொண்டு வருகிறார்கள்... இவ்வளவு பேருக்கும் ஏற்படாத களைப்பு உனக்கு ஏற்பட்டுப் போயிற்றா? நல்ல பலிஷ்டனாக இருக்கிறாயே... உனக்குத் தூக்க முடியவில்லையே...?"

பிறந்தது முதலே யாரோடும் பேசாத ஜடபரதர், ராஜா இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் அவருக்குப் பதில் சொல்கிறார். அவர் பேசுகிற அந்த முகூர்த்தம் இருக்கிறதே, அது ரொம்ப உயர்ந்தது. அன்றைக்கு அவர் பேசியிருக்காவிட்டால் பல தத்துவங்கள் நமக்குக் கிடைத்திருக்காது.

அவர் சொல்கிறார்: "யாரைப் பார்த்து குண்டு என்கிறாய்...? நான் 'குண்டு' அல்ல; யார் பல்லக்கைத் தூக்குகிறார்கள்...? நான் அல்ல; பல்லக்கைத் தூக்குவதனாலே உண்டாகிற சிரமம் யாருக்கு...? எனக்கு அல்ல...!"

ராஜா பார்த்தான்... 'பைத்தியமாக வேறு



இருக்கிறதே இது! பெரும் பைத்தியமாக!'

கண்ணுக்கு நேராகத் தென்படும்போது, 'நான் குண்டு இல்லை' என்றால் யாராவது ஒப்புக் கொள்வார்களா?... பிரத்யக்ஷமாகத் தெரிகிறதே! அதற்கு வேறு புத்தகத்தைப் பார்க்க வேண்டுமா? இல்லை பிரமாணத்தைக் தேடவேண்டுமா...? அப்படி இருக்கும் போது 'நான் குண்டு இல்லை; ஒல்லி' என்றால் எல்லோரும் சிரிக்க மாட்டார்களா...!

உடனே ராஜா கேட்டான்: "பிரத்யக்ஷமாகத் தெரிகிறதே. நீதானே பல்லக்கைச் சுமக்கிறாய்! நான் குண்டு இல்லை என்றால் எப்படி...?"

அதற்கு அவர் சொல்கிறார்: கிழே பூமி இருக்கிறது. பூமிக்கு மேலே பாதம் இருக்கிறது. பாதத்துக்கு மேலே கணுக்கால் இருக்கிறது. கணுக்காலுக்கு மேலே முழங்கால் இருக்கிறது. முழங்காலுக்கு மேலே தொடை இருக்கிறது. தொடைக்கு மேலே இடுப்பு–இடுப்புக்கு மேலே மார்பு, மார்புக்கு மேலே தோள், அதற்கு மேல் பல்லக்கின் தண்டு வைக்கப்பட்டிருக்கிறது... இந்தப் பல்லக்கை பூமி தூக்குகிறதா? பாதம் தூக்குகிறதா? கணுக்கால் தூக்குகிறதா? முழங்கால் தூக்குகிறதா? தொடை தூக்குகிறதா? தோள் தூக்குகிறதா? எது தூக்குகிறது...?"

ரர்ஜாவுக்குத் தலை சுற்றுகிறது! இந்த மாதிரி கேள்வி கேட்டவுடனே வேகமாகத் தலை சுற்றுகிறது...!

அதற்கும் மேலே விடவில்லை அவர்...

"ஒரு பெரிய மரம் இருக்கிறது. அந்த மரத்தைப் பார்த்தவுடனே எல்லோரும் மரம் என்று சொல்கிறார்கள். அதை வெட்டிக் கிழே போட்டவுடன் கட்டை என்கிறார்கள். கட்டையை ரம்பத்தினாலே அறுத்து வைத்தால் பலகை என்கிறார்கள். அந்தப் பலகையை இவ்வளவு அழகாகத் தோன்றும்படி வர்ணங்களெல்லாம் பூசி, மேலே பட்டு, பீதாம்பரம் எல்லாம் விரித்தால், ஆந்தோளிகா, சிவிகா, பல்லக்கு என்று கொண்டாடுகிறார்கள். உலகத்திலே இருக்கிற மொத்தப் பேரும், 'ராஜா பல்லக்கிலே பவனி வருகிறான்' என்று சொல்கிறார்களே யொழிய, ராஜா கட்டையிலே போறான் என்று யாராவது சொல்கிறார்களா?!" என்றார் ஜடபரதர்.

ராஜா பார்த்தான்... ஒன்றுமே புரியவில்லை அவனுக்கு... தடாலென்று, 'கிழே இறக்குங்கள் பல்லக்கை...' என்றான். கிழே இறங்கி, ஜடபரதரை விழுந்து விழுந்து சேவிக்கிறான்.

"சுவாமி! நீங்கள் யாரோ, தெரியவில்லை. தெரியாத்தனமாக இந்த அபசாரத்தைப் பண்ணிவிட்டேன். நீங்கள் சொல்கிற விஷயம் ஒன்றுகூட புரியமாட்டேன் என்கிறது எனக்கு... எனக்கு நீங்கள் உபதேசம் பண்ண வேண்டும். நீங்கள் இப்படிப் பல்லக்கைச் சுமக்கும்படியாக ஆகிவிட்டதே... உங்களை இப்படி சித்ரவதை பண்ணி விட்டோமே" என்று ரொம்ப வருத்தப்பட்டுக் கேட்கிறான்.

அருள்வாக்கு



ஒரு பாத்ரத்தை அலம்பும்போது கடைசியிலே சுத்த ஜலத்தை மட்டும் விட்டு, முதலிலே சுத்திக்குப் பிரயோஜனமான புளி, மண் முதலானவற்றின் கோது, தூள் முதலியவை இல்லாமல் அப்புறப்படுத்துகிறோமென்பதோடு, முதலிலே மண்ணையும் புளியையும் போட்டுத் தேய்க்கிறபோதுகூட அவற்றோடு சுத்த ஜலத்தைக் கொஞ்சம் சேர்த்துக் கெட்டியாகக் கரைத்துக் கொண்டுதானே தேய்க்கிறோம்? அந்த மாதிரி ஆரம்பகாலத்தில் மனோ இந்த்ரியாதிகளால் கர்மாக்களைச் செய்கிற காலத்திலும்கூட ஆத்ம சிந்தனைத் தீர்த்தத்தைக் கொஞ்சம் இவற்றில் தெளித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆரம்பத்திலிருந்தே அநேக கர்மாக்களுக்கிடையிலும் த்யானத்துக்கென்று, ஆத்ம விசாரத்துக்கென்று கொஞ்சம் காலம் ஒதுக்கத்தான் வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அப்போதுதான் அவர் சொல்கிறார்: "நா...ன் குண்டு அல்ல!..." – அந்த நான் என்பதை ஓர் அழுத்து அழுத்திச் சொல்கிறார்.

"நா...ன் என்றால் யார்...? ஆத்மா! அதைப் பார்த்தது போல–கண்ணாலே பார்த்தது போல 'குண்டு' என்று சொல்கிறீரே... என்னைப் பார்த்திருக்கிறீரா நீர்...? யாரைப் பார்த்தீர்...? என் சரீரம் குண்டு... ஒப்புக் கொள்கிறேன். ஆனால் பல்லக்கைத் தூக்குவதனால் உண்டாகும் சிரமம் ஆத்மாவுக்கு இல்லை. ஏனென்றால் ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனுக்குத் தஞ்சன் அல்லன். எல்லோருமே ஸ்ரீயப்தியான நாராயணனுக்கே தஞ்சம்!"– என்றார்.

"ஒருவனுக்கு ஒருவன் தஞ்சன் அல்ல என்பதால் பல்லக்கைத் தூக்குவதனாலான சிரமம் எனக்கு இல்லை. ஏதோ ஒரு கர்மாதீனமாக இந்த ஆத்மா இந்த சரீரத்திலே வைக்கப்பட்டிருப்பதனாலே, இந்தப் பல்லக்கைத் தூக்குவதால் உண்டாகிற சிரமம் எனக்கு ஏற்பட்டுப் போயிற்று என்று நீர் பேசலாம். ஆனால், உண்மை நிலை என்ன...? எனக்கும் இந்தப் பல்லக்குத் தூக்குவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அதனாலான சிரமமும் எனக்கு இல்லை. இதை நீர் புரிந்து கொள்ள வேண்டும்..." என்று சொல்கிறார்.

ரிபு என்பவர் நிதாகருக்கு உபதேசம் செய்தார் என்று சொன்னேன் அல்லவா...? இந்தக் கதையையும் சேர்த்து அவர் சொன்னார்– ஜடபரதர் கதை.

உபதேசம் பண்ணிவிட்டு, "புரிந்ததா?" என்று கேட்டார்.

நிதாகர், "புரிஞ்சுபோச்சு" என்றார்.

யாராவது 'புரிந்ததா?' என்று கேட்டால், எப்போதுமே, 'நன்றாகப் புரிந்தது' என்றுதான் பதில் சொல்ல வேண்டும். 'புரிந்து போச்சு' என்று சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால், 'புரிந்தது போய் விட்டது' என்று அர்த்தமாகிவிடும். அப்புறம் மறுபடியும் இன்னொரு தடவை கேட்டால்தான் புரியும்!

ஆகவே ரிபு மறுபடியும் எடுத்துச் சொன்னார். நிதாகரும் அவர் சொல்லக் கேட்டுக் கொண்டார். அவர் கேட்டு முடித்த பிறகு ஆசார்யர், "போய் வருகிறேன்" என்று புறப்பட்டுப் போய்விட்டார்.

இந்த நிதாகர் இருக்கிறாரே... அவர் தேவிகா என்கிற நதியின் தீரத்திலே ஒரு



"சாம்பார் இன்னிக்கு நல்லாயில்லையா ஸார்?"

"ஏம்பா?"

"வழக்கமா எட்டு தடவைக்குக் குறையாமல் கேட்டு வாங்கிப் பீங்க, இன்னிக்கு ஏழு தடவையோட நிறுத்திக்கிட்டீங்களே!"

– உ. ராஜாஜி

ஊரில் வாஸம் பண்ணினார். ஒரு நாள் காட்டுக்குச் சென்று, தர்ப்பம், சமித்து எல்லாம் எடுத்துக் கொண்டு மூட்டையாகக் கட்டி வந்தார் அவர்.

அப்போது, அந்த ஊர் ராஜாவுக்கு அன்று ஜன்மவிபோத்ஸவம். அவன் பல்லக்கிலே பவனி வருகிறான். அந்த பவனியின் இடையிலே புகுந்து, தர்ப்பத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு போவானேன் என்று நிதாகர் யோசித்தார். அபவித்ரமாகிவிடுமே! பார்த்தார்... 'இந்தக் கூட்டமெல்லாம் இன்னொரு பக்கம் திரும்பிப் போன பிற்பாடு அக்ரஹாரத்துக்குள்ளே போகலாம்' என்று முடிவு பண்ணி தலைக்கட்டோடு ஒரு மூலையிலே நின்றார்.

அப்போது அங்கே வந்து சேர்ந்தார் ரிபு! தலையிலே பளுவுடன் நிற்பவரைப் பார்த்துக் கேட்டார்: "மௌனமாக, ஏகாந்தமாக இந்த இடத்திலே நிற்பதற்குக் காரணம் என்ன? கிரஹத்துக்குப் போகாமல் இந்தப் பளுவான மூட்டையை வைத்துக் கொண்டு நிற்கிறீர்களே...?" என்றார்.

பார்த்தார் நிதாகர்... தேவதைகளுடைய கால அளவு பிரகாரம் ஆயிரம் வருடங்கள் முடிந்து போயிருந்ததால், வந்திருப்பவர் ஆசார்யர் என்பது அவருக்குத் தெரியவேயில்லை...!

(தொடரும்)

போட்டிக் கதை 2



உறியடி உத்ஸவம் பார்த்துப் பதினைந்து வருஷமாகிவிட்டது. இந்த வருஷம் - இன்னும் இரண்டு நாளில் உறியடியும் வழுக்கு மரமும் மறுநாள் ருக்மிணி கல்யாண உத்ஸவமும் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணமே பால்ய நினைவுகளில் மூழ்கச் செய்கிறது. வழுக்கு மரத்திலிருந்து விழுந்தால் அடிபடாமல் இருக்கப் போர் போராக வைக்கோலை பிரித்துக் கொட்டியிருப்பார்கள். தண்ணீரிலும் மழையிலும் நனைந்த வைக்கோலின் மணமும், வழுக்கு மர புளியங் கொட்டைப் பசையின் மணத்தைக் கூட உறியடியை நினைக்கிற போதெல்லாம் என்னால் நினைவுக்குக் கொண்டு வர முடிகிறது.

இன்னும் ஐந்து நிமிடத்தில் ஊர் வந்து விடும். சாலைத் திருப்பத்திலேயே கோவில் கோபுரத்தையும் உறி மரத்திற்கு மேலே பறக்கும் கொடியையும் தரிசித்து விட வேண்டும் என்ற ஆவலில் ஜன்னல் சீட் பிடித்து உட்கார்ந்து விட்டேன். பஸ்ஸில் கூட்டம் பிதுங்குகிறது. ஐந்து ஆறு டவுன் பஸ் விட்டும் கூட்டத்திற்குக் குறைவில்லை. ஒரே இரைச்சல். டில்லி பஸ்ஸில் கிடைக்காத மரியாதை இவ்வளவு கூட்டத்திலும் எங்கள் ஊர் பஸ்ஸில் இன்னமும் பெண்களுக்குக் கிடைப்பது நிறைவாக இருக்கிறது. பெண்கள் மேல் விழுந்து கொண்டிருக்கும் டில்லிக்கும் எங்கள் ஊருக்கும் எவ்வளவு வித்தியாசம்!

மண்டபத்தில் பஸ் நிற்கையில் கீழிருந்து கை அசைத்து என்னைக் கூப்பிடுவது யாரென்று புரிய சில நொடிகளாகிறது. சூசைதான். 'நல்லாயிருக்கீங்களா? வீட்டுக்கு வாங்க' என்று ஜாடையிலே கூப்பிடுகிறான்.

மஹாதேவன்

சரியென்று தலையாட்டுகிறேன். சட்டென்று எனக்குக் கௌரியின் நினைவு வருகிறது. உறியடியையும், கௌரியையும் பதினைந்து வருடம் மறந்து விட்டதை எண்ணி வெட்கமேற்படுகிறது. கௌரியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அடங்காது போலிருக்கிறது. சாலைத் திருப்பத்தில் கோபுர தரிசனம் செய்து கொண்டு உறி மரக் கொடியைத் தேடுகிறேன். டிஷ் ஆன்டெனா ஒன்று உறி மரத்தை மறைத்த வண்ணம் இருக்கிறது. அதற்கும் மேல் சிவப்புக் கொடி தெரிகிறது. பதினைந்து வருஷத்துக்கு முந்தைய சிலிர்ப்பு என்னைத் தொற்றிக் கொள்கிறது.

பஸ்ஸிலிருந்து இறங்கிய சிறு கும்பலில் என்னை அடையாளம் கண்டு விசாரிக்க யாரும் இல்லாதது - ஏமாற்றமாகவும் வசதியாகவும் இருக்கிறது. அவர்களை முன்னால் செல்லவிட்டு நான் மெதுவாக நடந்தேன். ஆவணி மாதமாதலால் ரோட்டுப் பாலத்தின் கீழ் தண்ணீர் அடித்துக் கொண்டு செல்கிறது. முதலில் வரும் குடிசைகளைக் கடந்த பின் அக்ரஹாரம் வரும். சின்னம்மா என்னை அடையாளம் தெரிந்து கொண்டு விசாரிக்கிறாள்.

"உறியடிக்கு, குழந்தைகளைக் கூட்டி வரக் கூடாதா சாமி?" என்கிறாள்.

"அவங்களுக்கு படிப்பு, பரீட்சை இருக்கு" என்று பதில் சொன்னாலும் இந்த ஊரின் வாசனையே தெரியாமல் வளர்ந்த குழந்தைகளுக்கு உறியடியை எப்படிப் புரிய வைப்பேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அக்ரஹாரம் வந்தவுடன் மேலவீதியில் இரண்டாவதாகவே வரும் கனபாடிகள் வீட்டைக் கடக்கும்பொழுது, வீடு, புல் மண்டிக் கிடப்பது கனக்க வைக்கிறது. பாடசாலையில் வேத கோஷம் கேட்காத நாளில் கனபாடிகள் வீட்டில் கேட்கும். அவர் போயும் பத்து வருஷம் இருக்கலாம். ஊரே மாறி விட்டது தெரிகிறது. தெருவில் பம்பரமும், கோலியும் கிள்ளித் தாண்டும் கபடியும் விளையாடும் என் காலமில்லை இது. டி.வி முன் உட்கார்ந்து தெண்டுல்கருக்கு கை தட்டும் காலம்.

என்னுடன் படித்த என் செட் இளைஞர்களெல்லாம் இப்போது தமிழ்நாட்டின் – இந்தியாவில் ஒவ்வொரு மூலையிலும் ஏதாவது ஒரு பணியில் இருப்பார்கள். எல்லோருக்கும் உறியடியின் ஈர்ப்பு நிச்சயம் இருக்கும். சிலராவது வராமலா போய் விடுவார்கள். என்னைப் போல் ஊரைப் பதினைந்து வருடம் திரும்பிப் பார்க்காமல் இருக்க அவர்களுக்குக் காரணம் இருக்காது.

அக்ரஹாரத்துச் சுவர்களிலும் பெப்ஸி விளம்பரம் கண்ணைப் பறித்து மூளையை மழுங்க வைக்கிறது. ஊருக்குள் முன்பு மனோகர் அப்பா சோடா ஃபேக்டரி வைத்திருந்தார். சுற்று வட்டாரம் கடைகள் பூராவும் ஜிஞ்சர் கலர் என்று கிராமத்து சப்ளைதான். சில வீடுகள் புதிதாகக் கட்டி மூங்கில் பிளாச்சுத் தட்டியால் முன் திண்ணை மறைக்கப்பட்டிருக்கிறது. பல வீடுகள் கரைந்த செம்மண் பட்டை சுண்ணாம்புப் பட்டையுடன் மாறாமலே இருக்கின்றன. புதிதாக சித்த மருந்து தயாரிக்கும் குடிசைத் தொழிலில் அக்ரஹாரத்தில் எல்லோருக்கும் வேலை கிடைக்கிறதாம்.



எதிர்ப்பட்ட பெருமாள் கோவில் பட்டர் முகமெல்லாம் மலர்ந்து என்னை "வாப்பா... வாப்பா... இப்பத்தான் வறயா..." என்கிறார்.

அக்ரஹாரத்தில் ஒருவர் என்னை முதன் முதலில் அடையாளம் கண்டு கொண்டது என்னைக் கூச்சப்பட வைக்கிறது.

"சௌக்கியமா?

லெட்டர் வந்ததா?" என்கிறேன்.

"பெருமாள் அனுக்ரஹம்... ரொம்ப நாளா ஊர்ப் பக்கமே வராம வச்சுட்டியே?" நேத்திக்குத்தான் உன் லெட்டர் கெடச்சுது. வீட்டை சின்னம்மாவை விட்டு க்ளீன் பண்ணி வெச்சுட்டேன்... வா, கோவிலுக்கு வந்து பெருமாளையும் தரிசுச்சுட்டு ஆத்து சாவியையும் வாங்கிக்கோ!" என்றவரைப் பின் தொடர்ந்து கோவில் சென்று பெருமாளை சேவித்து, வீட்டுச் சாவியை வாங்கிக் கொண்டு பிராகாரத்தை வலம் வந்தேன். பிராகாரத்தில் கனபாடிகள் தள்ளாத வயதில் மாடத்தில் வைத்து ஜலம் விட்ட துளசி, கிணற்றுக்குப் பக்கத்தில் தளதளவென்று



"என்னதான் மோசமான படமாயிருந்தாலும் இப்படியா செய்யறது?"

"என்னங்க?"

"வெற்றிகரமான ரெண்டாவது நாள்ன்னு போஸ்டர் ஒட்டியிருக்காங்க!"

– 'தேவி' கணேஷ்

இருக்கிறது.

சிறிகைகள் வழுக்கு மரத்திற்குப் புளியங் கொட்டை அரைத்த பசை தடவிக் கொண்டு இருந்தன. புதுப்பச்சை மூங்கிலை இறக்கிக் கட்டிய உறி மரம் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தது. உறி நாளைதான் கட்டுவார்கள். கிருஷ்ணருக்குப் பிடித்த தின்பண்டங்களெல்லாம் பானையில் கட்டி வேஷ்டி துண்டில் ரூபாய் முடிந்து வைத்து உறி மரத்தில் பாதியில் கட்டி, நீளமான கம்பில் மறுபுறத்தில் இருந்து கயிறால் இழுத்து, இழுத்து, ஏற்றி ஏற்றி இறக்க ஊர் இளைஞர்கள் எல்லாம் கையில் தடியும், கம்புமாய் உறியடிக்கக் குதிப்பார்கள். அது முடிந்து வழுக்கு மரம் – உறியடித்து வழுக்கு மரம் ஏறி முடியும்பொழுது இரவு மணி மூன்றைத் தொட்டிருக்கும். வழுக்கு மரம் ஏறுவதில் வடக்குத் தெரு மணிக்கும் அம்பி மாமாவுக்கும்தான் வருடா வருடம் போட்டி இருக்கும், அப்பொழுதெல்லாம். நான்கு புறத்திலிருந்து பீச்சாங்குழலால் காதிலும் முகத்திலும் விழும் தண்ணீரையும், கத்தாழை, வழுக்குதலையும் மீறி, அம்பி மாமாவும் வடக்குத் தெரு மணியும் கயிற்றால் ஆப்ப முடிச்சு போட்டு மேலே மேலே சென்று, வழுக்கு மரத்து மேலே கட்டியிருக்கும் சிவப்புத் துண்டை இருவரில் ஒருவர் முதலில் தொட்டு முடிச்சில் கை வைத்த மாத்திரத்தில், கோயில் மேளம் டமடமடம என்று முழங்கிக் காதைப் பிளக்கும். சிவப்புத் துண்டைக் கீழே வீசியபின் சதுரமாய் மேலே கட்டியிருக்கும் தட்டியிலிருந்து தொங்கும் முறுக்குகளை நாலாபுறமும் பிய்த்து வீச மஹாஜனம் கிருஷ்ணர் பிரசாதத்தின் ஒரு துளையாவது பெற்றுவிடப் பறக்கும். வழுக்கு மரம் ஏறியவர் கீழே இறங்கியவுடன் பரிவட்டம் கட்டி தோளில் தூக்கிக் கொண்டு பிராகாரத்தில் ஓடி வருவார்கள்.

"இப்பொழுது பத்து வருஷமா தெற்குத் தெரு அம்பி பிள்ளைகள்தான் உறி பிடித்து வழுக்கு மரம் ஏறிண்டிருக்கா..." பட்டர் சொல்லிக் கொண்டு வருகிறார். எல்லாம் நாளையும் மறு தினமும் பார்க்கலாம் – ருக்மிணி கல்யாணமும் இருக்கிறது, அப்புறம் விடையாற்றி.

கோவிலில் இருந்து வந்து வீட்டைத் திறந்து நுழைகிறேன். பதினைந்து வருடமாய்ப் பூட்டிக் கிடந்த வீட்டைச் சுத்தப்படுத்தியிருக்கிறார் பட்டர். டில்லியிலிருந்து வந்த அசதியில் பட்டர் தந்த பிரசாதத்தை சாப்பிட்டு விட்டு உடம்பை சற்றுக் கீழே போட வேண்டும். பின்பு சாயந்திரம் ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்ப வேண்டும். கௌரியைப் பார்க்க வேண்டும்.

காற்றாட படுத்துக் கொள்ள ஜன்னலைத் திறக்கும்போது, கோவில் பிராகாரமும் உறி மரமும் தெரிகிறது. கோவிலில் கூட்டம் தாங்காதபோது கும்பல் எங்கள் வீட்டிற்குள் புகுந்து, ஜன்னல் வழியாய் ருக்மிணி கல்யாணத்தை வேடிக்கை பார்க்கும். பஜனைக்கு நடுவில் கனபாடிகள், ருக்மிணி கிருஷ்ணருக்கு, 'ஹே! புவன சுந்தரா' என்று அழைத்து காதல் கடிதம் எழுதி தன்னை அழைத்துப் போகச் சொன்னதை உருகி

உருகிச் சொல்வார்.

கௌரியும் ருக்மிணியைப் போலத்தான் காதல் கடிதம் எழுதி அழைத்து ஒரு உதியடியின்போது ஊரே கோவிலில் கூடியிருக்க 'சூசை'யுடன் டாக்ஸியில் கிளம்பி விட்டாள், இரவோடு இரவாக. காலையில் கௌரியைக் காணோம் என்று ஊரே பரபரப்பு. பெரியப்பா உடைந்து போய் விட்டார். அரசல் புரசலாக எல்லாம் முன்பே தெரிந்துதான் இருந்தாலும் திடீரென்று கௌரி அப்படி ஒரு அதிர்ச்சி தந்ததை அக்ரஹாரத்தால் தாங்க முடியவில்லை. கௌரி மேரியானபோது அக்ரஹாரம் "போக்ரன்" ஆகி விட்டது. பெரியப்பா அரிவாளைத் தூக்கி விட்டார். ஊரே சேர்ந்து அவரைத் தடுத்தது.

பெரியப்பா கனபாடிகளிடம் ஓடினார். நல்லது கெட்டது எல்லாவற்றுக்கும் ஊருக்கு அவர்தான். நானும் பெரியப்பாவுடன் போயிருந்தேன். கனபாடிகளைக் கண்டதும் பெரியப்பா குலுங்கக் குலுங்க அழுதார். ஒரே பெண் கௌரி. மணிப்பூர் ருக்மிணி மாதிரியே அழகு.

"நடேசா, காலப் பிரவாஹம் அப்படித்தான் இருக்கும். குழந்தைகள் மேல் எந்தத் தப்பும் இல்லை... கோபத்தை விடு" என்றார், கனபாடிகள்.

பெரியப்பா கோபத்தை விட்டார். வீட்டை விட்டார். நிலத்தை விற்றார். பெரியம்மாவுடன் சென்னைக்குக் குடி பெயர்ந்து விட்டார். ரயில் கிளம்பும் முன்பு "சூசை நல்ல பையன்தான். கவலை வேண்டாம்" என்று நடுங்கிய குரலில் பெரியப்பாவை நான் தேற்றியபோது அவர் என்னை வெறுமையாய்ப் பார்த்த பார்வை இத்தனை வருஷத்திற்குப் பின்னும் என் கண்ணில் நிற்கிறது.

உத்திரத்தைப் பார்த்த வண்ணம் படுத்து, பதினைந்து வருஷத்துக் கதையை அசை போடும்போது கௌரியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் மட்டும் அடங்காமல் மேலெழும்பிக் கொண்டே இருக்கிறது. வாரிச் சுருட்டி எழுந்து கொல்லைக் கிணற்றில், முகம் கழுவிக் கொண்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினேன்.

கிழக் தெருவில் நெடுக நடந்து, குளத்து மேட்டின் வழியாக பஸ் ரோட்டைக் கடந்து பாடசாலை செல்லும் வழியில் ஸ்ரீஅபிராமி வித்யாசாலா கண்ணில் படுகிறது. ஊருக்கு ஒரே எலிமெண்டரி பள்ளிக்கூடம். சூசையும் நானும் கௌரியும் ஊரில் எல்லோரும்



"இந்தப் படத்தை என்னோட கதைன்னு சொல்லி கோர்ட்டுல கேஸ் போட்டது வம்பாப் போச்சு!"

"ஏன்?"

"உனக்கு, ஏன்யா இத்தனை கற்பனைப் பஞ்சம்னு கேட்டு நீதிபதி, மானத்தை வாங்கிட்டார்!"

– அம்பை தேவா

இதே பள்ளிக்கூடத்தில் சவரிஞான வாத்யாரின் கீழ்தான் படித்தோம். சூசை சவரிஞான வாத்யாரின் பையன். சவரிஞான வாத்யார் கிறஸ்துவர் என்பதே எங்களுக்கு கௌரி மேரியான பின்புதான் தெரியும். 'பிட்டுக்காக மண் சுமந்த நேசா... பிரம்பால் அடிபட்ட பரமேசா...' என்ற பாடலை ஆர்மோனியத்தை இசைத்துக் கொண்டு அவர் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்த காலமெல்லாம் கனவு போலல்லாமல் பசுமையாய் இருக்கிறது. பைபிளையும் உருகி உருகிச் சொல்வார்.

"வானத்துப் பறவைகளைப் பாருங்கள். அவை நாளைக்காக எதுவும் சேர்த்து வைப்பதில்லை. தேவனுக்குப் பறவைகளைக் காட்டிலும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா" என்று அவர் பைபிளை வாசிக்கும் சமயம் எல்லா வகுப்புமே இமை கொட்டாமல் அவரையே பார்த்த வண்ணம் இருக்கும். விடலைப் பருவ விஷயத்தில் ரேவதி டீச்சரின் பெயரை நான் ரோட்டில், சுவரில் எல்லாம் எழுதிய தவறை அவர், "ஏய் ஐயரே பெஞ்சு மேல் ஏறு!" என்று பத்து நிமிஷ தண்டனையில் மன்னித்தது இப்பொழுதும் கண்களைப் பனிக்க வைக்கிறது.

சூசை அவரது பையன். ரொம்பவும் அடக்கமானவன். டிகிரி படித்து முடித்து வேலை கிடைக்கும்வரை கொஞ்ச காலம் தையல் கடை வைத்திருந்தான். சூசையின்

செயல் வாத்யாருக்கே அதிர்ச்சிதான் தந்திருக்கும். அல்லது கனபாடிகள் காலத்தின் பிரவாஹம் என்று சமாளித்துக் கொண்டது போல் அவரும் கர்த்தர் மன்னிக்கட்டும் என்று சமாளித்துக் கொண்டிருப்பார். சூசை இப்பொழுது பூண்டி கல்லூரியில் இலக்கியத்தில் ப்ரொபஸராம். பதினாலு வயசிலும் பத்து வயசிலும் இரண்டு பையன்களாம். டில்லிக்கு ஊரிலிருந்து வருபவர்களிடம் மனைவி ஆவலாய் சேகரித்து வைத்த தகவல்கள் இவை.

கௌரியையும் குழந்தைகளையும் பார்க்கப் போகிற ஆவலில் வேகமாய் நடக்கிறேன். பூவும் பழங்களும் வாங்கிக் கொண்டு, பஸ் பிடித்து செங்கரையூரில் இறங்கி, கொள்ளிடத்தைப் பரிசலில் கடந்து பூண்டி வந்து சேர்ந்தேன். வாத்தியார் வீட்டைத் தேடினேன்; ஊர் மத்தியில் புதிதாகத் தெரியும் வீட்டில் பேராசிரியர் சூசை என்ற போர்டைப் பார்த்து தயக்கத்துடன் நடுங்கிய குரலில் கதவுக்கருகில் நின்று "கௌரி" என்று அழைத்தேன்.

கௌரி எட்டிப் பார்த்த பின் வெளியே வருகிறாள். பதினைந்து வருஷத்துக்குப் பின் என்னைப் பார்த்ததில் பேச முடியாமல் அழுகிறாள்.

"கௌரி எப்படி இருக்கே?"

"பதினஞ்சு வருஷமா யாரும் இந்த பக்கம் திரும்பாமலே வச்சுட்டேளே? நீயுமா அண்ணா?" என்று விம்முகிறாள். எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்க, "வாத்யார் எங்கே?" என்று பேச்சை மாற்றுகிறேன்.

சேரை காட்டி, "உட்கார்" என்றவள், "அவர் ரெண்டாவது பையனுடன் திருச்சியில இருக்கார். அப்பப்ப குழந்தைகளைப் பார்க்க வருவார். இவர் இப்பத்தான் குழந்தைகளை அழைச்கண்டு வெளியே போனார். இரு, காபி கொண்டு வரேன். பஸ்ஸில் உன்னைப் பார்த்தேன்னு இவர் சொன்னதுமே, நீ நிச்சயம் இன்னிக்கே என்னைப் பார்க்க வருவேன்னு தோணித்து. ஊரிலே எல்லோரும் சௌக்கியம்தானே?"

"ஆமாம்!"

பழம், புஷ்பத்தை அவளிடம் கொடுத்து விட்டு காபி வரும்வரை சூசைக்காகவும் குழந்தைகளுக்காகவும் ஆவலோடு காத்திருக்கிறேன். கௌரி, மேரி ஆனதற்கான அடையாளம் எதுவும் அவளிடம் தெரியவில்லை. சுவரில் தொங்கும் கர்த்தரின் படம் தான் இது சூசையின் வீடு என்கிறது. சவரி ஞான வாத்யாரின் படம் ஒன்றும் அருகே மாட்டியிருக்கிறது. கௌரி காபி கலந்து கொண்டு வரவும் சூசை குழந்தைகளுடன் உள்ளே வரவும் சரியாக இருக்கிறது.

"வாங்க சூசை வாங்க!" என்று சொல்லி குழந்தைகளை ஆவலாய்ப் பார்த்தேன்.

"நம்ப வீட்டுக்கு வந்திருக்கீங்க. நான்தான் உங்களை வரவேற்க வேண்டும்!" என்கிறான் சூசை.

"அதனாலென்ன, பரவாயில்லை!"

சூசை எனக்கருகில் இருந்த சேரில் அமர்ந்து கொண்டான். கௌரி நிலைப் படியருகில் நின்று கொண்டிருந்தாள்.

"உங்க மாமாடா..." என்று கௌரி சொன்ன பிறகும் பையன்கள் என்னைப் பார்த்து தயக்கமாய்ச் சிரித்து விட்டு, கை கோத்துக் கொண்டு உள்ளே சென்று விடுகிறார்கள். உறவு முறை எதுவும் பழக வாய்ப்பில்லாமல் வளர்ந்துவிட்ட குழந்தைகள் என்று எனக்கு துக்கமேற்படுகிறது.

"அப்புறம்..." என்று மேலே என்ன பேசுவது என்று தெரியாமல் "டில்லிக்கு ஒருமுறை கௌரி குழந்தைகளுடன் அவசியம் வர வேண்டும்" என்று சூசையிடம் சொன்னேன்.

"ஆகட்டும். வறோம்."

"உறியடி பாக்க வந்தியா?" என்றாள் கௌரி குழந்தை போல் குதூகலமாய்.

"ஆமாம்."

சூசையும், கௌரியும் பரஸ்பரம் சிரித்துக் கொள்வதைப் பார்த்து என்ன பேசுவது என்று தெரியாமல் உள்ளே விளையாடிக்



"ஓட்டலுக்குள்ளே போகும்போது நல்லாத்தானே போனீங்க, திரும்பி வரும்போது ஏன் நொண்டிக்கிட்டு வர்றீங்க?"

"சாப்பிடும்போது ஒரு இட்லி தவறி என் கால் மேலே விழுந்துடுச்சு!"

– கபிஸ்தலம்
எஸ். இராஜேந்திரன்



''மானேஜர் சார்! நம்ம ஆபீசுல கருங் காலிகள் பெருத்துட்டாங்க!''

''என்னய்யா சொல்ற?''

''கிளார்க் முனுசாமி உங்க ஆதரவு கோஷ்டில செயலாளராவும், எதிர்ப்பு கோஷ்டில பொரு ளாளராகவும் இருக்கார்!''

— அம்பை தேவா

கொண்டிருந்த பையன்களை பார்த்துக் கொண்டிருந்தேன்.

"பதினஞ்சு வருஷமாய் கௌரியை நீங்க திரும்பிப் பார்க்காமலே இருந்துட்டீங்களே!" என்று குற்றம் சாட்டுவது போல் என்னைப் பார்த்தான்.

நான் கௌரியைப் பார்த்தபடியே, "சாரி... ஊர்ப் பக்கம் வராமலே வச்சுட்டேன்!'' என்று சமாதானமாக ஏதோ உளறினேன். கௌரி தரையைப் பார்த்த வண்ணம் இருந் தாள். சூசை மேலே என்ன பேசி விடு வானோ என்று தயக்கமாக இருந்தது எனக்கு.

''மிஸ்டர் சுவாமிநாதன், நீங்க கீதை படிச்சவங்க. உங்களுக்கு நான் எதுவும் சொல்லக் கூடாது. இன்னும் சொல்லப் போனால் கிருஷ்ணருக்கும் கிறிஸ்துவுக்கும் வித்தியாசம் தெரியாத வாத்யாரிடம் படிச்சவங்க நாம...'' என்று சொல்லி சுவரில் தொங்கும் வாத்தியாரின் படத்தைப் பார்க்கிறான்.

''சுவாமிநாதன், உங்களுக்கு நான் சொல்வது ஆச்சரியமாக இருக்கும்... கீதையின் கடைசி அத்யாயத்தில் கண்ணன் அர்ஜுனனிடம் 'போர் புரிய மாட்டேன் என்ற உன் உறுதி பொய்த்துப் போகும். உன் இயற்கை குணம் உன்னைப் போரிற் பிணிக்கும்' என்று சொல்லும் வரிகள் – பாடல் – உங்களுக்கு நினைவிருக்கும். அந்த வரியை முதன் முதலாக பாரதியின் தமிழ் மொழி பெயர்ப்பில் படித்தபோது எனக்குப் பல நாள் உறக்கம் வராமல், அது பற்றியே நினைவாக இருந்தது. ஒரு உந்துதலில் அதையே என் பிஎச்.டி ஆய்வுக்குக் கருவாக எடுத்துக் கொண்டேன்.''

காலேஜில் பாடம் நடத்தும் மனநிலையிலேயே அவன் இருப்பது புரிந்து நான் அவனைக் கண் கொட்டாமல் பார்த்த வண்ணம் இருந்தேன்.

''என்னுடைய ரிசர்ச்சுக்கு, நான் எங்கேயும் அலைய வேண்டியிருக்கவில்லை. வீட்டிலேயே இருந்தது ஆதாரம். கௌரி தான். ஊரையும், உடன் பிறந்தவங்களையும், பெத்தவங்களையும் மறந்து விட்டாலும் உறியடியையும், உத்ஸவங்களையும், பெரு மாளையும் மறக்க முடியாமல் தவிப்பவள். உங்கள் பண்டிகை நாள் ஒவ்வொன்றின் போதும் இவள் மௌனமாய் படுக்கையில் என் அருகில் கண்ணீர் விடுவதைப் பார்த்து எனக்கு உடைந்து போகும். கௌரி யாய்த்தான் உன்னைக் காதலித்தேன், நீ கௌரியாய் இருப்பதே எனக்கும் நிம்மதி என்று பலமுறை சமாதானப் படுத்தி யிருக்கிறேன். நீங்கள் வந்திருக்கும் இந்த முறையாவது கட்டாயம் உறியடியை அவளுக்கு நீங்க காட்டணும். அவள் முகத்தில் அப்படியொரு திருப்தியைப் பார்த்தால் தான் என்னால் சகஜமாக அவளிடம் இருக்க முடியும். தயவு செஞ்சு கூட்டிப் போறீங்களா?'' என்று என் கைகளைப் பற்றிக் கொண்டான்.

வியப்பிலும் அதிர்ச்சியிலும் நான் கௌரியைப் பார்த்தேன்.

''ஆமா அண்ணா. இவர் என்னை நல்லபடியா புரிஞ்சிண்டிருக்கறதால, நா உன்னோடு வந்து நம்மாத்து ஜன்னல் வழியா உறியடி பாக்கப் போறேன்'' என்றாள்.

"நான் அக்ரஹாரத்துப் பக்கம் போய் பதினஞ்சு வருஷமாச்சு. இந்த முறை நானும் முன்பு மாதிரியே கோவில் மதில் மேலிருந்து உறியடி பார்ப்பேன். குழந்தைகளும் என்னுடன் பார்ப்பார்கள்!" என்றான் சூசை.

'சரி, ஆகட்டும்' என்றுகூட சொல்லத் தோன்றாத வியப்பிலும், அதிர்ச்சியிலும் நான் உள்ளே குழந்தைகளைப் பார்த்த வண்ணம் இருந்தேன்.

விடையாற்றி கழிந்து டில்லி சென்ற வுடன் எங்கள் ஊர் பெருமாள் கோவில் பிராகாரத்தில் கனபாடிகள் வைத்த துளசி பசுமையாய் இருக்கும் அதிசயத்தைக் குழந்தைகளிடம் சொல்ல வேண்டும்.

சுமி சூப்பர் மார்க்கெட்!

எழுநூறு பக்கங்களுக்கும் மேற்பட்ட ஜெயமோகனோட 'விஷ்ணுபுரத்தை' வெற்றிகரமா இரண்டாவது முறை படிச்சி முடிச்சேன். அடுத்த பேராவில் நான் ஆரம்பிக்கப் போறது விமர்சனமில்லை. நாவல் பற்றி என் அபிப்பிராயம் மட்டுமே.. ஏன்னா, இது ஒரு 'நாவலா'ங்கறதுல எனக்கு லேசான doubt. ஒரு மாறுபட்ட ஸ்தல புராணம்னு சொன்னால் தப்பில்லைன்னு நினைக்கறேன்.

மதுரைக்குப் பக்கத்துல இருந்து, மறைஞ்ச ஒரு கற்பனை நகரமா விஷ்ணுபுரத்தைக் காட்டறார் ஜெயமோகன். பிரும்மாண்டமான விஷ்ணு கோயில். கோயில் சார்ந்த மனிதர்கள்; உல்லாசமும் சீரழிவும் கொப்பளிக்கற அவங்களோட வாழ்க்கை, சட்டதிட்டங்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சுபாவம்னு ஒவ்வொரு அம்சத்தையும் நின்று நிதானமா காட்டிட்டே போறார். நூற்றுக்கணக்கான கேரக்டர்ஸ். ஒவ்வொரு சாப்டருக்கும் ஒவ்வொரு ஹீரோ. முக்கிய ஹீரோவான விஷ்ணு, க்ளைமாக்ஸில் மட்டும் ஒரே ஒரு ஷாட்டில் வரார்; யுகம் முடிஞ்சி, பிரளயம் வர்றப்ப, ஒரு தரம் புரண்டு படுக்கறார். அதோட கதை முடியறது.

ஒரு நகரத்தை ஹீரோவா வெச்சி இதுக்கு முன்னால சில நாவல்கள் வந்திருக்கு. பள்ளிகொண்டபுரம் (திருவனந்தபுரம்) 18வது அட்சக்கோடு (ஹைதரா/செகந்திராபாத்) எல்லாம் அந்த வகையைச் சேர்ந்தவை. But, விஷ்ணுபுரம் ஒரு மாய நகரம்ங்கறதாலயும் அந்த நகரத்து 'வோட்டர்ஸ்' லிஸ்ட்ல இருக்கக் கூடிய அத்தனை பேரைப் பத்தியும் ஆசிரியர் சொல்லிடணும்னு நினைக்கறதாலயும் ரெண்டுதரம் படிச்சப்புறமும் எனக்கு அந்த நகரம் பற்றிய ஒரு மனத்தோற்றம் கிடைக்கவேயில்லை.

ரொம்ப பிரும்மாண்டம் தெரியணும்னு ஜெயமோகன் ஒவ்வொரு சொல்லுக்கும் பெயருக்கும் முன்னால 'மகா'ன்னு ஒரு இணைப்பு சேர்த்துட்டே இருக்கார். (மகா வீதி, மகா கோபுரம், மகா காஸ்யபன், மகா பிங்கலன், மகா புராணம் etc.) கதை முழுக்க வர்ற மரணங்களுக்கு பாஸ்போர்ட் தர்ற ஒரு கரிய நாய்க்கு மட்டும் மகா அடைமொழியை ஏனோ தரலை!

ஒரு சரித்திர நாவலுக்குத் தகவல் குழப்பம் கூடாதுங்கறது முக்கியமான அடிப்படை. But, கி.பி. ஏழாம் நூற்றாண்டுப் பக்கம் நடக்கற இந்தக் கதைல ஒரு பௌத்த ஞானி தம் தர்மத்தை மறந்து Communism பேசறார்! "நீங்கள் சேற்றைக் கண்டதுண்டா? புழுக்களைக் கண்டதுண்டா"ன்னு தொடங்கி பக்கா அரசியல்வாதி மாதிரி பசி பட்டினி பத்தியெல்லாம் லெக்சர்!

தவிர, வைணவ ஆலயம் சார்ந்த நகரம் ஒன்றைப் பற்றிச் சொல்லும் ஆசிரியர், அந்தப் பிரிவுக்கான பழக்க வழக்கங்கள், பூஜை முறைகள் பற்றிக் குறிப்பிடவேயில்லை. அந்த cultureஐ அழுத்தமா காட்டறதுக்குத் தோதான மொழியும் இல்லை. எழுநூறு பக்கத்துல பெரும்பாலும் விஷ்ணுபுர தாசிகள், அவங்க வீடு, வாழ்க்கைமுறை பத்தியே எழுதறார். பாவம் விஷ்ணு!

நாவலின் ஒரே பலம், ஜெயமோகனோட விறுவிறுப்பான நடை! ஒரு வரி கூட போரடிக்குதுன்னு தள்ளிட்டுப் போக முடியாது!

ஒட்டுமொத்தமா இது பத்தின அபிப்பிராயத்தை ஒரே வரியிலேயும் சொல்லலாம். அந்த வரியை ஜெயமோகனின் கேரக்டர் ஒண்ணே கதையில் இப்படிச் சொல்றது: "மண்ணில் கால் பாவாத வெற்றுக் கற்பனை இது." *(பக். 359)*

காதி கிராமோத்யக் பவன்ல ஒரு நவராத்திரி ஸ்பெஷல் கண்காட்சி பார்க்கப் போனேன். அழகழகா கொலு பொம்மைகள்.

கொலு, நம்மகிட்ட மிச்சமிருக்கற சில பழைய அழகிய அம்சங்கள்ல ஒண்ணு. பத்திரிகை, டீ.வி.ன்னு பொழுதுபோக்கு அம்சங்கள் இல்லாத காலத்துல, பெண்களின் கலை வெளிப்பாட்டுக்கு அந்த ten days ஒரு வடிகால்.

'மண்ணில் கால் பாவாத வெற்றுக் கற்பனை!'



நான் பார்த்த கண்காட்சியில் சில புதிய அம்சங்கள் இந்த வருஷம் சேர்ந்திருக்கறது தெரிஞ்சுது. காலேஜ் அட்மிஷன் செட், மஞ்சள் நீராட்டு விழா (ஆம்!) செட், பிள்ளையார்ஸ்' செட் etc.,

ஐடியாக்களில் இருக்கிற புதுமையும் அழகும் பொம்மைகளிலும் இருந்திருக்கலாம்! ரொம்ப அவசரமா டிசைட் பண்ணி, மோல்ட் எடுத்திருப்பாங்கன்னு நினைக்கறேன்.

“பொம்மை வாங்கற வழக்கம் ரொம்ப குறைஞ்சிட்டு வருது. இது மாதிரி ஏதாவது புதுசா ட்ரை பண்ணா மட்டும் ரெஸ்பான்ஸ் இருக்கு. விலையும் கட்டுப்படி ஆகறுமில்லை?”ன்னு கேட்டார் (முதல்ல, 'சேல்ஸ் பிரமாதம்'னு சொன்ன) விற்பனையாளர்.

அடுத்த வருஷம் ட்ரை பண்ண சில ஐடியாக்கள்:

பார்லிமென்ட்/சட்டசபை செட் (மைக், செருப்பு பறக்கிற காட்சிகளுடன்) அமெரிக்கன் கான்ஸுலேட் வாசல் செட் (க்யூவில் கல்லை வைத்துவிட்டுத் தள்ளிப்படுத்துத் தூங்கும் ஆண்களும் பெண்களும்), வாஜ்பாயி, மகாஜன், ஜெயலலிதா செட் (உணர்ச்சிகரமான முக பாவங்கள் முக்கியம்), காவிரி செட். (அகத்தியர் தொடங்கி, அம்மாவின் கடற்கரை உண்ணாவிரதக் காட்சிகள் வழியே கருணாநிதி வரை வரலாம்.)



தற்செயலாக சன் டி.வி.ல ரெண்டு கவிஞர்களோட பேட்டியை அடுத்தடுத்த நாட்கள்ல பார்த்தேன். வைரமுத்து, மேத்தா.

தன் பாடல்களுக்கு வியாக்கியானம் சொல்லிட்டு வந்த வைரமுத்து, “பெண்ணின் பெருமையை, சிறப்பை உணர்த்தும்” பாடலாக 'சொக்க வைக்கும் சோனியா'வைக் குறிப்பிட்டபோது தூக்கி வாரிப் போட்டது. 'எளிதான முத்தத்தில் சத்தே இல்லை, மெத்தைமேல் சைவத்தில் அர்த்தம் இல்லை'ன்னெல்லாம் உலக அழகி, பெண்ணின் பெருமையைப் பாடற சீன் உடனே! வாழ்க பெண்மை! வாழ்க கவித்துவம்!

மேத்தா தன் பேட்டில சினிமா உலக அகட விகடங்களைச் சொல்ல வந்து, சொல்றதா, வேணாமான்னு தவிச்சு, பின் வாங்கினது பார்க்க ரொம்பப் பாவமா இருந்தது. பேட்டி கண்ட பெண், “இப்ப ஏன் நீங்க நிறைய எழுதறதில்லை?”ன்னு கேட்க, கப்ஸா விடாம உண்மையைச் சொன்னார் மேத்தா. “யாரும் கூப்பிடலை; அதான் எழுதலை.”

'உண்மை கசப்பானதும் சோகமானதும் என்றாலும் உள்ளபடி வெளிப்படும் போது அழகானதாகி விடுகிறது'ன்னு எப்பவோ படிச்ச எமிலி டிக்கின்ஸன் வரிகள் ஞாபகம் வந்தது.

— சுமி

கல்கி தீபாவளி மலர் '98



வண்ணப்படம்: எம். அமிர்தம்

அமரர் கல்கியின் அருமையான நெடுங்கதை தொடங்கி, இன்று முன்னணியில் உள்ள எழுத்தாளர்கள் பலரது சிறுகதைகள் வரையில் அணிவகுத்து நிற்கும் படைப்புகள்; ராஜாஜியின் கட்டுரை, கவிதை மடல், கோகுலம், மங்கையர் மலர் பக்கங்கள்; இலக்கிய இணையர் இராம - இலக்குவர்; கடவுளரைக் குழந்தையாக்கும் கவிதை ரசாயனம்; கீதமும் கீதையும் - போன்ற ரசமான தலைப்புகளில் சிந்தனையாளர்கள் வழங்கும் கருத்துக் கோவைகள்...

இன்னும் வனவளம், விவசாயம், பொருளாதாரம், சினிமா என்று அனைத்துத் துறைகளிலும் புகுந்து சுவையான தகவல்களைத் திரட்டித் தரப் போகிறது உங்கள் அபிமான கல்கி தீபாவளி மலர்...

விலை ரூ 50/- மறவாமல் உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623;
Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)



கல்கி
KALKI 13.9.98
இலவச இணைப்பு
அமரர் கல்கியின் சிரிப்புக் கச்சேரி!

ஒன்பதாவது சாம்ராஜ்யம்

பாருங்கள்! இந்த ஆங்கிலேயர் கொஞ்சமும் விதரணை தெரியாதவர்கள், ஒரு காரியத்தைச் செய்வதற்கு நாள் கிழமை நட்சத்திரம் கிரஹம் ஒன்றும் அவர்கள் பார்ப்பதில்லை. அதையெல்லாம் பார்க்கும் நேரத்தில் காரியத்தையே செய்து முடித்து விடுகிறார்கள்! ராபர்ட் கிளைவ், வாரன் ஹேஸ்டிங்க்ஸ் ஆகியவர்கள் இந்தியாவுக்குப் புறப்பட்டபோது நாள் நட்சத்திரம் நல்ல வேளை பார்த்துக் கொண்டா புறப்பட்டார்கள்? அப்படிப் புறப்பட்டிருந்தால் நூற்றைம்பது வருஷம் ஆண்ட ராஜ்யத்தை இப்படி அகாரணமாகவும் அநாவசியமாகவும் கைவிட்டு விட்டுப் போகும்படி நேரிட்டிருக்குமா? சர்ச்சில் இப்போது 'லபோ' 'லபோ' என்று அடித்துக் கொள்கிறாரே, அதில் என்ன பிரயோஜனம்? ராபர்ட் கிளைவுக்கும் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கும் அவர் நாள் பார்த்துக் கொண்டு புறப்படும்படி சொல்லியிருக்க வேண்டும்! அப்போது பேசாமலிருந்து விட்டு, – பேசாமல் மட்டும் என்ன? பிறக்காமலே இருந்து விட்டு, – இப்போது சர்ச்சில் அலறுவதில் என்ன பிரயோஜனம்?

– கல்கி, ஜூலை 18, 1948

உபயகுசலோபரி

அனுமாருக்கு நமஸ்காரம். சீதா தேவிக்கு வணக்கம். இராமபிரானுக்குப் பக்தியுடன் நமது அஞ்சலி. அனுமாரும் சீதா தேவியும் இராம பிரானுமாகத் தீர்க்கமாக ஆலோசித்துச் சரியான சமயத்தில் சீதாதேவியின் கையில் கணையாழி



கிடைக்கும்படி செய்து அருளினார்கள். அவர்களுடைய நோக்கத்தை அறிந்து வால்மீகியும் கம்பரும் பொருத்தமான இடத்தில் கணையாழிப் படலத்தைப் பாடினார்கள். இந்தச் சுப சம்பவம் உங்கள் 'கல்கி'ப் பத்திரிகைக்கு ஏழாம் பிராயம் பூர்த்தியாகி, எட்டாவது வயது பிறக்கும் சுப தினத்தில் கொண்டாடு



வதற்கென்றே அந்தக் காலத்தில் நடந் திருக்கிறது! இவ்வளவு தீர்க்க திருஷ்டி யுடன் நடத்தப்பட்ட அருமையான காரியத்தை நாம் பாராட்ட வேண்டியது தானே? கணையாழிப் படலக் காட்சியை இந்த இதழ் அட்டைச் சித்திரமாக வெளியிட்டுப் பாராட்டியிருக்கிறோம். மேற்படி சம்பவத்தைப் பற்றிய 'கம்பர் தரும் காட்சி'யை ரஸிகமணி அவர்கள் திரும்ப விளக்கமாகப் படம்பிடித்துத் தந்திருப்பதை இந்த இதழின் உட்பக்கங்களில் காணலாம்.

– கல்கி, ஆகஸ்டு 1, 1948

அந்தப் பெயர் வேண்டாம்!

சில காலமாக அதிகமாய் வெளியில் வராமல் அடக்கமாயிருந்த சர்ச்சில் துரை திடீரென்று நம் முன் தோன்றி, "நான் தூக்குப் போட்டுக் கொள்ளப் போகிறேன்!" என்றார்.

"வேண்டாம்; துரைவாள்! கயிறு தாங்காது!" என்றோம்.

"இல்லாவிடில் உண்ணாவிரதமிருப்பேன்!" என்றார் சர்ச்சில்.

"அதெல்லாம் காந்திஜியும் அவருடைய பைத்தியக்காரச் சீடர்களும் செய்யும் வேலையல்லவா?" என்றோம்.

"இருப்பினும் பரவாயில்லை; தினம் ஆறு தடவை உண்ணாவிரதமிருப்பேன்!" என்றார்.

"தங்கள் சித்தம் எமது பாக்கியம்!" என்றோம்.

"மௌன விரதமும் சேர்ந்து அனுசரிப்பேன். தினம் ஒன்பது தடவை மௌன விரதமிருப்பேன்!" என்றார்.

"உமது விருப்பம் போல்!" என்று சொன்னோம்.


"இனிமேல் எலியைப் பிடிக்க மாட்டேன்; 'மியாவ்' கீதம் பாட மாட்டேன்!" என்றார்.

"சர்ச்சில் ஐயா! இது என்ன கோபம்? யார் செய்த அபசாரம்?" என்றோம்.

"எல்லாம் நீர் செய்த அபசாரந்தான்! இப்போது கூட அந்தப் பெயரைச் சொல்லி என்னை அழைத்திரல்லவா?" என்றார்.

"எந்தப் பெயருக்குத் துரைவாளின் ஆட்சேபம்?" என்று கேட்டோம்.

"சற்று முன் சொன்னீரே, அந்தப் பெயர்தான்! பார்லிமெண்டில் கேவலம் மௌனசாமி அட்லியிடம் சவுக்கடி



வாங்கிக் கொண்டாரே, அவருடைய பெயர்தான்! என்னுடைய பரம வைரிக்கு வைத்து அழைக்க வேண்டிய பெயரை எனக்கு வைத்திருக்கிறீரே?''

''அடாடா! 'சர்ச்சில்' துரையின் பெயரை உமக்கு வைத்ததற்காகவா இத்தனை கோபம்? முன்னேயெல்லாம் நீர் ஆட்சேபிக்கவில்லையே?''

''முன்னே அந்த மனுஷர் யுத்தம் நடத்திக் கொண்டிருந்தபோது பெயர் வைத்தீர்; பொறுத்துக் கொண்டிருந்தேன். யுத்தத்தில் ஜயித்தவராயிற்றே என்று அப்புறமும் பொறுத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்தப் பெயரை இனிப் பொறுக்க மாட்டேன். ஒரு நிமிஷமும் பொறுக்க மாட்டேன். பெயரை மாற்றி வைத்து விட்டு மறு காரியம் பார்க்க வேணும். ஜெனரல் வேவல் என்றாவது, ஸர் ஆர்தர் ஹோப் என்றாவது, காஸிம் ரஸ்வி என்றாவது பெயர் வைத்தாலும் பொறுப்பேன். சர்ச்சில் என்ற பெயரை

இனிப் பொறுக்க மாட்டேன். எது எப்படி இருந்தாலும் மனுஷன் கெட்டிக்காரன் என்றாவது இதுவரையில் ஒரு பிரமை இருந்தது. பேசத் தெரியாமல் பேசி, உளறத் தெரியாமல் உளறி, கேவலம் அட்லியிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடியதைப் பார்த்த பிறகு அந்தப் பிரமையும் நீங்கி விட்டது. சே! அந்த மனுஷன் பெயர் எனக்கு வேண்டவே வேண்டாம்! என்ன சொல்கிறீர்? பெயரை மாற்றுகிறீரா? அல்லது நாக்கைப் பிடுங்கிக் கொண்டு கையை அலம்பி விட்டு வரட்டுமா?'' என்று நமது காரியாலயப் பூனையார் புலி போலக் கர்ஜித்தார்.

இது பிடிவாதம் பிடிக்கும் சமயம் அல்ல, – விட்டுக் கொடுக்க வேண்டிய சமயம் என்று அறிந்து கொண்ட நாமும், ''சரி, சரி! அப்படியே உம்முடைய பெயரை மாற்றி விடலாம். புதுப் பெயர் மவுண்ட் பேட்டன் என்று வைக்கலாமா?'' என்றோம். பூனையார் ஒரு தடவை துள்ளிக் குதித்து, ''பண்டிட் மவுண்ட் பேட்டனுக்கு ஜே!'' என்று கோஷித்துக் கொண்டு, எங்கேயோ, 'கிறீச்' என்று கத்திய எலியைத் தேடிச் சென்றார்.

– கல்கி, ஆகஸ்டு 8, 1948.

சுதந்திரத் தலைநகரம்

குதுப் மினாரையும் அதைச் சுற்றியுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடிந்த கட்டடங்களையும் பார்த்துக் கொள்ள அங்கே ஒரு காவலாளி இருக்கிறான். அவன் அதி தீவிர ஹிந்து. அங்கே வருகிறவர்களுக்கெல்லாம் மேற்படி கட்டடங்களைப் பற்றிய உண்மை



யான விவரங்களை அவன் எடுத்துச் சொல்லி வருகிறான். பிரிதிவி ராஜனுடைய அரண்மனை இது. ஆஸ்தான மண்டபம் இது. அந்தப் புரம் இது என்றெல்லாம் எங்களுக்கு அவன் உணர்ச்சியோடு உருக்கமாகச் சொன்னான். பிறகு பிரிதிவிராஜன் கட்டிய கோயில்கள் இருந்த இடங் களை அவன் காட்டினான். கோயில் தூண்களையும், தூண்களில் பிரதி மைகள் இருந்த இடங்கள் மட்டும் காலியாக இருப்பதையும் காட்டி னான். சந்திரகுப்த விக்ரமாதித் தனுடைய பிரசித்தி பெற்ற இரும்பு ஸ்தம்பத்தை வெகு பெருமையுடன் சுட்டிக்காட்டினான். கடைசியாக எங்கே குதுப்மினாரை நாங்கள் பார்க்காமல் விட்டு விடப் போகிறோமோ என்று அதையும்

சுட்டிக்காட்டி, "தேக்கா?" என்றான்.

"கூப் தேக்கா!" என்றேன் நான். பிறகு, "இந்தக் குதுப்-மினாரை யார் கட்டியது? குத்புதீனா? அல்டமிஷா?" என்று கேட்டேன்.

உடனே அவனுக்குப் பிரமாத கோபம் வந்து விட்டது. 'ஜூட் பாத் ஹை!" என்று ஒரு போடு போட்டான்.

"ஜூட் பாத் ஹை?" என்று நானும் திருப்பிப் போட்டேன்.

"ஜரூர், ஜூட் பாத் ஹை!"

"ஜரூர், ஜூட் பாத் ஹை?"

ஹிந்தி பாஷையில் ஒரு சௌகரியம் உண்டு. வாக்கியத்தின் கடைசி வார்த்தையைக் கொஞ்சம் தூக்கிப் பிடித்து நிறுத்தினால் அது கேள்வியாகி விடும். ஆகையால் ஒருவன் சொல்வதை நாம் திருப்பிச் சொல்லிக் கொண்டே சம்பாஷணையை நடத்தி விடலாம்.

பிறகு அந்தக் காவலன் ஹிந்தியில் கூறியதற்கு உண்மையான மொழிபெயர்ப்பைக் கேளுங்கள் : – "குதுப்மினார் குத்புதீனால் கட்டப்பட்டாள் என்பது பொய் வார்த்தையாயிருக்கிறாள். அல்டமிஷினால் கட்டப்பட்டாள் என்பதும் பொய் வார்த்தையாயிருக்கிறவளேதான். குதுப் கோபுரம் உண்மையில் பிரிதிவிராஜனால் கட்டப்பட்டார்கள். பிரிதிவிராஜனுடைய குமாரியினால் இந்தக் கோபுரம் தினந்தினம் ஏறப்பட்டார்கள். கோபுரத்தின் உச்சியிலிருந்து பிரிதிவிராஜனுடைய மகள் யமுனா நதியைத் தரிசனத்துக்கு உள்ளாக்கிய பிறகு அவளால் மத்தியான போஜனம் சாப்பாட்டுக்கு உட்பட்டனள்!"

"பிரிதிவிராஜனுடைய குமாரி யமுனையைத் தரிசிப்பதோடு திருப்திக்கு உள்ளானாளா? அல்லது எப்போதாவது யமுனை

நதி அவளால் குளிக்கப்படுவதும் உண்டா?'' என்று நான் கேட்டேன்.

''சில சமயம் யமுனை குளிக்கப்படுவதும் உண்டு; வருஷத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவை யமுனை ராஜகுமாரியினால் குளித்தல் செய்யப்பட்டாள்!''

''யமுனைக்கு இங்கிருந்து ராஜகுமாரி எப்படிப் போவாள்?'' என்று கேட்டேன்.

''இல்லை; இல்லை! இராஜகுமாரி போக மாட்டாள். யமுனைதான் இங்கே வருவாள்!'' என்றான்.

''எப்படி வருவாள்?''

''சில சமயம் நடந்து வருவாள்; சில சமயம் குதிரை மேல் வருவாள்.''

''அப்புறம்?''

''ராஜகுமாரி குளிப்பதற்கு உள்ளானதும் திரும்பிப் போய்விடுவாள்!''

''யார்?''

''யமுனை!''

''பிரிதிவிராஜனுடைய குமாரி குளிப்பதற்கு எந்த சோப்பை உபயோகித்தாள் என்று நீ அறிந்திருப்பதுண்டா? 'லக்ஸ்' டாய்லட் சோப்பையா? பிரசித்தி பெற்ற சினிமா நட்சத்திரம் ஸ்ரீமதி கனமணி தேவி உபயோகிக்கும் 'ஹமாம்' சோப்பையா?''

''பிரிதிவிராஜனுடைய குமாரி குளிப்பதற்குச் சோப்பு உபயோகிப்பதில்லை. அவள் இமயமலையின் உறைந்த பனிக் கட்டியை உபயோகிப்பாள்.''

''பனிக்கட்டி இங்கே எப்படி வரும்?''

''சில சமயம் ஒட்டகையின் மேல் வரப்படுவான்; சில சமயம் டோங்கா வண்டியிலும் வருதலைச் செய்வான்!''

''வழியிலே பனிக்கட்டி கரைந்து போகாமலிருக்குமா?''

"அதெல்லாம் கரைய மாட்டான்; இப்போது மெஷின்களினால் செய்யப்படும் உபயோகமற்ற ஐஸ் கட்டி என்று எண்ணிணீரோ! இமயமலையில் உச்சிச் சிகரத்திலிருந்து வரும் குளிர்ந்த பனிக்கட்டி கரையவே கரைய மாட்டான்!"

"அதெல்லாம் இருக்கட்டும்; இந்தக் கோபுரத்தின் மேல் அரபு எழுத்து மாதிரி எழுதியிருக்கிறதே! பிரிதிவிராஜன் கட்டியவளான கோபுரமாயிருந்தால்...?"

"ஜூட் பாத் ஹை! சப் ஜூட் பாத் ஹை! பிரிதிவிராஜன் கட்டிய கோபுரத்தின் மேற்பக்கத்தைச் சுரண்டி விட்டுக் குத்புதீன் அரபு எழுத்துக்களை எழுதச் செய்து விடப்பட்டவனாயினான்!" என்றான் அந்தக் காவலன்.

இத்துடன் குதுப் மினார் கதையை நிறுத்திக் கொண்டு மேலே செல்கிறேன்.

– கல்கி, ஆகஸ்டு 15, 1948.



நீலன் சிலை சிரித்தது ஏன்?

"ஐயோ! நீலன் சிலை எங்கே?" என்ற கூககுரல் ஒரு நாள் இரவு சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் கேட்டது. வெகு காலம் இந்தக் கொடிய நீலன் சிலை மவுண்ட் ரோடு மத்தியில் காட்சியளித்ததும் ராஜாஜியின் ஆட்சியில் அதைப் பெயர்த்து எடுத்து மியூஸியத்தில் கொண்டு சேர்த்ததும் நேயர்கள் அறிந்ததே. அந்தச் சிலையைத் திடீரென்று காணோமென்றால் மற்றச் சிலைகளுக்கெல்லாம் திகில் உண்டாவது இயல்புதானே? அவைதான் அவ்விதம் கூக்குரல் எழுப்பின. நல்ல வேளையாகப் பொழுது விடிவதற்குள்



நீலன் சிலை திரும்பி வந்து யதாஸ்தானத்தில் அமர்ந்தது. அமர்ந்து சும்மா வாயை மூடிக்கொண்டு இருந்ததா? அதுதான் இல்லை! ''ஹாஹா ஹாஹா'' என்று பழைய மியூஸியம் கட்டடத்துக்கு ஆபத்து வரும்படியாகச் சிரித்தது. "எங்கே போயிருந்தாய்? என்ன பார்த்தாய்? எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று மற்றச் சிலைகள் சரமாரியாகக் கேள்விகள் கேட்டன. "நான் என்னமோ இந்த தேசத்து ஜனங்களைக் கொடுமைப்படுத்தியதாக என்னை இங்கே கொண்டு வந்து தள்ளினார்களே? இப்போது இவர்களுடைய காங்கிரஸ் ஆட்சி தஞ்சாவூரில் நடக்கும் இலட்சணத்தைப் போய்ப் பார்க்கட்டும்!" என்று சொல்லி விட்டு, நீலன் சிலை மறுபடியும் "ஹஹ்ஹஹ்ஹா'' என்று சிரிக்கத் தொடங்கியது.

– *கல்கி, ஜூலை 1, 1951.*

தமிழ் எழுத்துக்கு விமோசனம்!

தமிழ் எழுத்துக்கு ஒரு மாதிரி விமோசனம் பிறந்து விட்டது. சென்னை சர்க்கார் விமோசன உத்தரவு போட்டு விட்டார்கள்.

பிரஜா உற்பத்தியின் பெருக்கத்துக்கு அடுத்தபடியாக, சீர்திருத்தக்காரர்களுக்குக் கவலையை அளித்து வந்தது தமிழ் எழுத்துக்களின் பெருக்கம். ''இத்தனை எழவு எழுத்துக்களைக் கட்டிக் கொண்டு யார் மாரடிப்பது?" என்று அறிஞர் பலர் வேதனைப்பட்டார்கள். தமிழ் எழுத்துக்களை ஒரு வழியாகத் தொலைத்துத் தலை முழுகி விட்டு, இங்கிலீஷ் எழுத்துக்களையே தமிழ் மொழி எழுதுவதற்கும் வைத்துக் கொள்ளலாம் என்று கூடச் சிலர் சொன்னார்கள். ஆனால் இந்தப்

படுகொலை யோசனையைப் பலர் ஒப்புக் கொள்ளவில்லை. "பாவம்! தமிழ் எழுத்தும் இந்தப் பரந்த உலகில் இருந்து பிழைத்துப் போகட்டுமே? எதற்காக அடியோடு ஒழிக்க வேண்டும்?" என்று இரக்கப்பட்டார்கள்.

"சரி; அடியோடு ஒழிக்காவிட்டால் சில எழுத்துக்களைக் குறைக்கவாவது செய்யலாம். இத்தனை எழுத்துக்களை வைத்துக் கொண்டு நம்மால் சோறு போட்டுக் கட்டாது. இந்தக் 'கம்பாஸிடர்' களின் தொல்லை பெரிய தொல்லையாயிருக்கிறது!" என்று சொன்னார்கள். இப்படி வற்புறுத்திச் சொன்னவர்கள், முக்கியமாகத் தமிழ்த் தினப் பத்திரிகைகளின் அதிபர்கள். அதிக எழுத்துக்கள் தமிழில் இருப்பது 'லினோடைப்' முதலிய இயந்திர அச்சு வசதிகளை உபயோகிப்பதற்குத் தடை செய்கிறது என்பது இவர்களுடைய புகார். அந்தப் புகாரை ஓரளவு குறைக்கும் வகையில் இப்போது தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் சென்னை சர்க்காரால் ஒப்புக் கொள்ளப்பட்டு வெளியாகியிருக்கிறது.

அதன்படி இனி இ, ஈ குறிகள் உயிர் மெய்யெழுத்தோடு சேர்ந்து நம் பிராணனை வாங்காமல் தனிப்பட்ட பாகிஸ்தான்களாக நின்று நிலவும்.

இந்தச் சீர்திருத்தங்கள் அவ்வளவு புதுமையான, புரட்சிகரமான சீர்திருத்தங்கள் அல்ல.

இவற்றில் சில, பெரியார் இராமசாமியார் தமது வெளியீடுகளில் நெடுங்காலமாகக் கையாண்டு வரும் சீர்திருத்தங்கள்.

நமது "சுதேசமித்திரன்" பத்திரிகை சென்ற ஓராண்டுக்கு மேலாக மேற்படி எழுத்துச் சீர்திருத்தங்களை விடாப்பிடியாகக் கையாண்டு அவற்றின் சாதக பாத



கங்களைப் பொது மக்கள் உணரும்படி செய்து வந்திருக்கிறது.

சீர்திருத்தத்தின் பயன் என்னவென்று கேட்டால், இதுவரையில் தமிழ் எழுத்துக்களின் தொகை 133 ஆக இருந்தது. இனி 91 ஆகக் குறைந்து விடும். நாற்பத்திரண்டு தமிழ் எழுத்துக்களை ஒருமட்டுக்குத் தொலைத்துத் தலை



முழுகியாகி விட்டது!

உயிர் மெய்யெழுத்துக்களில் உ, ஊவுக்கும் தனிப்பட்ட குறியீடுகளை ஏற்படுத்தி யிருந்தால் இன்னும் முப்பத் திரண்டு எழுத்துக்களை ஒழித்துக் கட்டியிருக்கலாம்.

அந்தச் சீர்திருத்தத்தைப் பிற்காலத்துக்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள். பின்னால் வருகிறவர்களுக்கும் தமிழில் சீர்திருத்தம் செய்ய ஏதேனும் இடம் இருக்க வேண்டும் அல்லவா?

தமிழ் மொழி 'சீர்திருந்த மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்கும் பழைய மடிசஞ்சி பாஷை என்று இனிமேல் யாரும் பழி சொல்ல முடியாது. மகிழ்ச்சி! மகிழ்ச்சி!! மகிழ்ச்சி!!!

— *கல்கி, ஜூலை 15, 1951.*

பஞ்சாங்கத்துக்கு ஆபத்து!

இருந்தாலும், இந்த ஜவாஹர்லால் நேரு மிகவும் பொல்லாதவர்! ராஜரிஷி டாண்டனைத்தான் அப்படிப் பாடு படுத்தி வைத்தார் என்றால், பஞ்சாங்கத்தின் தலையிலுமா இப்படி ஒரே போடாய்ப் போட வேண்டும்? ஜோசியம், ஜாதகம், ராகு காலம், தியாஜ்யம், வாரசூலை - எல்லாவற்றையும் சேர்த்து இப்படி ஒரே தாக்கலாய்த் தாக்கியது தகுமா, முறையா, தர்மந்தானா?

செப்டெம்பர் 9உ இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் மூளும் என்று வடநாட்டில் சில ஜோசியர்கள் சொன்னார்களாம். "அதன்படி நடக்கிறதா என்று பாருங்கள்; அப்படி நடக்காவிட்டால் ஜோசியத்தை நம்பாதீர்கள்!" என்று நேருஜி மக்களுக்குப் போதித்திருக்கிறார்.

அழகாயிருக்கிறதல்லவா? ஹிந்துக்களின் ஜோசிய சாஸ்திரத்தைப் பொய்யாக்குவதற்காகவே ஜனாப் லியாகத் அலிகான் வேண்டுமென்று 9உ யுத்தம் ஆரம்பிக்காமலிருந்து விட்டார்! அது ஜோசிய சாஸ்திரத்தின் குற்றமா? பாகிஸ்தான் சூழ்ச்சியை ஊகித்துத் தெரிந்து கொண்டு, ஜோசிய சாஸ்திரத்தை மெய்யாக்குவதற்காக, பண்டித ஜவாஹர்லால் நேருவேனும் 9-ந் தேதி யுத்தம் ஆரம்பித்திருக்கக் கூடாதா? அப்படிச் செய்யாமல், கீழே தள்ளிய குதிரை குழியும் பறித்தது போல், ஜோசியத்தை அவர் தாக்குவது எவ்வளவு பொல்லாத்தனம்? நமது பேராசிரியர் காரசார சர்மாவைப் போன்றவர்கள் நேருஜியைப் பதிலுக்குத் தாக்கத் தொடங்கியிருப்பதில் வியப்பு

என்ன?

– *கல்கி, செப்டெம்பர் 23, 1951.*

பிடித்த பாட்டு

சங்கீதத்தின் பெருமையைப் பற்றி அடிக்கடி சில பெரியவர்கள் சொற்பொழிவாற்றுவதுண்டு. இப்பொழுது விக்டர் விச் ஸெராப் என்ற அமெரிக்க பியானோ வாத்தியக்காரர் ஒருவர். அரசியல் விஷயங்களில் கூட சங்கீதம் எவ்வளவு உபயோகமாயிருக்கும் என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். "ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியா போகும் போது 'சாசுவத இந்தியா' என்ற கீதத்தை அமைத்துப் பாடிக் கொண்டே போயிருந்தால், அவருடைய தூது வெற்றியடைந்திருக்குமே" என்று அநுதாபம் தெரிவிக்கிறார்.

சங்கீதத்தின் மூலம் இந்தியர்களின் இருதயத்தைக் கவர்ந்து இழுத்து பிரிட்டிஷாருடன் ஒன்றுபடுத்தும் காலம் தவறிவிட்டதென்று அந்த வாத்தியக்காரர் வருத்தப்படுவதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால் பிரிட்டிஷார் நமக்குப் பிடித்தமாகப் பாடக்கூடிய பாட்டு இன்னும் ஒன்றே ஒன்று பாக்கியிருக்கிறது. அது இந்தியாவில் அவர்களுடைய ஆட்சிக்கு மங்களம் பாடி விடுவதுதான்!

– *கல்கி, செப்டெம்பர் 1, 1942.*

வாசற்படி வில்லங்கம்

இந்த யுத்த காலத்தில் எந்தக் காரியத்தையும் சுலபமென்று நம்பிச் செய்ய முடிகிறதில்லை. திடீரென்று எதிர்பாராத வில்லங்கங்கள் வந்து சேர்ந்து



அதைர்யப்படுத்தி விடுகின்றன. பாருங்கள்! சென்ற 14-ம் தேதியன்று இந்திய சட்டசபை அங்கத்தினர்கள் வீட்டை விட்டுக் கிளம்பும்போது, "சட்டசபை ஆசனங்கள் இருக்கின்றன; நாமும் இருக்கிறோம்; ஒரு தூக்கம் சுகமாகப் போடலாம்" என்று குஷியாகத்தான் கிளம்பியிருப்பார்கள்! ஆனால் அந்த



ஆசைக்குக் கூட பெரிய இடையூறு வழியில் ஏற்படுமென்று அவர்கள் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?

அங்கத்தினர்கள் சட்ட சபையின் வாசலை அணுகிய போது, அங்கே அசம்பாவிதமாகச் சுமார் நூறு மாணவர்கள் – ஆண்களும் பெண்களுமாக – மறியல் செய்து கொண்டிருந்தார்களாம். அவர்கள் அழுத்தமாக வழியில் நின்று கொண்டு அங்கத்தினர்களை உள்ளே விட மறுத்தார்கள். நல்லவேளையாக அங்கத்தினர்கள் திடசித்தம் குலைந்து விடவில்லை. சிரித்துக் கொண்டே மறியல்காரர்களின் அணிவகுப்பைப் பிளந்து உள்ளே ஊடுருவும் அவசியம் ஏற்பட்டதாம். முதலில் அணிவகுப்பில் எங்கே இடுக்கு இருக்கிறதென்று தெரிந்து கொண்டு அங்கத்தினர்கள் உடம்பைத் திணித்துக் கொள்ள

முயன்றிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அச் சமயத்தில் ஸ்வாரஸ்யமான துள்ளல்களும் உருளல்களும் ஏற்பட்டிருக்க வேண்டும். கடைசியில் ஜயம் என்னவோ அங்கத்தினர்களுக்குத்தான்! இந்தச் சமயத்தில் போலீஸார் மாணவர்களைக் கைது செய்து கொண்டு போய் நெருக்கடியைத் தீர்த்தார்கள்.

சாந்த சிங்கின் கோபம்

மறுநாள் மறியல்காரர்களின் உபத்திரவம் இராதென்று அங்கத்தினர்கள் சட்டசபைக்கு வந்தபோது வேறு ஒரு வில்லங்கம் குறுக்கிட்டது. மறியல்காரர்களுக்குப் பதிலாக போலீஸ்காரர்கள் வாசலை அடைத்துக் கொண்டு நின்றார்கள்! சர்தார் சாந்தசிங் என்ற அங்கத்தினருக்கும் பிரமாத கோபம் வந்தது.

"நேற்றுத்தான் இடுக்கு வழியாக அவஸ்தைப்பட்டு உள்ளே நுழைந்தோம். இன்றைக்கு அந்த இடுக்குக் கூட இல்லையே. உள்ளே எப்படிப் போவது?'' என்று இரைந்தாராம்! கடைசியில் போலீஸ்காரர்கள் கொஞ்சம் விலகிக் கொண்டு இடுக்கைக் கொஞ்சம் பெரிதாக்கி அங்கத்தினர்களுக்கு வழி விட்டார்களாம்!

"போலீஸ்காரர்களைச் சபை வாசலில் நிறுத்த வேண்டிய அவசியம் என்ன? எங்களை உள்ளே விடாமல் அவமானப் படுத்தவா இப்படிச் செய்கிறீர்கள்?'' என்று சர்க்காரைப் பார்த்து சாந்த சிங் கோபமாகக் கேட்டாராம். எது எப்படியிருந்தாலும் இவ்வளவு கஷ்ட நிஷ்டூரங்களைப் பொருட்படுத்தாமல் சட்டசபையை அடைவதில் அங்கத்தினர்கள் காட்டிய உறுதியையும் விடாமுயற்சியையும் பாராட்டுகிறோம். எப்படியும் ஒரு நல்ல

தூக்கம் போட அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்குமென்று நம்புகிறோம்.

— *கல்கி, செப்டெம்பர் 20, 1942.*

கேட்டுப் பாருங்கள்!

ரேடியோ நிர்வாகிகள் அப்படியொன்றும் யுத்த முழக்கத்தினால் அடியோடு செவிடாய்ப் போய் விடவில்லை, பொதுஜன அபிப்பிராயம் சில சமயம் அவர்களுடைய செவியில் ஏறுகிறது என்பதற்கு அத்தாட்சி சமீபத்தில் கிடைத்தது. 12உ யன்று ஸ்ரீ டி. என். ராஜரத்தினம் பிள்ளையின் பாட்டை எதிர்பார்த்து ரேடியோவைத் திருப்பியவர்களில் ஒரு பகுதியார் ஏமாற்றமடைந்திருப்பார்கள்; இன்னொரு பகுதியார் ஏமாற்றமடையாமல், "இந்தக் காலத்தில் இது சகஜந் தானே?" என்று ஆறுதல் அடைந்திருப்பார்கள். ஆனால், எல்லாருமே, பதிலுக்கு ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமண்யம் பாடுகிறார் என்பதை அறிந்ததும் மகிழ்ச்சியும் வியப்பும் ஒருங்கே அடைந்திருப்பார்கள்.

இதிலிருந்து ஜி. என். பி.யை முதல்தர வித்வான் என்பதாக ரேடியோ நிலையத்தார் ஒப்புக் கொண்டு விட்டார்கள் என்று ஊகிக்கலாம். ரொம்பவும் சந்தோஷம்.

இம்மாதிரியே வெகுகாலமாக நாம் ரேடியோவில் கேட்காமலிருந்த இன்னொரு வித்வானின் பெயரைப் புது "வானொலி"யில் பார்த்த போது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிற்று. மாயவரம் ஸ்ரீ கோவிந்தராஜப் பிள்ளையைத் தான் குறிப்பிடுகிறோம். இவர்

செப்டெம்பர் 28உ மகாராஜபுரம் விசுவநாதய்யரின் ரேடியோக் கச்சேரிக்குப் பக்கவாத்தியம் வாசிக்கிறார். 30உ தனி பிடில் கச்சேரி செய்கிறார். வாத்திய சங்கீதத்தில் பாஷை பிரதானமில்லையென்றாலும், பல புதிய தமிழ்க் கீர்த்தனங்களை இவருடைய புரோகிராமில்



சேர்த்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

மகாராஜபுரம் கச்சேரி புரோகிராமில் "பார்த்துக் கடன் கொடுங்கள்" என்று ஒரு தமிழ்ப் பாட்டுக் காணப்படுகிறது! சென்னை சர்க்கார் வெளியிட்டிருக்கும் புதிய கடன் திட்டத்துக்கும் இந்தப் பாட்டுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று கருதுகிறோம்.

– கல்கி, செப்டெம்பர் 20, 1942.



எரிகிற நெருப்பில் எண்ணெய்!

வானுலகத்தில் தேவர்களும், முனிவர்களும் கூடினார்கள். பரமேசுவரன், மகா விஷ்ணு, பிரம்மதேவர், அக்கினி, வாயு, சூரியன், சந்திரன், இந்திரன் எல்லாரும் விஜயம் செய்தார்கள். நாரதர், அகஸ்தியர் முதலிய ரிஷிகளுடனே புத்தர், ஏசு, முகம்மது நபி ஆகிய தீர்க்கதரிசிகளும் வந்து சேர்ந்தார்கள். பூலோகத்தின் நிலைமையைப் பற்றிக் கலந்து யோசனை செய்தார்கள். புண்ணிய பாரத பூமியின் நிலைமையிலும் சிந்தை செலுத்தினார்கள். பாரத நாடு சுதந்திரம் இழந்து பராதீனப்பட்டிருப்பது தான் பூவுலகத்தின் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம் என்று தீர்மானித்தார்கள். தீர்மானித்து, இந்தியாவுக்குப் பூரண

சுதந்திரம் அளித்துவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தார்கள்.

இந்தச் சமயத்தில் வந்தார் மகானுபாவர் அமெரி. கண்களில் தீப்பொறி பறக்கச் சுற்றுமுற்றும் விழித்துப் பார்த்தார். "நீங்கள் எல்லாம் யார், ஐயா! இந்தியாவைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு என்ன பாத்தியதை?" என்று கேட்டார். "ஏன் திருதிருவென்று விழிக்கிறீர்கள்? பதில் சொல்லுங்கள்!" என்று கெடுபிடி செய்தார். தேவர்கள், முனிவர்கள் முதலியோர் அப்படியும் பதில் சொல்ல மாட்டாமல் மௌனம் சாதிக்கவே, கர்னல் அமெரி கர்ஜனை செய்ததாவது : –"ஜாக்கிரதை! இந்தியாவைப் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கெல்லாம் அதிகாரம் இல்லை. இந்தியாவைப் பற்றிய சர்வ அதிகாரங்களும் பார்லிமெண்டுக்குத்தான். பார்லிமெண்டுதான் இந்தியாவின் தலை எழுத்தை எழுதக்கூடியது. பார்லிமெண்டை மீறி இந்தியாவுக்கு எவ்வித சுதந்திரமும் கிடையாது; கிடைக்கப் போவதுமில்லை. கப்சிப்! கபர்தார்!"

இவ்விதம் எச்சரிக்கை செய்து விட்டுக் கர்னல் அமெரி போய்விடவே தேவர்களும் முனிவர்களும் தீர்க்கதரிசிகளும் சிறிது நேரம் முழித்தல் செய்து கொண்டிருந்தார்கள். பிறகு, அக்கினி தேவன் எழுந்து, "யாரப்பா இந்தப் பார்லிமெண்ட் என்ற அசுரன்? இதற்கு முன் கேள்விப்பட்டதில்லையே? இவனுடைய கர்வ பங்கத்துக்கு ஒரு வழி தேட வேண்டாமா?" என்றார்.

அதே சமயத்தில் வெளியில் உலகத்து மாந்தர்கள் வந்து "தேவர்களே! ரக்ஷிக்க வேண்டும்!" என்று முறையிடும் ஓலம் எழுந்தது.

வருங்காலத்தில் பாரத தேசத்தின்

சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிப் புராணம் எழுதுகிறவர்கள் மேற்கண்ட விதம் கதையை ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

– கல்கி, அக்டோபர் 10, 1942.

சிதம்பர பாகவதர் :
சித்திர ஸகிதம்

சென்னை என்று சொல்லுகிறதாக இருந்து கொண்டிருக்கப்பட்ட நகரத்தில், கோகலே ஹால் என்று சொல்லப்படும் படியான மண்டபத்தில், மாங்குடி பிரம்மஸ்ரீ சிதம்பர பாகவதர் என்பவராக இருந்து கொண்டிருக்கப்பட்டவர், "துரோபதி மான சம்ரக்ஷணம்" என்கிறதாக இருந்து கொண்டிருக்கப்பட்ட காலக்ஷேபத்தை நடத்தினார். அதற்கு நானாக இருந்து கொண்டிருக்கப்பட்டவன் போயிருந்தேன். பாகவதராகப்பட்டவர் அச்சமயம் சொன்ன கதையின் சாராம்சமாக இருந்து கொண்டிருக்கப்பட்டதாவது :-

"பஞ்ச பாண்டவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களாக இருந்து கொண்டிருக்கப்பட்டவர்கள், இந்திரப் பிரஸ்தம் என்பதாக இருந்து கொண்டிருக்கப்பட்ட இடத்தில், ராஜசூயம் என்று சொல்லப்படுகிறதான யாகத்தை நடத்த வேண்டுமென்பதாக இருந்து கொண்டிருக்கப்பட்ட சமயத்தில், சகல தேசத்து ராஜாக்கள் ஆகப்பட்டவர்களாக இருந்து கொண்டிருக்கப்பட்டவர்கள் விஜயம் செய்தார்கள்...."

இதற்கு மேல் ஓர் "இருந்து கொண்டிருக்கப்பட்ட" வந்தாலும், அச்சுக் கோப்பவர்கள் வேலையை நிறுத்தி விட்டு ஓடிப்

போர்வார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது! இது அநியாயந்தான். அன்றைய தினம் பாகவதராக இருந்து கொண்டிருக்கப்பட்டவரின் (அடேடே!) காலக்ஷேபத்தை நான் கேட்டபோது, கிருஷ்ணனாகப்பட்டவர் சிசுபாலனாகப்பட்டவனின் குற்றங்களை விரல் விட்டு எண்ணி வந்ததுபோல், நானும் அவர் கூறிய "ஆகப்பட்ட" "இருந்து கொண்டிருக்கப்பட்ட" இவைகளை எண்ணி வந்தேன். நூறுக்கு மேல் போனதும், நம்மால் இது முடிகிறதாக இருக்கப்பட்ட காரியமில்லை என்று விட்டு விட்டேன். அப்படியிருக்க, இந்தக் கம்பாஸிடர் ஆகப்பட்டவர்களுக்கு என்ன வந்தது என்று எனக்குக் கோபமாகப்பட்டது வந்தது.

ஆனால் கொஞ்சம் யோசித்துப் பார்த்ததில், "நமக்கோ 'ஆகப்பட்ட' 'இருந்து கொண்டிருக்கப்பட்ட' இவை





களுடன், அற்புதமான சங்கீதமும், ரஸமான கதையும், அபிநயமும், ஹாஸ்யமும் எல்லாம் கிடைத்தன. இந்தக் கம்பாஸிடர் தலையில் வெறும் 'ஆகப்பட்ட' 'இருந்து கொண்டிருக்கப்பட்ட' இவைகளை மட்டும் போட்டால் கோபம் வருவது சகஜந்தானே?'' என்று முடிவுக்கு வந்தேன்.

– **ஆனந்த விகடன்.**

மூர்ச்சையடைந்தார்கள்

சென்ற வாரத்தில் சென்னை மாகாணமெங்கும் - சர்க்கார் காரியாலயங்களிலும் டிராம் வண்டிகளிலும் பஸ்களிலும் பாதைகளிலும் வீடுகளிலேயும் கூட - அநேகர் பட் பட் என்று மூர்ச்சை போட்டு விழுந்தார்களாம்! அப்புறம் சர்க்கார் காரியம் நடக்க வேண்டுமே என்பதை முன்னிட்டுத் தாங்களாகவே மூர்ச்சை தெளிந்து எழுந்தார்களாம்! யாரா? வேறு யார்? பிரசித்தி பெற்ற என்.ஜி.ஓக்கள்தான்! அவர்களுடைய பஞ்சப்படி அலவன்ஸில் மாதம் இரண்டு ரூபாயும் நாலு ரூபாயும் எட்டு ரூபாயுமாகத் தரவாரியாய்ச் சென்னை சர்க்கார் உயர்த்திவிடப் போவதாகச் செய்தி வெளியிட்டார்கள் அல்லவா? என் ஜி.ஓ.க்கள் மூர்ச்சையடைந்ததற்கு மேற்படி செய்திதான் காரணம். சென்னை சர்க்காரின் தாராளம் அவர்களை அப்படித் திக்குமுக்காடச் செய்து விட்டது! - சென்னை சர்க்காரின் மேற்படி முடிவு வெளியான அதே சமயத்தில் அரிசி விலை துணி விலை முதலியவையும் ஏறியிருப்பது பற்றி என்.ஜி.ஓக்கள் சிறிது ஆறுதல் அடையலாம். ஏனென்றால் பொருள்களின் விலை உயர்ந்தால் விற்பனை வரியில் அதிக வருமானம் கிடைக்கும். வருமானம் அதிகமானால் சென்னை சர்க்காரின் தாராளம் இன்னும் கொஞ்சம் அதிகமாகலாமல்லவா?

- கல்கி, பிப்ரவரி 1, 1948.

சத்திய மூர்த்தி சாகரம்

பூண்டித் தேக்கம் வேலை முடிந்து

வருஷம் நாலுக்கு மேலே ஆனபோதிலும், 'சத்திய மூர்த்தி சாகரம்' என்ற பெயர் நிச்சயமான பிறகு தான் அதைப் பார்க்க வேணுமென்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. இரண்டு வாரத்துக்கு முன்னால் நண்பர்களின் கோஷ்டியுடன் சென்றிருந்தேன். அணைக்கட்டையும் அணைக்கட்டுக்கு அப்பால் தேக்கப்பட்டிருந்த ஜலத்திரளையும் பார்த்தேன். கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் அந்தக் காட்சியைப் பார்த்ததுமே தாகம் தீர்ந்து விட்டது. சுமார் 7000 ஏக்கரா விஸ்தீரணத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. நதி நடுவில் தண்ணீர் நிலையின் ஆழம் சுமார் 33 அடி என்று தெரிந்தது. இந்தத் தேக்கத்தின் காரணமாக இருபத்தேழு



கிராமங்கள் நீரில் மூழ்கிப் போயினவாம். மூழ்கிப் போன கிராமங்களில் வசித்திருந்தவர்களுக்குத் தகுந்த நஷ்டஈடு கொடுக்கப்பட்டதால் அவர்கள் சந்தோஷமாக வெளியேறி வேறு இடங்ளுக்குச் சென்று குடியேறி விட்டார்களாம்.

தண்ணீரில் மூழ்கிய கிராமங்களில் ஒன்றில் ஒரு பெரிய ஆலயம் இருந்தது; இப்போதும் இருக்கிறது. அதாவது கோயிலின் மேல் மண்டபம், கர்ப்பக் கிரஹ மண்டபம், ஸ்தூபி ஆகியவை தண்ணீருக்கு மேலே தெரிகின்றன. அந்தக் கோயிலில் வீற்றிருந்த இறைவன் தண்ணீரில் மூழ்கியது பற்றிக் கொஞ்சமும் கோபித்துக் கொள்ளவில்லையென்று அறிந்தேன். எல்லையில்லாத ஆழந் தெரியாத அலைமோதும் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டு நிம்மதியாகத் தூங்கும் பகவான் இந்த முப்பத்து மூன்று அடி ஆழமுள்ள நீர் நிலைக்கா பயப்பட்டு விடப் போகிறார்? ஒருநாளும் இல்லை. இங்கும் நிம்மதியாகத்தான் பகவான் இருப்பார். ஆனால் கிட்டப் போய்ப் பார்த்துவிட்டு வருவதற்கு எனக்குத்தான் வசதி இல்லை.

— கல்கி, பிப்ரவரி 15, 1948.

சங்கீத சதஸ்

"பூ என்றும் சொல்லலாம், புய்ப்பம் என்றும் சொல்லலாம், ஐயா சொல்லுகிற மாதிரியும் சொல்லலாம்' என்று தோட்டக்காரன் கூறியதாக ஒரு கதை உண்டு. அவன் கூறியது முழு உண்மை. பெயரை எப்படிச் சொன்னால் என்ன? பொருள் என்ன என்பது அவனுக்குத் தெரியும். அவன் நட்டு வளர்த்த செடியில் அரும்பு விட்டு மலரும் பொருள்தானே? அதைப் 'புஷ்பம்' என்று சமஸ்கிருதத்தில் சொல்ல

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392 /98* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka * Supplement to Kalki 13.9.98



முடியாததால் தோட்டக்காரனுக்கு ஒரு குறைவுமில்லை.

சங்கீத வித்வத் சபை விழாவின் கடைசி நாள் கூட்டத்தை 'ஸதஸ்' என்று அச்சபை நிர்வாகிகள் குறிப்பிடுகிறார்கள். அன்று சபைத் தலைவருக்குச் 'சங்கீத கலாநிதி' பட்டம் வழங்குகிறார்கள். பழைய பாரத நாட்டில் இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த பெயர் அது. பெயர் கம்பீரமாகத் தொனிக்கிறது. 'ஸதஸ்' என்று சொல்லுவதற்குக் கஷ்டமாயிருந்தால், 'சதசு' என்று தமிழகராதியில் உள்ளதைப் போல் சொல்லலாம். அதுவும் பிடிக்காவிட்டால், 'சபை' என்று சொல்லுவதில் குற்றம் இல்லை. ஏனெனில் இடம் அதே இடம், மேடை அதே மேடை, விஜயம் செய்தவர்களும் அதே மனிதர்கள்தான். நிகழ்ச்சி நிரலில் மட்டும் சிறிது வித்தியாசம் உண்டு. பாட்டுக் கச்சேரிக்குப் பதில் பேச்சுக் கச்சேரிகள்!

— ***கல்கி, ஜனவரி 11, 1953***

ஸ்ரீ

ஸ்ரீ ராம ஜெயம்

புரட்டாசி 4-ஆம் சனிக்கிழமை முன்னிட்டு

ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் லட்சார்ச்சனை மஹோத்சவம்

இடம் : ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் பேயாழ்வார் திருக்கோயில், மைலாப்பூர், சென்னை - 4.



புரட்டாசி 4-ஆம் சனிக்கிழமை முன்னிட்டு **9.10.98** முதல் **11.10.98** வரை. ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாளுக்கு 3 தினங்கள் லட்சார்ச்சனை மிக விமர்சையாக நடைபெறும்.

கட்டணம் ரூ. 45/- (லட்சார்ச்சனையில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பெருமாள் டாலர் வழங்கப்படும்.)

ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் விசேஷ திருமஞ்ஜனம்

11.10.98 ஞாயிறு பிற்பகல் 3-00 மணியளவில் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் மூலவர்க்கு 108 லிட்டர் பால், 108 லிட்டர் தயிர், 12 கிலோ தேன், 108 இளநீர், வாசனை திரவியங்கள், மஞ்சள் பொடி, பஞ்சாமிர்தம், சந்தனம் ஆகிய திரவ்யங்களை கொண்டு மகா அபிஷேகம் நடைபெறும். பக்தர்கள் இந்த விசேஷத் திருமஞ்ஜனத்தில் கலந்து கொண்டு சகல சௌபாக்கியங்களையும் பெறுவீர்களாக. கட்டணம் ரூ. 250, மற்றும் ரூ. 100.

இங்ஙனம்,
எஸ். ஸ்ரீரங்கராஜபட்டாசாரியார்.

முக்கியக் குறிப்பு :

ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் லட்சார்ச்சனை மற்றும் விசேஷ திருமஞ்ஜனத்திற்கு எம்.ஓ. காசோலை, டி.டி. அனுப்பும் பக்தர்கள்

எஸ். ஸ்ரீரங்கராஜபட்டாசாரியார்,
நெ. 5, கேசவப் பெருமாள் சன்னதி தெரு,
மைலாப்பூர், சென்னை - 4.

என்ற விலாசத்திற்கு தங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரம் கவனமாக தங்கள் முகவரி முதலியவற்றை விவரமாகக் குறிப்பிட்டு எழுதவும்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

